வெளியீடு : 9-4-2007

Issued : 9-4-2007

812
05Tx107

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 25, 2007—தொகுதி 20—எண் 1

Thursday the 25th January, 2007 Volume 20—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

| | பக்கங்கள் |
|---|---|
| 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி | 49-140 |
| திரு. வே. கண்ணன் | 63-68 |
| * திருமதி டி. யசோதா | 68-79, 88-91 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 82, 92-100, 103, 105-116 |
| திரு. இல. வேலுசாமி | 116-122 |
| * திரு. சி. கோவிந்தசாமி | 101,122-134 |
| திரு. கு. செல்வம் | 134-140 |
| 5. அரசினர் தீர்மானம்— | |
| விதி 32-ஐத் தளர்த்துதல் | 141 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 142-143 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மாபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227484
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

4. செய்தித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

**27. கால்நடை பராமரிப்புத்.. துறை அமைச்சர்** **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control and Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 22-1-2007 **அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.**

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுத்தீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி—I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)



86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்
87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி
108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்

109. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சையது கௌஸ் பாஷா, திரு. சை. .. மதுரை மத்தி
114. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
115. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
118. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
119. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
120. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
121. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
122. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
123. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
124. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
125. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
126. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
127. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
128. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
129. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
130. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)



131. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
132. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு
133. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
136. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
137. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
138. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
139. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
140. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி–2
141. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
142. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
143. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
144. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
145. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
146. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
147. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
148. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
149. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
150. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
151. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
152. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
153. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

154. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
155. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
156. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
157. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
158. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
159. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
161. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
163. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
164. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
165. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
166. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
167. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)
168. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
169. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
170. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
171. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
172. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
173. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
174. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்



177. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)
178. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
179. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
180. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
181. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
182. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
183. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
184. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
185. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
186. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
187. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
193. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-I
194. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
195. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
196. ராமச்சந்திரன், திரு. கா. - கூடலூர்
197. ராமநாதன், திரு. கே.வி. - பவானி
198. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
199. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

200. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்
201. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
202. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
203. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
204. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்–2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
222. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 11, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038
## 2007 ஜனவரி 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்*
*பொன்றாது நிற்பதொன் றில்"*

ஒப்பற்றதாகவும் அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை. (குறுக்கீடுகள்)

(கறுப்பு ஆடை அணிந்து அவைக்கு வந்திருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு கோஷமிடத் தொடங்கினர்.)

(கறுப்பு ஆடை அணிந்து அவைக்கு வந்திருந்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள், எல்லோரும். (குறுக்கீடுகள்) ரொம்ப அழகாக இருக்கிறது. உட்காருங்கள். உட்காருங்கள் எல்லோரும். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், நீங்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு பண்ணுகிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு பண்ணுகிறீர்கள். (கூச்சல்–குழப்பம்) நீங்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு பண்ணுகிறீர்கள்.

[2007 ஜனவரி 25

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே வெளியேறினர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. சு.ப. வேலுமணி ஆகியோர் மட்டும் வெளியேறாமல் தொடர்ந்து அவையில் நின்று கொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

அழகாக இருக்கிறது, அழகாக இருக்கிறது. (கூச்சல்-குழப்பம்) அவைக் காவலர்கள், (கூச்சல்-குழப்பம்) அவைக் காவலர்கள், (கூச்சல்-குழப்பம்) திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. சு.ப. வேலுமணி ஆகியோரின் பெயர்களை note பண்ணிக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இந்த ஆறு உறுப்பினர்களின் பெயர்களையும் note பண்ணிக்கொள்ளுங்கள். இந்த ஆறு உறுப்பினர்களின் பெயர்களையும் note செய்துகொண்டு, அவர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். போங்கள், போங்கள். அந்த ஆறு உறுப்பினர்களின் பெயரை மட்டும் note பண்ணிக்கொண்டு வெளியேற்றுங்கள் (குறுக்கீடுகள்) போங்கள், போங்கள் ரொம்ப அழகாக இருக்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. சு.ப. வேலுமணி ஆகியோர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 31, திரு. ஆர். சாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008



2007 ஜனவரி 25]

31—

## அணைக்கட்டு

*58—திரு. ஆர். சாமி:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலையடிவாரத்தில் விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் சிறிய அணை கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இத்திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலையடிவாரத்தில், விவசாயத்திற்குப் பயன்படும்வகையில் சிறிய அணை கட்டுவது குறித்து பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற பதிலுக்கு அந்தப் பகுதியினுடைய விவசாயிகளின் சார்பில், மதுரை மாவட்ட விவசாயிகளின் சார்பில், என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிலம்பாறு என்பது, உண்மையிலேயே சுற்றுலாத் துறையும் கவனத்திலே எடுத்துக்கொள்ளவேண்டிய ஒரு ஆறு. ஆற்றின் பெயரே ‘சிலம்பாறு’. ஆக, ஒரு சிலம்பு ஓசையே கேட்கும். அது தண்ணீர் எப்போதும் வரக்கூடிய பகுதி. அதைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வந்ததற்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. கோவை தங்கம்.

முற்பகல் 9–35

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியில், அர்த்தநாரிபாளையம்

[2007 ஜனவரி 25

ஊராட்சியில், விவசாயிகளுக்காக ஒரு பாலம் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் சொல்லியிருக்கின்றேன்; வெறும் 30 இலட்சம் ரூபாய்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், இது அழகர்கோவிலில் அணைகட்டுவது சம்பந்தப்பட்ட கேள்வி.

**திரு. கோவை தங்கம்:** அதேபோல, நெல்லித்துறை, மன்னம் பாலம்; 20 இலட்சம் ரூபாய் செலவில் இந்த இரண்டு பாலங்களையும் அமைத்துக் கொடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் குறிப்பிட்ட இரண்டு பிரச்சினைகள் குறித்து இன்று என்னிடத்திலே மனுக்களை அளித்திருக்கிறார்கள். அவற்றை இலாகாவிற்கு அனுப்பியிருக்கிறேன். குறைந்த அளவுதான் தொகை என்பதால், அதை விரைந்து கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை உறுப்பினருக்காக எடுக்கப்படும்.

**திரு. கோவை தங்கம்:** அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அழகர்கோவில் அணை திட்டத்தினால், ஏறத்தாழ இராமநாதபுரம், சிவகங்கை வரையிலும் தண்ணீர் பாய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இது சிறிய அணை என்று சொல்லியிருக்கிறீர்கள். இதை பெரிய அளவிலே கட்டுவதற்கு முயற்சி செய்யப்படுமா; எப்பொழுது இந்த வேலையை ஆரம்பிப்பீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்த மூலக் கேள்வி சம்பந்தமாகத்தானே கேட்கிறீர்கள் ? (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிறிய திட்டம்தான். இதனை நமக்கு நாமே திட்டத்திலேயே செய்துவிட வேண்டுமென்றுதான் அப்போது முடிவு



2007 ஜனவரி 25]

எடுத்தார்கள். 2003–2004–லே இதற்கு ஓர் ஆய்வை நடத்தி, இதற்காக 17 இலட்சம் ரூபாய்தான் செலவாகும்; இது ஒரு சிறிய அணை என்பதால், நமக்கு நாமே திட்டத்திலே செய்ய வேண்டுமென்று பார்த்தார்கள். ஆனால், அப்போது அதைச் செய்யமுடியவில்லை; அவர்கள் ஒத்துழைக்கவில்லை. ஆகையினால், இப்பொழுது இன்னும் கொஞ்சம் விரைவுபடுத்தி, பல கிணறுகளுக்கு source கொடுப்பதுபோலவும், அதேநேரத்திலே, என்னுடைய கணக்கு சரியாக இருந்தால், குறைந்தது 60, 70 ஏக்கர் நிலங்கள்தான் வரும். ஆனால், 2 terms–க்கு வரும். ஆகையினாலே, அதை நபார்டினுடைய உதவியோடு செய்யலாம் என்பதற்காக, மதுரையிலேயிருந்து Investigation Department அனுப்பி, அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அப்பணியை எடுப்பது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், தமிழகத்தில் உள்ள நீர்நிலைகள், போக்குகளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாததைத் திரும்பவும் கேட்கக்கூடாது.

**திரு. மு. அப்பாவு:** தொடர்புடையது. சம்பந்தமிருக்கிறது. தொடர்பிருக்கிறது, மணிமுத்தாறு. தமிழ்நாட்டிலுள்ள நீர்நிலைகள், போக்குகளைப்பற்றித் தெளிவாக அறிந்த காரணத்தினால், திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணைக்கட்டிலிருந்து நான்காவது reach வழியாக வறண்ட ராதாபுரம் பகுதிக்கு, 1989 ஆம் ஆண்டு குடிநீருக்காக 800 மில்லியன் கனஅடி தண்ணீர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், முதன்முதலாக அனுமதி அளிக்கப்பட்டு, தொடர்ந்து மணிமுத்தாறு அணை நிரம்பி வழிகின்ற காலங்களில், உபரியாக இருக்கின்ற தண்ணீரை அந்தப் பகுதிக்குக் குடிநீருக்காக வழங்குவது வழக்கம். அந்த அடிப்படையில், இந்த ஆண்டும் அதற்கான கோரிக்கையை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொடுத்திருக்கிறேன். இந்த ஆண்டும் அதற்குரிய அனுமதி அளித்து, சுவிசேஷபுரம், ஆயங்குளம் படுகை, ஆனைக்குடி படுகை, புத்தன்தருவை ஆகிய பகுதிகளுக்குத் தண்ணீர் தருவீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புவதோடு, அந்தக் கால்வாயைச் சரிசெய்து, ஐந்தாவது reach ஒன்றை ஆரம்பித்து,

[2007 ஜனவரி 25

அந்தக் கால்வாயின் இரண்டு புறங்களிலும் lining செய்து, தூர் எடுத்து, சரி செய்து தருவீர்களா என்றும் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு பாசனத்திலே, பாசனங்கள் நான்கு reach-களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே, நான்காவது reach–ல் வருகிற பகுதியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான்காவது reach–க்குத் தண்ணீர் போவது என்பதே மறந்துபோன ஒரு காலமாக இருந்தது. கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான், தண்ணீர் மிகையாக இருக்கிற காலத்திலே கொண்டு வந்து கொடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட புத்தன்தருவை வரை போவதற்காகத்தான்— நேற்றைக்கேகூட, நம்முடைய சாத்தான்குளம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன் அவர்கள்கூட அதுகுறித்து இந்த அவையிலே ஒரு கேள்வியை எழுப்பினார்கள்.—நான்காவது reach–லே தண்ணீரைக் கொண்டுவந்து நிறுத்தி, சுவிசேஷபுரத்திற்குக் கொண்டுவந்து, பட்டஞ்சேரி குளத்திற்குக் கொண்டுவந்து, விஜய அச்சம்பேட்டிற்குக் கொண்டுவந்து, பிறகு அங்கிருந்து கருங்குளத்திற்குக் கொண்டுவந்து, சுப்பிரமணியபுரம் கொண்டுவந்து, அதற்குப்பிறகு சிங்கவாடி குளத்திற்குக் கொண்டுவந்து, குருவிசுட்டான் குளத்திற்குக் கொண்டுவந்து, அதையடுத்து அப்பஞ்சிவிளைக்குக் கொண்டுவந்து, அதற்குப்பிறகு இறாலுக்குக் கொண்டுவந்து, ஏரல்தேரி வரையிலே கொண்டுவந்து, அதற்குப்பிறகு நேராக கொண்டுவந்து புத்தன்தருவையிலே விடுகிறோம். இதை நாங்கள் விட்டிருக்கிறோம்.

இன்றைக்கும் புத்தன்தருவையில், நெல்லை மாவட்டத்திலே பார்த்தால், புத்தன்தருவை, பொன்தருவை, மானூர் போன்றவை கடல் பாதி; கடம்பா பாதி என்று பெரிய பெரிய கண்மாய்கள் உண்டு. ஆனால், புத்தன்தருவைக்குத் தண்ணீர் என்பதே இல்லாமல் இருந்தபோது, அந்தப் பகுதிக்குக் கொண்டுபோய் நிறுத்தி, இந்த முறை கடல்போல் தண்ணீர் தேங்கியிருப்பதை, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன் அவர்கள் என்னிடத்திலே கொண்டுவந்து காட்டியபொழுது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. காரணம், அந்தப் பகுதியில் ஆடு மாடுகள்கூடக் கிடையாது. ஏனென்றால், அந்தப் பகுதியில் குடிப்பதற்கே உப்புத் தண்ணீர்தான் உண்டு. அதை மாற்றியமைத்திருக்கிறோம். எனவே, புத்தன்தருவை, பொன்தருவைக்கு சடையனேரி கால்வாய் வழியாகக் கொண்டு வருவது, ஒன்று.



2007 ஜனவரி 25]

இன்னொன்று, நீங்கள் குறிப்பிட்டது. இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறோம். பொதுவாக அவர்கள் நேற்றைக்குக்கூடச் சொன்னார்கள், சடையனேரியில் அதிகமான அளவு கொண்டுவர வேண்டுமென்று. அதையும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். மிகையான தண்ணீர் இருக்கிறபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது நிறைவேற்றப்படும்.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளுக்கு நீர் செல்கின்ற இடத்தில், ஆறுகளில் உள்ள மணலை எடுத்துவிட்ட காரணத்தினால், ஏரிக்கு நீர் செல்லும் கால்வாய்கள் மேடாகவும், ஆறு பள்ளமாகவும் இருக்கிறது. இதனால் ஆங்காங்கேயுள்ள ஏரி, கால்வாய்களுக்குத் தண்ணீர் செல்கின்ற பகுதிகளிலே தடுப்பணைகளைக் கட்டி, அந்த ஏரிகளை நிரப்ப, சுமார் 30, 40 ஏரிகளை நிரப்புகின்ற வகையிலே, ஆரணி, கமண்டல நாகநதியிலே தடுப்பணைகளைக் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுகளில் மணல் எடுத்தால்தான் கட்டடங்களுக்கு வரும். ஆனால், எடுப்பதற்கு ஓர் அளவு இருக்கிறது. இத்தனை அடி ஆழத்திற்குத்தான் எடுக்கலாம், இன்னின்ன இடங்களிலேதான் மணல் எடுக்க வேண்டுமென்று அரசு விதிமுறைகளைச் சரியாகக் கொடுத்திருக்கிறது. சில நேரங்களில் அதையும் மீறி, சிலர் ஆழப்படுத்தி எடுத்துவிடுகிறார்கள். அதற்கு எங்களுடைய அதிகாரிகளைக் கொண்டு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சிவானந்தம் அவர்கள் தொகுதியில், அப்படி மணல் எடுத்திருந்தால், இன்னின்ன இடங்களில் இப்படி ஆழமாக எடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால், 24 மணி நேரத்திலே நான் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜி.கே. மணி.

[2007 ஜனவரி 25

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய துறையின் மூலமாக பாசனத் திட்டங்களையெல்லாம் முழுமையாக நன்றாக அறிந்து, தன்னுடைய விரல் நுனியிலே வைத்திருப்பவர். அதற்காக அவரைப் பாராட்டுகிறோம். இன்று பொதுப் பணித் துறையின் மூலமாக கேட்டவற்றையெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருக்கிற வள்ளலாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில், தமிழகத்தினுடைய நெற்களஞ்சியத்தை உண்டாக்குகிற மேட்டூர் அணை, மேட்டூர் தொகுதியிலே இருக்கிறது. ஆனால், மேட்டூர் தொகுதிக்கு முழுமையாகப் பாசன வசதி இல்லை. சிறிதும் பாசனம் பெறாத பகுதியாக, வறண்ட பகுதியாக, மேட்டூர் தொகுதி இருக்கின்றது. மேட்டூர் தொகுதியையொட்டி, தோணிமடுவு என்ற ஆறு இருக்கிறது. மிகப்பெரிய ஆறு, காட்டாறு. மழைக் காலங்களிலே வெள்ளம் அதிகமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்த தோணிமடுவு திட்டத்தை நிறைவேற்றினால், கொளத்தூர் ஒன்றியப் பகுதி, முழுமையாகப் பாசன வசதி பெறும். அது, திட்டமிடப்பட்டு நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கிற திட்டம். ஆகவே, தோணிமடுவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா? நடப்பாண்டில் மீண்டும் பழைய திட்டத்தை ஆய்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியமான ஒரு திட்டம், அவருடைய தொகுதியிலே இருப்பது, துணைக் கேள்விக்குத்தானா வந்தது? அதைப் பெரிய கேள்வியாகப் போட்டிருக்க வேண்டாமா? Call Attention–லே கொண்டு வந்திருக்க வேண்டாமா? அது மாதிரி செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**32—**

## தனி வட்டம்

***10213—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியை மையமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2007 ஜனவரி 25]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பகுதியைத் தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று, கடந்த 20 ஆண்டுகளாக வற்புறுத்தி வருகின்றோம். 2000 ஆம் ஆண்டில், இன்றைய முதல்வர் அவர்கள் கறம்பக்குடிக்கு வந்தபோது, அவர்களிடத்திலே இந்தக் கோரிக்கையை வைத்தபோது, மக்கள் கணக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, ஆகவே, மக்கள் கணக்கெடுப்பு முடிந்தவுடன் இதைப் பரிசீலிக்கிறோம் என்று அன்றைக்கு அறிவித்து வந்திருக்கிறார்கள். தொடர்ந்து நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், தொகுதி எல்லை வரையறை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, அதற்குப் பிறகுதான் இதைப் பரிசீலிக்க முடியும் என்று இங்கே பல நேரங்களில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதைத் தெரிந்துதான் நானும் ஒரு கேள்வியை இங்கு எழுப்பியிருக்கின்றேன். ஆக்வே, அப்படி நடக்கின்றபோது, கறம்பக்குடி பகுதியைத் தனித் தாலுகாவாக ஆக்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல கறம்பக்குடி, ஆலங்குடி இந்த இரண்டு ஒன்றியங்களுக்கும் சேர்த்துதான் ஒரு வட்டம் தற்சமயம் இருந்துவருகின்றது. இதிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்ற அடிப்படையான ஜனத்தொகை மற்றும் வருவாய் கிராமங்கள் இவை பொருத்தமாக இருக்கின்றன. ஆனால், ஒரு வட்டம் அமைக்கின்றபொழுது குறைந்தபட்சம் இரண்டு ஒன்றியங்களாவது இருக்கவேண்டும் என்பதை நாம் தமிழக அளவிலே பொதுவாகக் கடைப்பிடித்து வருகின்றோம். ஆனால், இது ஒரு தனி ஒன்றியம்தான். ஒரு வட்டம் அமைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. காரணம், இதிலே ஆலங்குடிக்கும், கறம்பக்குடிக்கும் இருபது கிலோ

மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஓரேயொரு ஒன்றியம்தான் இதிலே இடம் பெறுகின்றது. அது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், அவர் சொன்னதைப்போல எல்லை வரையறை ஆணையத்தினுடைய பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. இன்னும் ஒரு மாதத்திலோ அல்லது இரண்டு மாதங்களிலோ முடிந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது அதிகமான பரப்பளவு கொண்டுள்ளதால் பரப்பளவும் அதிலே ஒத்து வருகிறது. 250 கிலோ மீட்டருக்கு மேலே வருகிறது. பணிகள் முடிந்த பிறகு பிரத்யேகமாக இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன பதில் திருப்தியளிக்கின்றது. அதேநேரத்தில் ஆலங்குடிக்கும், கறம்பக்குடிக்கும் 20 கிலோ மீட்டர் தூரம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினுடைய கடைசி எல்லையிலிருந்து ஆலங்குடிக்கு வருவதென்றால் 50 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். அதேநேரத்தில் இரண்டு ஒன்றியங்களாவது இருக்கவேண்டும் என்கின்ற வகையில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்கள் மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தாலுகா; கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தாலுகா, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தாலுகா, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தாலுகா என்று ஊராட்சி ஒன்றியத்தின் அளவிலேயே தாலுகாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஓர் ஒன்றியத்திற்கு தாலுகா இருப்பது அரசின் கவனத்திற்கு நன்றாகத் தெரியும். மேலும், கிராமங்களுடைய அடிப்படையிலே இதுபற்றி சிறப்புக கவனமாக அரசு பரிசீலிக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ் சமுதாயத்தினுடைய தலைவர், தானைத் தலைவர் அவர்கள் நிருவாக நலன் கருதியும், மக்களுடைய பிரச்சினைகளுக்கு விரைந்து பரிகாரம் கிடைக்கின்றவகையிலும் பல மாவட்டங்களை, வட்டங்களைப் பிரித்திருக்கின்றார்கள். சென்னையைத் தவிர, தமிழ்நாடு முழுவதும் ஒரு தொகுதிக்கு ஒரு வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. சென்னையில் மட்டும் மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஓரேயொரு வட்டாட்சியர் அலுவலகம் மட்டும்தான் இருக்கிறது. பொதுமக்கள் சான்றிதழ்கள் பெற்றிடவும், அரசினுடைய சாதனைகள், உதவிகள் பெறவும் காலதாமதமாகின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் 14 தொகுதிகளுக்கும் 14 வட்டாட்சியர் அலுவலகம் அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் அமைவதற்கு குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டர் இருக்கவேண்டும் என்பதை அடிப்படையாக வைத்து வட்டங்கள் அமைக்கப்படுகின்றன. நம்முடைய சென்னை மாநகரைப் பொறுத்த அளவில் சுற்றளவு எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் பார்த்து—14 தொகுதிகளுக்கும் 14 வட்டங்கள் அமைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லுகின்றார்கள்.—சுற்றளவைக் கணக்கிடுகின்றபொழுது குறைவாகத்தான் இருக்கும், அதற்கேற்றாற்போல அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதி என்பது மொடக்குறிச்சி ஒன்றியமும், கொடுமுடி ஒன்றியமும் சேர்ந்தது. இப்பொழுது ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்திலே இயங்கி வருகிறது. அந்தப் பகுதியிலே தனியாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் வேண்டுமென்று நீண்ட நாளைய கோரிக்கையாக நாங்கள் வைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, கொடுமுடி என்பது கிட்டத்தட்ட ஈரோட்டிலேயிருந்து 40, 45 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது.

[2007 ஜனவரி 25

10 கிலோ மீட்டர் என்கின்றபோது அந்தப் பகுதியிலே சுற்றியிருக்கின்ற ஒன்றியங்களையும் சேர்த்து ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கின்ற செயற்குறிப்பு இருக்கிறதா என்று அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை இணைத்து ஒரு வட்டம் அமைப்பது என்பது சம்பந்தமாக நிச்சயம் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையிலும், அதேசமயத்திலே காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் இப்போது அதிகமாக மக்கள் தொகை கொண்ட மாவட்டங்களாக இருக்கின்றன. எங்களுடைய செங்கற்பட்டு பகுதியிலே இருக்கின்ற மக்களின் நீண்டநாள் கோரிக்கையான செங்கற்பட்டினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்க அரசு முன்வருமா என்பதையும், அதேபோன்று நம்முடைய டாக்டர் கலைஞர் ஆட்சியில், முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்தினை புதிய மாவட்டமாக அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு அதிகாரிகளை நியமிக்கவும், அதற்கான அலுவலகம் கட்டவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல மாவட்டம் அமைப்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியிலே வாழ்கின்ற மக்கள்



2007 ஜனவரி 25]

பேரணாம்பட்டிலிருந்து குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்வதென்றால், 30 கி.மீ. தூரத்தில் உள்ள குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், அதேபோல இந்தப் பகுதியில் இருக்கின்றவர்கள் வாணியம்பாடி பகுதியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவேண்டுமென்றால் 30 கி.மீ. தூரம் செல்லவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு பேரணாம்பட்டினைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து தனிக் கேள்வி எழுப்பினால் அதற்குரிய சரியான பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**33—**

### பெண் மருத்துவர்

***2968—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு மக்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதலாகப் பெண் மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 விழுக்காட்டிற்கு மேல் பெண் மருத்துவர்கள் உள்ளதால் கூடுதலாகப் பெண் மருத்துவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

[2007 ஜனவரி 25

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி அரசு மருத்துவமனையில் அரசு டாக்டர்களும் மற்றும் ஏனைய தொழில்நுட்ப உதவியாளர்களும் இதுவரையில் அங்கே எந்தக்காலத்திலும் போதுமான அளவிற்கு நிரப்பப்படாமல் இருக்கிறார்கள். இப்போது சமீபத்தில் தமிழகம் முழுவதும் ஒருவிதமான காய்ச்சல் ஏற்பட்டு அதிகமான பேர் பாதிப்பிற்குள்ளான பகுதி என்னுடைய பண்ருட்டி பகுதி. அங்கே ஒரு மருத்துவர் மட்டும் பணியில் இருக்கிறார். ஒரு நாளைக்கு மூவாயிரம் நோயாளிகள் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வந்தால் ஒரு மருத்துவரால் அங்கே போதுமான சிகிச்சை அளிக்க முடியாத காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த வட்டார மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்களையும், உதவியாளர்களையும் நியமிப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து என்னிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று D.M.E. அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றேன். அதுபோக, அரசாங்கத்திலிருந்து ஏறத்தாழ 900 டாக்டர்களை நியமிக்க வேண்டிய ஒரு கோப்பு இப்போது பரிசீலனையில் இருக்கிறது. குறுகிய நாட்களில் நாங்கள் மருத்துவர்களை நியமிக்க இருக்கிறோம். அப்படி நியமிக்கிற நேரத்தில், தமிழ்நாட்டிலே ஏழு, எட்டு மாவட்டங்களுக்கு டாக்டர்கள் போவதில்லை. குறிப்பாக உங்கள் மாவட்டமும், ஒன்று. நீலகிரி மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம் என்று சில குறிப்பிட்ட மாவட்டங்களில் டாக்டர்கள் பணியில் சேர்ந்துவிட்டு விடுப்பில் சென்றுவிடுகிறார்கள். ஆகவே, கவுன்சிலிங்கில் என்ன செய்கிறோம் என்று சொன்னால், எந்த மாவட்டத்திலே 10 சதவிகிதத்திற்கு அதிகமாக மருத்துவர்களுடைய காலியிடம் இருக்கிறதோ அந்த மாவட்டத்திலே மட்டும்தான் இப்போது மருத்துவர்களை நிரப்புகிற பணியை நாங்கள் எடுத்திருக்கிறோம். இன்னொன்று, 10–15 வருடங்களாகவே, மருத்துவர்களுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்படாமலேயே இருந்திருக்கிறது. படுக்கைகளின் எண்ணிக்கை கூடியிருக்கின்றது. மருத்துவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. ஆனால், அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் நாங்கள் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.



2007 ஜனவரி 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரம், மருத்துவ வசதி ஆகிய மிக இன்றியமையாத வசதிகளை கிராமப்புறங்களிலே செய்துதரவேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. தாலுகா மருத்துவமனைகளிலும், கிராம ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அநேக இடங்களிலே பெண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால், அங்கே போகின்ற பெண்கள் தங்களுடைய சிகிச்சைகளுக்கு மிகவும் கஷ்டப்படுகிற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதிலும் குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சில பெண் மருத்துவர்கள் சில மருத்துவமனைகளிலே போய் சேர்ந்துவிட்டு உடனடியாக விடுப்பு எடுத்துக்கொண்டு போய்விடுகின்ற காரணத்தினால் பல தாலுகா மருத்துவமனைகளிலும், பல அரசு மருத்துவமனைகளிலும், பல ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பெண் மருத்துவர்களே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மேலும், தாலுகா மருத்துவமனைகளிலே ஒரு கண் டாக்டர், ஒரு பல் டாகடர் அவசியமாக இருக்கவேண்டும் என்பதை ஏற்கெனவே பலமுறை சுட்டிக்காட்டியும்கூட, அநேக தாலுகா மருத்துவமனைகளிலே கண் டாக்டரும் இருப்பதில்லை, பல் டாக்டரும் இருப்பதில்லை.

முற்பகல் 9–55

இரண்டாவது, கடந்த ஆட்சியின்போது மருத்துவமனைகளைச் சுத்தம் செய்யவேண்டிய பணியை சில சங்கங்கள் என்று தனியார்களுக்கு ஒப்படைத்து, அவர்கள்—உதாரணமாக கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலே இருக்கின்ற சுகாதாரப் பணியை மதுரையிலே இருக்கின்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்தவர்கள்—எந்தவிதமான கூட்டுறவு நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல், ஏதோ தனியார் 3, 4 பேர்களை அங்கே வேலைக்கு வைத்துவிட்டு, ஒன்றாம் தேதி, ஒன்றாம் தேதி அரசு மருத்துவமனையிலிருந்து சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, இவர்களை ஏதோ bonded labour போல, தொழிலாளிகளாக வைத்துக்கொண்டு, அதில் இவர்களுக்கு ஒரு Commission எடுத்துக் கொண்டு சம்பளம் என்று அந்தத் தொழிலாளிகளுக்குக் கொஞ்சம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிலும் கடந்த 10 மாதங்களாக, 12 மாதங்களாக என்னுடைய கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலே வேலை

பார்க்கின்ற சுகாதாரப் பணியாளர்களுக்கு சம்பளமே கொடுக்காமல், அவர்கள் சம்பளம் வாங்காமல் தினசரி வேலை பார்க்கின்ற அந்த மிகப் பெரிய கொடுமை கடையநல்லூர் மருத்துவமனையில் நடந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிடம் அந்தத் துப்புரவுப் பணியை ஒப்படைக்கின்ற அந்த ஒழுங்கீனமான, ஊழலுக்கு வழிவகுக்கின்ற முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அதற்கு முழுநேர சுகாதார சிப்பந்திகளை நியமிக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்த பல் மருத்துவத்திற்கு T.N..P.S.C.-யிலே selection ஆகி, நேற்றிலிருந்து interview நடந்துகொண்டிருக்கிறது. முடிவு வந்த உடனேயே எல்லா தாலுகா மருத்துவமனைகளுக்கும் ஒரு டாக்டர் வீதம் நாங்கள் போடவிருக்கிறோம். குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. Out-sourcing என்று சொல்லி, போன ஆட்சிக் காலத்திலே போட்டிருக்கிறார்கள். அவர்கள் 900 ரூபாய் சம்பளத்திற்கு ஆள் போட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு 7 மாதம், 8 மாதம் சம்பளம் கொடுக்காமல், பாதி பேர் வந்தும், வராமலும் இருக்கிறார்கள். நாங்கள் அங்கே போய் check பண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே, இந்த 900 ரூபாய் சம்பளக்காரர்களுக்கு சம்பளம் வராத காரணத்தினாலேதான் அங்கே ஊழல் நடக்க வசதியாக இருக்கிறது என்ற ஒரு காரணம் இருக்கிறது. இப்பொழுது அதிலே பாதி பேரை regular ஆக fill up பண்ணச் சொல்லி அரசாங்கம் உத்தரவிட்டு, இப்பொழுது நேர்முகத் தேர்வு நடக்க இருக்கிறது. மீதிப் பேர்களை அன்றாடம் சம்பளம் அதிகமாகக் கொடுத்து, அவர்களை வைத்துக்கொள்வதற்கு நம்முடைய துறையிலேயிருந்து சம்பளம் கொடுப்பதற்கு வேண்டிய வேலைகளையும் செய்துவைத்திருக்கிறோம். இருக்கிற யாரையும் வெளியிலே அனுப்பாமல், அதில் தகுதியுள்ள நபர்களை மருத்துவமனைகளிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவுகளைப் புதிதாக நாங்கள் இடவிருக்கிறோம். ஆனால், பாதிப் பேருக்கு interview வைக்கச் சொல்லி அரசாங்கத்திடமிருந்து உத்தரவு போய் இருக்கிறது. Out-sourcing-ஐ முழுமையாக நாங்கள் எடுத்துவிடப் போகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற வேளையில், 900 மருத்துவர்களை நியமனம் செய்ய இருப்பதாகச் சொன்னார்கள். ஆனாலும்கூட, இன்று அரசு மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் மருத்துவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அப்படி நீங்கள் நியமனம் செய்தாலும்கூட, அவர்கள் உடனடியாக விடுப்பிலே சென்றுவிட்டு, சில காலம் கழித்து மாறுதல் வாங்கிச் சென்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே கிராமப்புறங்களிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில், சில வட்ட மருத்துவமனைகளில் முழுமையான மருத்துவர்கள் இல்லாத நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் போக்கக்கூடிய வகையில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எத்தனை மருத்துவர்கள்; வட்ட மருத்துவமனைக்கு எத்தனை மருத்துவர்கள்; மாவட்ட மருத்துவமனைகளுக்கு எத்தனை மருத்துவர்கள் என்றும், அதிலே பல் மருத்துவர், எலும்பு முறிவு மருத்துவர், கண் மருத்துவர் என்றும் பல விதிமுறைகளை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அந்த அடிப்படையில் முழுமையாக இந்த அரசு இந்த ஆண்டில் மருத்துவர்களை நியமனம் செய்வீர்களா? அப்படி நியமனம் செய்யப்பட்ட பிறகு மாறுதல் இல்லாமல் அங்கேயே பணியாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டிலே ஓரளவிற்கு உண்மை இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. அதற்குக் காரணம், அதிகப்படியான மருத்துவர்களை நியமிக்காதது ஒன்று. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபொழுது 2 ஆயிரம் vacancies அந்தத் துறையிலே மருத்துவர்கள் மட்டும் வேண்டியிருந்தது. அதிலே 1,350 பேரை நாங்கள் போட்டிருக்கிறோம். போட்ட பிறகு என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், அங்கே போய் join பண்ணிவிட்டு, leave போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். Counselling-லே இப்பொழுது நாங்கள் புதிதாக என்ன சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், join பண்ணினால் இரண்டு வருடத்திற்கோ, ஒரு வருடத்திற்கோ transfer கேட்கக்கூடாது என்று சொல்லி புதிதாக ஒரு விதிமுறையை நாங்கள் உண்டாக்கி இருக்கிறோம். ஏனென்று சொன்னால், join பண்ணி போன உடனேயே, யார் யாரையோ சிபாரிசு பிடித்து கொண்டுவந்து, வெளியே போகின்ற வேலை நடந்து கொண்டிருக்கிறது. Promotion கொடுத்தாலும் அதே

[2007 ஜனவரி 25

நிலைதான். உதாரணத்திற்கு, சென்னையிலே இருந்து ஒருவர் promotion ஆகி வேலூருக்குப் போகிறார்; வேலூரிலே போய் 2 மாதம் இருந்தவுடனேயே திருப்பி re-counselling-லே அவர்கள் seniority-லே மறுபடியும் சென்னைக்கு வந்துவிடுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லி இப்பொழுது கடுமையாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, போய் join பண்ணிய பிறகு ஒரு வருட காலத்திற்கு யாரும் counselling-க்கு வரக்கூடாது; அங்கேயேதான் இருக்க வேண்டும் என்ற உத்தரவையும் சொல்லியிருக்கிறோம். இன்னொன்றுகூட இரண்டு தினங்களுக்கு முன்பாகப் பேசி இருக்கிறோம். அவர்கள் leave எடுத்தால், அந்த leave-ஐக்கூட கணக்கில் சேர்க்க வேண்டும்; service ஒரு வருடம் இருக்க வேண்டும் என்று சொல்லி, கடுமையான உத்தரவை இட வேண்டுமென்று நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம். இன்னொன்று இந்தத் துறைக்கும், வேறு துறைக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு B.D.O.-வையோ, போலீஸ்காரரையோ, யாரையாவது ஒருவரை suspend பண்ணிவிட்டால், எம்.எல்.ஏ. வீட்டிலோ, மந்திரி வீட்டு வாசலிலோ நிற்கிறார்கள். ஆனால், இவர்களை சஸ்பெண்ட் பண்ணினால், சந்தோஷமாக ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு, காலையிலிருந்து ஊசி குத்தப் போகிறார்கள், அரை சம்பளத்தோடு போய் விடுகிறார்கள். ஆகவே, அவர்களைத் தட்டிக்கொடுத்து, மிரட்டி இரண்டு விதங்களிலும்தான் வேலை வாங்க வேண்டியிருக்கிறது. அந்தப் பணியை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையோடு இணைந்த ஒரு கேள்வி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுக்காக. ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதற்கு, 5,000 மக்கள் தொகை இருந்தால் அந்தப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்... (குறுக்கீடு) துணை சுகாதார நிலையம் என்று ஏற்கெனவே ஒரு norms அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எங்களது திருப்பூர் தொகுதியிலே 50,000 பேர் வசிக்கக்கூடிய பகுதியில்கூட, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்கூட இல்லாத பகுதிகள் நிறைய இருக்கின்றன. அரசினுடைய



2007 ஜனவரி 25]

வழிகாட்டுதலின்படி, இன்னும் 10 இடங்களில் குறைந்தபட்சம் சுகாதார நிலையங்கள் உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த அளவுக்குக் கூடுதலான மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், அவர்களுக்குரிய மருத்துவ வசதி கிடைக்க, அந்தக் கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தங்கள் துறையின்மூலம் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 ஜனத்தொகை இருக்கிற இடத்திற்கு ஒரு P.H.C. கொடுக்கிறோம்; 5,000 ஜனத்தொகை உள்ள இடத்திற்கு துணை சுகாதார நிலையம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாகச் செய்து கொடுக்கிறோம். இந்தத் தடவைகூட, ஏறத்தாழ 70 P.H.C.-களை upgrade பண்ணி, 30 படுக்கை வசதிகள் கொண்டதாக ஆக்குவதற்கு, இரண்டு, மூன்று தினங்களிலே G.O. வர இருக்கிறது. ஏறத்தாழ நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான் upgradation-னே வந்திருக்கிறது. ஆகவே, இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக இருக்கிற எல்லா மருத்துவமனைகளையும் upgrade பண்ணி, 30 படுக்கை வசதி கொண்டதாக ஆக்க இருக்கிறோம்.

இன்னொன்று, P.H.C-யிலும் சரி, G.H.-லும் சரி, CEmONC Centre என்று சொல்லி பிரசவத்திற்கு மட்டும் 5 டாக்டர்களை நியமிக்க வேண்டிய அந்தப் பணியையும் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, விரைவிலே இந்தப் பணிகளை எல்லாம் செய்ய முயற்சி செய்கிறோம். இன்னொன்றுகூடச் சொல்கிறேன். T.N.P.S.C.-யிலே போனால் காலதாமதமாகும் என்பதால் இப்போது Employment Exchange-லிருந்து அவர்களை நேரடியாகப் போட்டுவிட்டு, பின்னர் அவர்கள் T.N.P.S.C. தேர்வு எழுதி regular ஆகலாம் என்று சொல்லி, அந்த முயற்சியையும் சேர்த்து எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. ரொம்ப நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்களே, ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பக்கம் திரும்பவே மாட்டேன் என்கிறீர்கள். வேலூர் மாவட்டம்,

[2007 ஜனவரி 25

திருப்பத்தூர் மிக மிகப் பின்தங்கிய பகுதி. விவசாய மக்கள், விவசாயக் கூலிகள் வாழ்கின்ற பகுதி. இங்கே தாலுகா மருத்துவமனை இருக்கிறது. அதிலே துப்புரவுப் பணியாளர்கள் 13 பேர், மருத்துவப் பணியாளர்கள் 8 பேர், செவிலியர் உதவியாளர் 12 பேர், சமையலர் இரண்டு பேர், கண் மருத்துவர் ஒருவர், தோல் மருத்துவர் ஒருவர், பால்வினை நோய் மருத்துவர் ஒருவர், எலும்பு மருத்துவர் ஒருவர், காது, மூக்கு, தொண்டை மருத்துவர் ஒருவர், இப்படி 40 பணியிடங்கள் காலியாக இருக்கிற காரணத்தாலே அங்கே வருகின்ற ஏழை மக்கள் வைத்தியம் பார்க்க முடியாத அவல நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதைப்போல, வேலூர் மாவட்டத்திலும் இந்தப் புதிய பணியிடங்களை நிரப்புகின்ற நேரத்தில், உங்களுடைய மருத்துவமனைகளுக்கெல்லாம் முன்னுரிமை வழங்கி, அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**34—**

## கட்டடங்கள்

***1668—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி அரசு மேல்நிலைப் பள்ளியில் போதிய வகுப்பறைகள், கழிப்பறைகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கியின் திட்டம் 6-ன்கீழ் 12 வகுப்பறைகள், 8 கழிப்பிடங்கள் மற்றும் குடிநீர் வசதி உள்பட ரூ.65 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பில்



2007 ஜனவரி 25]

ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கவுள்ளன.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலே மகளிர் அதிக எண்ணிக்கையில் படிக்கும் பவானி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 3,250 மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளிக்குப் போதிய வகுப்பறைகள் இல்லை, கழிப்பிடங்கள் இல்லை, அதேபோன்று என் தொகுதியிலுள்ள இன்னும் பல்வேறு அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச் சுவர், கழிப்பிட வசதி எல்லாம் இல்லை. மேலும், மயிலம்பாடி, தளவாய்ப்பேட்டை போன்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பத்தாண்டு காலமாக வேதியியல் பாடப்பிரிவு உருவாக்கப்படாமல் உள்ளது. இந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு, தலைமை ஆசிரியர்மூலமாக வெளியிலிருந்து ஆசிரியர்களைக் கொண்டுவந்து பாடங்களைச் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு நிறைவேற்றித் தருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டுக்கொண்டதைப்போல, அவருடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகளுக்குரிய கட்டடப் பணிகள் வரக்கூடிய ஆண்டுகளிலே, நபார்டு வங்கியினுடைய உதவியின்மூலமாக பகுதி 8-வது திட்டத்தின்மூலமாக எடுத்துக்கொள்வதற்கு அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும். கழிவறைகளைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த முறை நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டிலேயே ஒரு குறிப்புரையினை வழங்கியிருக்கின்றார்கள். வரக்கூடிய மூன்றாண்டு காலத்திற்குள்ளாக தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளுக்கும் போதுமான வகையிலே முழுமையான கழிவறை வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்று அவர்கள் அன்றைக்கு ஓர் ஆணையை வெளியிட்டிருக்கின்றார்கள். எனவே, வரக்கூடிய காலங்களிலே படிப்படியாக அந்தப் பணிகள் முழுமையாக அவருடைய தொகுதியில் மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பள்ளிகளிலே முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேதியியல் பாடத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த ஆட்சி இருந்தபோது, குறிப்பிட்ட அந்தப் பாடத்திற்கு மட்டும் ஆசிரியர் பணியிடங்களுக்கு அனுமதியினை வழங்காமல், இதரப் பாடங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். எனவே, கடந்த 10 ஆண்டு காலமாக அந்தப் பள்ளிகளிலே வேதியியல் ஆசிரியர் பணியிடம் காலியாக இருப்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கின்றார்கள். நான் துறை அதிகாரிகளிடத்திலே பேசி உடனடியாக அந்த இடத்திலே வேதியியல் ஆசிரியர் பணியிடத்தை அங்கே வழங்க ஆவன செய்வதற்கு, அரசு ஏற்கெனவே நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தளவாய்ப்பேட்டை, மயிலம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிகளில், இவ்வாண்டு பரிட்சை வருகின்றபடியால், வெளி மாவட்டங்களிலிருந்து வேதியியல் பாடப் பிரிவு ஆசிரியர்களை உடனடியாக நியமித்து, அந்தப் பள்ளிகளினுடைய மாணவர் நலன் காக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாணவர்களின் நலன் எல்லா வகையிலும் காக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில், கூடல் நகர்ப் பகுதி உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்தில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட அந்தப் பள்ளியில் போதுமான ஆசிரியர்கள் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. பள்ளிகளில் S.S.A. திட்டத்தின்மூலம் கூடுதலாக வகுப்பறைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், அந்தப் பள்ளிகளைப் பாதுகாக்கின்ற விதத்தில், சுற்றுச்சுவர் அமைப்பதற்கான ஒரு திட்டத்தை, S.S.A. திட்டத்தின்மூலம் அரசு கொண்டு வருவதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான், தமிழகத்திலே காலியாக இருந்த 8 ஆயிரம் பணியிடங்களிலே முழுமையாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதுமாத்திரமல்லாமல், இப்போது 6, 7, 8 ஆகிய வகுப்புகளிலே 7,979 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் ஆணைகள் வழங்கி, வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக இப்போது அந்தப் பட்டியல் சரிபார்க்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே, அந்தப் பணிகள் முடிவடைகிறபோது, இந்தப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் முழுமையான வகையில் அங்கே நியமனம் செய்யப்படுவார்கள் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல புதிதாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய பள்ளிகளுக்கும் விரைவிலே அங்கே ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுற்றுச்சுவரைப் பொறுத்தவரையிலே, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கியினுடைய பகுதி 8-வது திட்டத்தின்கீழ் இந்த முறை எடுத்துக்கொள்வதற்காக நபார்டு வங்கி தன்னுடைய ஒப்புதலை வழங்கி இருக்கிறது. எனவே, வரக்கூடிய ஆண்டுகளிலே அந்தப் பணியை நாம் நபார்டு வங்கியின் உதவியோடு செய்ய முடியும். S.S.A-ஐப் பொறுத்தவரையிலே, நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு இப்போது வாய்ப்பு இல்லை. இருந்தாலும்கூட தொடர்ந்து மத்திய அரசிடத்திலே இந்தக் கோரிக்கையை நாம் எடுத்துச் சென்று, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வரக்கூடிய காலங்களிலே அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு நிச்சயம் முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அனைவருக்கும் கல்வி' திட்டத்திலே கடந்த காலங்களில் கல்விக் குழு மூலம் ஊராட்சிமன்றத்திலேயிருந்து பல கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டு பாதியிலேயே நிற்கின்ற நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் அப்படிப் பாதியிலேயே நிற்கின்ற அந்தக் கட்டடப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு கல்விக் குழுவை

[2007 ஜனவரி 25

மாற்றியமைத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் கட்டடப் பணிகள் இப்படிப் பாதி நிலையில் நிற்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கின்ற காரணத்தினால்தான், திருவண்ணாமலை மாவட்டத்தில்கூட, அண்மையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அத்தகைய கட்டடப் பணிகள் எங்கெங்கு பாதியிலே நிற்கின்றன; அவற்றை விரைவாக, எந்த வகையிலே கட்டி முடித்து, மாணவர்களுடைய பயன்பாட்டுக்கு அளிக்கப்படவேண்டும் என்பது குறித்தெல்லாம் ஆய்வு நடத்தி, துறை அதிகாரிகளுக்கு அது சம்பந்தமான ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கல்விக் குழுவினுடைய சார்பிலே ஆங்காங்கே இத்தகைய பிரச்சினைகள் எழுமேயானால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களிடத்திலே அவற்றைத் தெரிவித்து, நிச்சயமாக ஆங்காங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முறையான வகையிலே கல்விக் குழுவினை உருவாக்கி அந்தப் பணிகளையும் விரைந்து முடிப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வ சிக்ஷா அபியான்—அனைவருக்கும் கல்வி, நபார்டு வங்கித் திட்டம், உலக வங்கி, மத்திய அரசு திட்டத்தின்மூலம் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா பள்ளிகளிலும் கழிவறை வசதிகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். பல தனியார் பள்ளிகளில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போதிய கழிவறை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளுக்கு ஏதேனும் ஒரு திட்டத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கழிவறை வசதிகள் செய்துகொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.



2007 ஜனவரி 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையிலே பல மாற்றங்களை கொண்டுவர வேண்டிய தருணம் இது. கற்கின்ற மாணவர்கள் பால பருவத்திலேயே பல நுணுக்கங்களை அறிய Computer, Internet என்பது போன்ற வசதிகள் வந்துவிட்ட காலத்திலே, பல தகவல்களை விரல் நுனியில் வைத்திருக்கக்கூடிய காலம் கனிந்து இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், பாடத் திட்டங்களிலே பால உணர்வு பற்றிய கல்வியைப் புகுத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்திருக்கின்றார். Sex education என்பது part of education என்று அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இது குறித்து முறையான செயல் திட்டம் அரசிடம் உள்ளதா; அப்படி இருந்தால் எப்போது செயல்படுத்தப்படும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட முறையைப் பொறுத்தமட்டிலே இத்தகைய கல்வி, பால் உணர்வு குறித்த கல்வியாக மாத்திரம் மட்டும் அமைந்துவிடாமல், not only pertaining to sex education alone; பொதுவாகவே சுகாதாரம்; அதைப்போலவே health and hygiene என்கின்ற வகையிலே தூய்மை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கல்வி முறையாக நம்முடைய கல்வி முறையிலே இத்தகைய பாடத் திட்டத்தினைக் கொண்டுவரவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இப்போது மத்திய அரசினுடைய உதவியிலே, 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளிலே படிக்கின்ற நம்முடைய மாணவர்களுக்கு AIDS குறித்த விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்கு ஒரு நிதியுதவியினை மத்திய அரசு வழங்கத் தயாராக இருக்கிறது. நாங்கள் இப்போது என்ன கருதுகிறோம் என்று சொன்னால், இந்தக் கல்வியினை sex education என்ற வகையிலே மாத்திரம் அமைந்துவிடாமல், வளர் இளம் பருவத்திலே இருக்கக்கூடிய மாணவர்கள், மாணவிகள் உளவியல்ரீதியாக தாங்கள் சந்திக்கக்கூடிய சவால்கள்; உடல்ரீதியாக அவர்களுக்கு ஏற்படக்கூடிய மாற்றங்கள் இவையெல்லாம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய ஒரு பாடத்திட்டமாக ஆறாம் வகுப்பிலிருந்து இத்தகைய ஒரு பாடத்திட்டத்தை உருவாக்குவதன்மூலமாக மாணவர்களுக்கு அத்தகைய விழிப்புணர்வை உருவாக்க முடியும். தங்களை மாத்திரம் அல்ல, சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்துக்கொள்வது; தங்கள்

[2007 ஜனவரி 25

உடல் நலத்தை எவ்வாறு பேணிப்பாதுகாப்பது; இத்தகைய வளர் இளம் பருவத்தினர்—adolescent stage—என்று சொல்லக்கூடிய அந்தப் பருவத்தைக் கடக்கும்போது ஏற்படக்கூடிய மாற்றங்களை எவ்வாறு எளிதாக எதிர்கொள்வது என்பதைப்பற்றி ஒரு விரிவான கல்வி முறையாக இது அமையவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். ஏற்கெனவே NCT of Delhi என்று சொல்லக்கூடிய டெல்லி அரசிலே இத்தகைய திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அது குறித்து நம்முடைய இணை இயக்குநர் அவர்களை அங்கே அனுப்பி அவர்களும் அதுகுறித்த ஆய்வினை மேற்கொண்டு திருமபியிருக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அரசு இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் முழுமையான அளவில் மேலும் ஆய்வுசெய்து, வரக்கூடிய கல்வி ஆண்டுகளிலே எந்த வகையிலே இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக, நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களுடைய நலனுக்காக உருவாக்கிட முடியும் என்பதை அரசு பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**35—**

## மேம்பாலம்

***820—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, செம்மாண்டகுப்பம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதியிலே செம்மாண்டகுப்பம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்வாண்டு ஆகஸ்ட் திங்கள் இறுதிக்குள் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.



2007 ஜனவரி 25]

முற்பகல் 10–15

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்திற்கு அருகில் இருக்கின்ற மிகப் பெரிய ஏரியான அன்னசாகரம் ஏரி மழைக்காலங்களில் நிரம்பி, அதிலிருந்து வெளி வருகின்ற அந்த காட்டாற்று வெள்ளமும், தருமபுரி நகரத்திலே பெய்யக்கூடிய மழையினால் ஏற்படும் வெள்ளமும் சேர்ந்து, சனத்குமார் என்கிற ஆற்றின் வழியாக செம்மாண்டகுப்பம் என்கிற ஊராட்சியிலே தருமபுரி–திருப்பத்தூர் பிரதான நெடுஞ்சாலையின் குறுக்கே செங்கல்மேடு என்கிற இடத்தில் குறுக்கே செல்கிறது. அந்த இடம் மிகத் தாழ்வான பகுதி என்பதால் அந்தச் சாலையிலே நிறைய விபத்துகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. ஆகவே, இந்த இடத்தில் அவசியமாக பாலம் ஒன்று உடனடியாகக் கட்டப்பட வேண்டும். அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டுவதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, அந்தச் சாலை பிரதான சாலை என்பதாலே, இநதப் பாலம் என்ன உயரத்தில், என்ன அகலத்தில், என்ன மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல், பெண்ணாகரம், தருமபுரி, திருப்பத்தூர் சாலை மாநில நெடுஞ்சாலை எண் 66–ல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, செங்கல்மேடு என்கின்ற இடத்தில், அதாவது சாலையின் மொத்த நீளம் 90 கிலோ மீட்டர். அதிலே 53–வது கிலோ மீட்டரில் செங்கல்மேடு அருகில் செம்மாண்டகுப்பம் ஆற்றின் குறுக்கே ஓர் உயர் மட்டப் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது ஏற்கெனவே தரைமட்டப் பாலமாக ஏறத்தாழ 1 மீட்டர் உயரம் கொண்டுள்ளதாக மட்டும் உள்ளது. அதற்குப் பதிலாக 3 மீட்டர் உயரம் கொண்ட பாலமாகவும், அந்தப் பாலத்தின் நீளம் சுமார் 21 மீட்டர் நீளம் கொண்டதாகவும், 7½ மீட்டர் அகலம் கொண்ட இருவழிப் பாதை கொண்ட பாலமாகவும் அமையவிருக்கிறது. அந்தப் பாலத்தினுடைய மதிப்பு 42 இலட்சம் ரூபாய். அதற்காக கண்காணிப்புப் பொறியாளரிடமிருந்து தலைமைப் பொறியாளருக்கு கடந்த வாரம் திருத்திய நிர்வாக ஒப்புதலுக்காக செயற்குறிப்பு வந்துள்ளது. அதற்கான ஒப்புதல் இந்த வாரத்திலே

வழங்கப்பட்டு, அடுத்து வரக்கூடிய பிப்ரவரி மாதத்திலே ஒப்பந்தப்புள்ளி கோரி, இந்த ஆண்டு ஆகஸ்ட் திங்கள் இறுதியில் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் பன்னந்தூரிலிருந்து அரசம்பட்டி செல்லும் பாதையிலுள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்ட அப்பகுதி மக்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமும் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகளிடமும் மனு கொடுத்தும், போராட்டங்கள் நடத்தியும் வருகிறார்கள். இக்கோரிக்கை சுமார் 50 வருட காலக் கோரிக்கையாகும். சுமார் 100 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயனடையக்கூடிய திட்டமாகும். எனவே, இந்த மேம்பாலத்தை அரசு கட்டித் தர முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட குறிப்பிட்டேன். எப்பொழுதெல்லாம் தமிழகத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்கிறார்களோ அப்போதெல்லாம் உயர்மட்டப் பாலங்களும், மேம்பாலங்களும், இரயில்வே மேம்பாலங்களும் கட்டுகின்ற வரலாறு நடந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலம் நிச்சயமாக இந்த அரசினுடைய பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு, துறையும், அரசும் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர் இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம்-வேளச்சேரி சாலையும், G.S.T. சாலையும், முடிச்சூர்





சாலையும் சந்திக்கின்ற இடத்தில், State Highways, National Highways இரண்டையும் இணைக்கின்ற வகையில் மிகப் பெரிய ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று கடந்த கால நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, சற்றேறக்குறைய 40 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே அந்த மேம்பாலம் 5 ஆண்டுகளாக கட்டப்படாமல் அப்பணி நிலுவையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடன் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர்மூலமாக நம்முடைய Highways இலாகா அமைச்சருக்கும் அந்தச் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், அங்கே கல்லூரிகளும், பள்ளிகளும் நிறைந்திருக்கின்ற காரணத்தினால் 6 ஆண்டுகளுக்கு முன்பாக எடுக்கப்பட்ட கணக்கு சற்றேறக்குறைய ஒரு நாளைக்கு 14 இலட்சம் மக்கள் அங்கே இந்த மேம்பாலம் வராத சூழ்நிலையில் கஷ்டப்படுகிறார்கள். காலை நேரத்திலே, மாலை நேரத்திலே கல்லூரிக்குச் செல்கின்ற மாணவ, மாணவியர்கள் படுகின்ற கஷ்டம் அதிகம். இந்த நேரத்திலே ஓரே ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு மத்திய இரயில்வே துறை இணை அமைச்சர் திரு. வேலு அவர்கள் அதைப் பார்வையிட்டு உடனடியாக ஒரு சிறிய பாலத்தை அமைத்ததன் விளைவாக இன்றைக்கு சற்றேறக்குறைய 50 சதவிகிதம் மாணவர்களின் அந்த கஷ்டத்தைப் போக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாக கட்டுவதற்கு அரசு முன்வருமா? அப்படிக் கட்டுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படின் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியும் என்பதையும் இங்கே சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைப் பேரவைத் தலைவர்மூலமாக கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர், தாம்பரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மிக முக்கியமான அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை இங்கே வினாவாக எழுப்பியிருக்கின்றார்கள். நம்முடைய நெடுஞ்சாலைத் துறையும், அதே போல, இரயில்வே துறையும் இணைந்து அந்த மேம்பாலம் கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை உளளது. அதிலே இரயில்வே துறையினுடைய பணிகள் நடைபெற்று வருகின்றன. நெடுஞ்சாலைத்

[2007 ஜனவரி 25

துறையிலும் அந்தப் பணிகளுக்கான செயற்குறிப்பு. அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. அதிலே அந்தச் சாலையினுடைய alignment, design-ஐ பொறுத்தளவில் ஒரு மாறுதல் செய்ய வேண்டியிருந்தது. அதற்காக இரயில்வே துறையினுடைய அலுவலர்களும், நெடுஞ்சாலைத் துறையினுடைய அலுவலர்களும் இணைந்து கடந்த வாரம் அதை நேரடியாக ஆய்வு செய்திருக்கின்றார்கள். அதற்குரிய செயற்குறிப்பு தீவிர பரிசீலனையில் உள்ளதால், நிச்சயமாக விரைவில் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சிறுமதுரை-பையூர் மேம்பாலத்திற்கு 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, கடந்த கால ஆட்சியிலே வசந்தகிருஷ்ணாபுரம் அருகில் ஒரு ஆற்றுப் பாலம், ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, பிறகு டெண்டர் விடாமல் நிலுவையில் உள்ளது. அதற்குத் தங்கள் அரசு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மேம்பாலம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பாலம் அமைவதற்கு இந்தத் துறை விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. டி. மூர்த்தி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**36—**

## குழந்தைகள் நலக் காப்பகம்

***2262—திரு. டி. மூர்த்தி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 25]

*(அ) திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர் நகராட்சி, 18-வது வார்டு, கொருக்கன்தாங்கல் பகுதியில் குழந்தைகள் நலக் காப்பகம் அமைத்துத் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் 250 குழந்தைகள் ஒப்பளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் ஓர் அரசு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் மேலும் அரசு குழந்தைகள் காப்பகம் ஒன்று நிறுவ வேண்டிய அளவிற்குக் கோரிக்கைகள் இல்லை. இந்நிலையில் திருப்போரூர் தொகுதி, மறைமலை நகராட்சிப் பகுதியில் அரசினால் குழந்தைகள் காப்பகம் நடத்த வாய்ப்புகள் ஏதும் இல்லை.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர், 18-வது வார்டு, கொருக்கன்தாங்கல் பகுதியில் வசிக்கும் ஏழையெளிய மக்கள் குடும்பச் சூழ்நிலை காரணமாக, வேலை தேடி வெளியிடங்களுக்குச் சென்று வர கால நேரம் ஆகின்ற காரணத்தினால், அவர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க, அரசு குழந்தைகள் நலக் காப்பகம் அமைத்துத் தந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதை அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனுவாக என்னிடம் தரச் சொல்லுங்கள். பரிசீலித்து உரிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. ந. கணபதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**37—**

## கால்நடை மருத்துவமனை

***3433—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 25

வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடை மருத்துவம்னை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதி, சத்தியமங்கலம் ஒன்றியத்தில் குத்தியலத்தூர், மாக்கம்பாளையம், குன்றி, திங்களூர், கெர்மலம் ஆகிய ஊராட்சிகள் முற்றிலும் மலைப் பகுதியை உள்ளடக்கிய அதிக பரப்பளவு கொண்ட பகுதியாகும். இந்த மலைப் பகுதியில் ஒரு மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து ஒரு முழுநேர கால்நடை மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வேண்டுகோளை ஏற்று கேட்பதையும், கேட்காததையும் வைத்து, இந்த நமது கலைஞர் அரசு நிறைவேற்றிக் கொடுக்கும் கொடுக்குமா எனத் தங்கள்மூலமாக அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, அந்தப் பகுதியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் இருப்பின், அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய கால்நடை மருந்தகம் அமைக்க, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.



2007 ஜனவரி 25]

**38—**

## நிதி உதவி

***699—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்கள் மழலையர் பள்ளிகளைத் தொடங்கி நடத்துவதற்கு, தாட்கோ மூலமாக நிதியுதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறப்பு நிதியுதவியின் வழிகாட்டுதலின்படி மழலையர் பள்ளிகள் துவக்கி நடத்த தாட்கோமூலம் நிதியுதவி செய்ய வழிவகை இல்லை.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய கல்வி கற்றோர் விகிதம், 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 73.45 விழுக்காடு. இதிலே தாழ்த்தப்பட்ட பழங்குடியினருடைய கல்வியறிவு விகிதம் 63 விழுக்காடுதான் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, அந்தச் சமூகத்தைச் சார்ந்த பெண்களை எடுத்துக்கொண்டால் பொதுவான கல்வியறிவு விகிதத்திற்கும், அதற்கும் 20 விழுக்காடு வேறுபாடு இருக்கிறது. இந்தக் குறைகளைப் போக்க வேண்டும் என்பதற்காக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழே, ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த குழந்தைகளுக்கு, குறிப்பாக Pre-School, அதாவது, பள்ளிகளிலே சேர்வதற்கு முன்னாலே மழலையர் பள்ளியிலே படிக்கின்ற நிலையிலே இருக்கின்ற குழந்தைகளுக்குச் சிறப்புக் கவனம் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கென்று திட்டங்களை வகுக்க வேண்டும் என்று வழிகாட்டுதல் தரப்பட்டு, கடந்த 2003 ஆம் ஆண்டிலே 5,000 நர்சரி பள்ளிகள் அப்போது அங்கன்வாடிகளாக இருந்தவை, நர்சரி பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இப்பொழுது தமிழ்நாட்டிலே சுமார் 31,000 மழலையர் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே 70 இலட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி இருக்கின்ற நிலையிலே இந்த ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள், சரியான கல்வி வசதி இல்லாமல் சிரமப்படுகின்ற இந்த நேரத்திலே, தாட்கோமூலமாகக் கொடுக்கப்படுகின்ற கடன்

[2007 ஜனவரி 25

வசதிகளிலே, இப்படிப்பட்ட பள்ளிகளைத் துவக்கி நடத்துவதற்கு, கடன் வசதி தந்தால் இந்தக் கல்வியிலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** குறைப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, இதை அரசு பரிசீலித்து, இனியாவது இதற்காக நிதி உதவி செய்யுமா என்று உங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்குத் துவக்கப் பள்ளி 759-ம், பழங்குடி மாணவர்களுக்குத் துவக்கப் பள்ளி 200-ம், ஆக மொத்தம் 959 பள்ளிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. தாட்கோமூலமாக மழலையர் பள்ளிகள் நடத்துவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**39—**

## குளிர்ப்பதனக் கூடம்

***1441—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரிய தாழையில் மீன்கள் பதப்படுத்தும் குளிர்ப்பதனக்கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பெரிய தாழையில் மீன்கள் பதப்படுத்தும் குளிப்பதனக்கூடம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீனவ நண்பர்களுக்காக அனேக நலத் திட்டங்களைச் செய்து இருக்கிறார்கள். மீனவர்களுக்காக ஒரு நல வாரியத் திட்டமே அமைத்து இருக்கிறார்கள். இதற்காக பெரிய தாழை மீனவ மக்களின் சார்பாகவும், என்னுடைய



2007 ஜனவரி 25]

சார்பாகவும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பெரிய தாழை மீனவ மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை, அவர்கள் மீன் பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பி இருக்கிறார்கள். ஆகையால், இந்த மக்களின் நலன் கருதி தாங்கள் இதை மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதைத் தங்களின்வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தாழையில் ஏற்கெனவே அரசுக் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பனிக்கட்டி உற்பத்தி நிலையம் இலாபகரமாக இயங்காத நிலையில் அரசாணை நிலை எண் 338, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 2-8-1989-ல் ஆணையிட்டபடி மூடப்பட்டது. அதன்பிறகு தனியார் முதலீட்டில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் இப்பகுதியில் செயல்பட ஆரம்பித்தன. தற்சமயம் குளிர்பதனக்கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லாமல் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே மீன்வரத்து அதிகமாக இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 40, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**40—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***4847—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 25

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறையில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியில் குறைந்தபட்சம் 5,000 லிட்டர் கொள்முதல் இருக்குமேயானால் மொத்த பால் குளிரூட்டும் அமைப்பான் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறது. அந்தப் பகுதியில் எவ்வளவு பால் கொள்முதல் ஆகிறது என்பதை விசாரணை செய்து, 5,000 லிட்டர் வரை இருக்குமேயானால் நிச்சயமாக அங்கு பால் குளிரூட்டும் அமைப்பான் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தரங்கம்பட்டி பகுதியைச் சுற்றிலும் இருந்துதான் பால் உற்பத்தி அதிகமாகப் பெறப்பட்டு கரூர் மற்றும் திருச்சிக்கு அனுப்பப்படுகிறது. கிட்டத்தட்ட 25,000 லிட்டருக்குமேல் அந்தப் பகுதியிலிருந்து பால் பெறபபட்டு மேற்கண்ட கரூர் மற்றும் திருச்சி பகுதிக்கு அனுப்பப்படுகிறது. எனவே, தரங்கம்பட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கைப்படி தற்போது பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்குப் பதிலாக மொத்த பால் குளிரூட்டும்



2007 ஜனவரி 25]

அமைப்பான் அமைக்கக்கூடிய பணி நடைபெற இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோல் முன்பும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்த பிறகு நிச்சயமாக அந்தப் பகுதியில் மொத்த பால் குளிரூட்டும் அமைப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுப்பது மற்றும் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழக அரசின் நிலை

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், ரிப்போர்ட்டை கொடுங்கள் சார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் அதை முடித்தால் இதற்கு வரமுடியாது. அதற்காகத்தான் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்தினுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிற முக்கியமான பாலாற்றுப் பிரச்சினை குறித்து அவைக்கு கொண்டு வந்தேன். அப்போது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நாங்கள் நிச்சயமாக ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை எடுப்போம் என்ற உறுதியை நேற்று அளித்தார்கள். அரசின் சார்பில் என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?

நேற்றுகூட பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று வந்தார்கள். அங்கே வனம் மற்றும் சுற்றுச்சூழல்

துறையினுடைய அமைச்சர்—ஆந்திர அரசு அணையைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்தாலும்கூட வனத் துறையினுடைய அனுமதி இல்லாமல் ஆந்திர அரசு அந்த இடத்திலே அணையைக் கட்ட முடியாது. 30 கோடி ரூபாயிலே அவர்கள் திட்டப்பணியை அங்கே செயல் திட்டம் விடுவிக்க முடியாது. அப்படி இருக்கிறபோது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு சென்றவர் மத்திய வனத் துறை அமைச்சர் மாண்புமிகு ராஜா அவர்களைச் சந்தித்தாரா? இதுகுறித்து ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளார்களா?

அதேபோல, முல்லைப் பெரியாறு அணை குறித்த பிரச்சினை இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லி, நம்முடைய தமிழக அரசு இரண்டு முறைகள் முதலமைச்சர் ஒரு முறையும், அதேபோல நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் இரண்டு முறைகளும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய தமிழக அரசினுடைய நிலை என்ன? அடுத்து முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து என்ன ஒரு முடிவை தமிழக அரசு எடுத்திருக்கிறது என்பது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிப்பாரா?

அதேபோல, ஆந்திர அரசு அணை கட்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவைக்கு அறிவிப்பாரா? ஏனென்றால், 27 ஆம் தேதி உண்ணாவிரதம் என் தலைமையில் வைத்திருக்கிறார்கள். அதை உடனடியாக நாங்களே நிறுத்திக்கொள்கிறோம். அமைச்சர் எங்களுடைய மாவட்டத்துக்காரர். அவரும் பாலாற்றுத் தண்ணீரை நிச்சயம் அருந்தி வளர்ந்து கொண்டிருப்பவர்; நானும் அதை அருந்தி வளர்ந்து கொண்டு இருப்பவன். எங்களுடைய மாவட்டத்தினுடைய பிரச்சினை என்கிறபோது அவரே பொதுப் பணித் துறை அமைச்சராக இருப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி. ஆகவே, அவர் எடுத்திருக்கிற முயற்சி என்ன, அதைத் தடுத்து நிறுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



முற்பகல் 10–35

முதலாவது, பாலாற்றிலே ஆந்திர அரசு அணை கட்ட முயற்சிப்பதாக பத்திரிகையிலே வந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டது. ஆந்திர அரசு அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வைத்திருக்கிறது என்று பத்திரிகையிலே வந்தவுடன், அதுகுறித்து இந்த அரசு தன்னுடைய எதிர்ப்பை, ஆந்திர அரசுக்குப் பலமுறை தெரிவித்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ஹைதராபாத் சென்றபோது அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரைச் சந்தித்து இதுபற்றியும் பேசியிருக்கிறார்கள். அப்போது அவர்கள், 'அப்படி எந்தப் பிரச்சினையும் இல்லை; ஏதாவது நடவடிக்கை எடுத்தால், தமிழக அரசைக் கலந்துகொள்ளாமல் செய்யமாட்டோம்' என்று ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதையும் மீறி பத்திரிகையிலே இப்போது வருகிற செய்தி, அணை கட்ட, அடிக்கல் நாட்ட நடவடிக்கை எடுப்பதாக வந்த செய்தியை, அவர் எப்படிப் பார்த்திருக்கிறாரோ, அப்படித்தான் நானும் பார்த்து வருத்தமும், ஏன், கொஞ்சம் ஆத்திரமும் எங்கள் மாவட்டம் என்ற காரணத்தினால் அடைந்தேன்.

இதுகுறித்து நேற்றைக்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் மாண்புமிகு ராஜா அவர்களை டெல்லியிலே சந்தித்து, இரு மாநிலப் பிரச்சினை என்றாலும், வனப் பகுதியிலே இந்த அணை கட்டுகிற காரணத்தால், உங்கள் அனுமதியை அவர்கள் பெற்றிருக்கிறார்களா, அதுகுறித்து மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்டேன். அதுகுறித்து அவர்களுடைய இலாகா அதிகாரிகளோடு கலந்துபேசி, ஆந்திர அரசு, மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான அனுமதியையும் பெறாவிட்டால், அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை ராஜா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த நேரம் ஆந்திர அரசுக்கு மத்திய அரசினுடைய செய்தி போயிருக்கும் என்று நான் கருதுகிறேன். அதையும் மீறி ஆந்திர அரசு முற்பட்டால், பிறகு நீதிமன்றத்தினுடைய உதவியை நாடுவதைத் தவிர, நமக்கு வேறு வழியில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், இரு மாநிலப் பிரச்சினை. இதிலே கொஞ்சம் அனுசரித்துப் போகவேண்டுமென்று நினைக்கிறோம். ஆனாலும், உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது.

இரண்டாவதாக அவர் கிளப்பியது முல்லைப் பெரியாறு பிரச்சினை. முல்லைப் பெரியாறு பிரச்சினை, உச்ச நீதிமன்றத்தினுடைய யோசனைப்படி, மத்திய அரசினுடைய கருத்துப்படி, பேச்சுவார்த்தைக்குத் தமிழகம் இணங்கியது. ஆனால், உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது. தமிழக அரசு 136 அடியிலிருந்து 142 அடி வரையில் தண்ணீரை உயர்த்திக்கொள்வதற்கு அனுமதி உண்டு. அதே நேரத்தில், இன்னும் பலப்படுத்த வேண்டிய பணிகள் சில மிச்சமிருக்கின்றன, பேபி டேம் போன்ற பகுதிகளில். அந்தப் பணியை தமிழக அரசு செய்கிறபொழுது, கேரள அரசு அதைத் தடுக்கக் கூடாது என்பதுதான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. அந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இருமுறை கேரள அரசின் சார்பிலே உச்ச நீதிமன்றத்திலே அணுகியபோதும், அதை உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. எனவே, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான், அதை எப்படி implement பண்ணுவது என்ற அடிப்படையிலேதான் பேச்சுவார்த்தைக்குத் தமிழகம் ஒத்துக்கொண்டது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களும் ஒரு முறை உட்கார்ந்து பேசினார்கள். அதற்குப் பிறகு, மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னால், நானும் கேரளத்தினுடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் உட்கார்ந்து பேசினோம். ஆனால், பேச்சுவார்த்தை, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையை எப்படி அமல்படுத்துவது என்பதைப்பற்றி அதைப் பேசுவதற்கு கொஞ்சம்கூட கேரள அரசு இணக்கம் தெரிவிக்க மறுக்கிறது. மாறாக, மத்திய அரசு நியமித்த Expert Committee-யின் முன்னாலே பேசாததையெல்லாம், உச்ச நீதிமன்றத்தில் தனக்குச் சாதகமாக எடுத்து வைக்காத வாதங்களையெல்லாம், இப்பொழுது புதியதாக எடுத்து வைத்து, பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறார்கள். அதிலே ஒன்று, அவர்கள் எத்தனையோ காரணங்களை அடுக்கடுக்காகச் சொன்னார்கள். எல்லாக் காரணங்களையும் தமிழக அரசு மறுத்தது. உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது. ஆனால், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, புதியதாக அணையைக் கட்ட வேண்டுமென்று ஒன்றைத் துவக்கியிருக்கிறார்கள்.

இது ஒன்றும் புதியது அல்ல. 1979 ஆம் ஆண்டிலேயே திரு. தாமஸ் அவர்கள் Central Water Commission, Chairman ஆக இருக்கிறபொழுது, அப்பொழுது இப்படியொரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அவர் நேராக dam-ஐ வந்து பார்வையிட்டு, பலமாக இருக்கிறது என்று தெரிவித்தார். ஆனால், புதிய அணை கட்டுவதற்கு சாத்தியக்கூறு உண்டா என்பதை கேரளத்தினுடைய பொறியாளர்களும், தமிழக அரசினுடைய பொறியாளர்களும் சென்று ஒரு team ஆக அந்த இடத்தைப் போய் பார்த்துவிட்டு, பிறகு வந்து சொல்லுங்கள் என்று அனுப்பினார். இரு மாநில பொறியாளர்களும் போய், ஒரு study பண்ணி பார்த்துவிட்டு, இனி புது dam கட்டுவதற்கு, அங்கே வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்போதே அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. ஆனால், அந்தத் திட்டம் 1979-லே பேசி கைவிடப்பட்ட திட்டம், "that idea was dropped" என்றே proceedings-லே இருக்கிறது. கைவிடப்பட்டது. அதை எடுத்து வைத்துக்கொண்டு, மறுபடியும், "ஆகாத ஊருக்குப் போகிற வழி" செய்கிற காரணத்தினால், இனி பேசுவதால் எந்தப் பயனும் இல்லை என்ற முடிவுக்குத் தமிழக அரசு வந்திருக்கிறது. ஆகையினாலேதான், மத்திய அரசின் முன்னிலையிலே இந்தப் பேச்சுவார்த்தை தொடங்கியது என்ற காரணத்தினாலும், உச்ச நீதிமன்றம், மத்திய அரசுமூலமாக, இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறலாம் என்று சொன்ன காரணத்தினாலும், பிரதமர் அவர்களே இதிலே அக்கறை காட்டியதாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய நிலையைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று ஒரு கடிதத்தை பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதி என்னிடத்திலே தந்தார்கள். அந்தக் கடிதத்தை நேற்று நான் பாரதப் பிரதமரைச் சந்தித்து தமிழகத்தின் நிலைமையை அவர்களிடத்திலே நேரில் தெரிவித்து, அந்தக் கடிதத்தையும் பிரதமரிடத்திலே தந்தேன்.





முற்பகல் 10-40

அதேபோன்று, மத்திய நீர்வளத் துறை அமைச்சரிடத்திலேயும் இனிமேல் நாங்கள் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தினுடைய ஒரு நகலை அவருக்குத் தந்து, இதுவரையிலே நீங்கள் நல்லெண்ணத்தோடு இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தியதற்கு தமிழகம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது; ஆனால், ஒரு நல்ல, திருப்திகரமான முடிவை எடுக்க முடியாமைக்கு வருந்துகிறது என்று சொல்லிவிட்டு வரச் சொன்னார்கள். இரண்டு பேரையும் நேற்று சந்தித்து, தமிழகத்தின் நிலைமைகளைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறோம். இனி பேச்சுவார்த்தை என்பது கிடையாது, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதுதான் சரியான வழி. எனவே, உச்ச நீதிமன்றம் செல்வதற்காக நேற்று நாங்கள் வழக்கறிஞர்களையும்

சந்தித்திருக்கிறோம். இதுதான் தமிழ்நாட்டினுடைய நிலைமை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மிக விரிவான, மிக ஆழமான, ஒரு பதிலுரையைத் தந்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அளவிலும், நீதிமன்றத்தினுடைய அளவிலும், தமிழர்களுடைய, அதிலும் குறிப்பாக, தென் மாவட்டத்து விவசாயிகளுடைய பாசன உரிமைகளைப் பாதுகாக்க, இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளை, நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

இந்த நேரத்திலே ஒரு மாதத்திற்கு முன்பு, நம்முடைய கேரள முதலமைச்சருடைய பெயரிலே எல்லா பத்திரிகைகளிலும், ஏதோ ஒரு பெரிய ஆபத்து அந்த அணையைச் சுற்றி இருப்பது போலவும், தமிழகத்திற்குத் தரப்படுகின்ற நீரைப் பற்றியோ அல்லது பாசன வசதிகளைத் தருவது பற்றியோ, கேரள மக்களுக்கும், கேரள அரசிற்கும், எவ்விதத் தயக்கமும் இல்லை என்பது பற்றியும், அந்த அணை ஒரு பூகம்ப அபாய எல்லைக்குள்ளே இருக்கின்ற காரணத்தினால், கேரள மக்களுக்கு என்றும் அபாயகரமாக இருக்கின்ற ஒரே காரணத்தினால்தான் அதை எதிர்ப்பது போன்ற ஒரு பெரிய விளம்பரத்தைக் கொடுத்திருந்தார்கள். விவரம் தெரியாத சிலர் அந்த விளம்பரத்தைப் படித்துவிட்டு, அவர்கள் சொல்வதுகூட, அதிலே சில கருத்துகள் சரியாகத்தான் இருக்கின்றன என்பதைப்போல பேசினார்கள். எனவே, அதுசம்பந்தமாக, அத்தகைய ஒரு தவறான பிரச்சாரத்தை முறியடிப்பதற்கு நமது அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது?

இரண்டாவதாக, நம்முடைய அணையினுடைய பாதுகாப்புக்கு— ஏன் என்று சொன்னால் முப்பது நாட்களுக்கு முன்பு அந்த அணையினுடைய வெளிச்சுவரில் - யாரும் அங்கே இருக்கின்ற காவலர்களுக்குத் தெரியாமல், அத்தகைய ஓர் அசம்பாவிதத்தைச் பெரிய அளவிலே செய்திருக்க முடியாது, எந்த ஒரு சாதாரணமான நபரும் நம்பமுடியாத அளவிலே அந்த அணையினுடைய சுவர் இடிக்கப்பட்டிருந்தது. உடனே நம்முடைய அரசு, அதை மத்திய





அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுபோய், அந்த அணைக்கு மத்திய போலீசாருடைய பாதுகாப்பு வேண்டும் என்கிற கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனே வைத்தார்கள். இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் அதை ஆதரித்து, அந்த முல்லைப் பெரியாறு அணைக்கு மத்திய அரசினுடைய Central Security Force அவர்களுடைய பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டிருந்தோம். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? மத்திய அரசு அதை ஒத்துக்கொண்டிருக்கிறதா? அப்படி ஏதாவது இந்த அரசுக்குப் பதில் வந்திருக்கிறதா? இல்லை, மேலும் அப்படிப்பட்ட சம்பவம் நடக்காமல் இருப்பதற்காக, நம்முடைய மாநில அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்கவிருக்கிறது என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுதான் பிரச்சினை. அணை பலமாக இல்லை; அது உடைந்துவிடும் என்று இப்போது வெளியிலே பிரச்சாரம் செய்கிறார்கள். இதே கருத்தை உச்ச நீதிமன்றத்திலே வாதிட்டார்கள். உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாக அந்தத் தீர்ப்பிலே சொன்னது. இது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு வாதம். ஏனென்று கேட்டால், பெரியாறு அணை கட்டப்பட்டிருக்கிறது, பெரியாறு ஆற்றில். அதற்குக் கீழே 50 கிலோ மீட்டரில் இடுக்கி அணை கட்டப்பட்டிருப்பது. Supreme Court சொல்கிறது, "அணை கட்டப்பட்டிருக்கிறது, at the worst condition ஒரு பூகம்பம் ஏற்பட்டு, பிரளயம் ஏற்பட்டு, இந்தப் பெரியாறு அணையே உடைவதாக வைத்துக்கொள்ளுங்கள்; அப்போது அணை முழுக்க தண்ணீர் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்; அப்போது வேண்டுமானால் Maximum 11 t.m.c. வரலாம். இந்த அணை முழுவதும் உடைந்து இந்த வெள்ளம் வருவதானால் இந்த ஆற்றிலேதான் வரும். வந்து நேராக இடுக்கி அணைக்கு வரும். இடுக்கி அணை 55 டி.எம்.சி. கொள்ளளவு உள்ளது. எனவே, பெரியாறு அணை உடைந்து முழு வெள்ளம் வந்தாலும் அது இடுக்கி அணையிலே ஒரு மூலையிலே போய் ஒதுங்கிவிடுமே தவிர, மக்களைப் பாதிக்காது" என்று தெளிவாக சுப்ரீம் கோர்ட் நீதிமன்றத்திலே தெரிவித்திருக்கிற தீர்ப்பு இது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–45*

இந்தத் தீர்ப்பைத்தான் முதலமைச்சர் அவர்களும், நானும் பேசுகிறபொழுதும் அவரிடத்திலே எடுத்துச் சொன்னோம். அணை

பலவீனம் என்று சொல்கிறீர்களே, இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் தவிடுபொடியாக்கி இருக்கிறது. மறுபடியும் அதையே வைத்துப் பேசுகிறீர்களே என்று சொன்னால், அங்கே பேசிவிட்டு, மறுபடியும் போய் விளம்பரம் கொடுப்பது, ஓர் அரசே இப்படிப்பட்ட காரியத்திலே இறங்குகிறபொழுது வேறு என்ன செய்வது என்று கருதுகிறீர்கள்? நம்முடைய முதலமைச்சருடைய பேச்சை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேண்டுமானால் மறுபடியும் நான் ஒரு copy கூட கொடுக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தையின்பொழுது பேசிய பேச்சைப் படித்துப் பார்த்தால், முதலமைச்சர் என்ற ஓர் எல்லைக்குள் அல்லாமல் ஒரு நாட்டினுடைய நலனில் அக்கறை கொண்ட ஒரு தலைவர் பேசுகிற பேச்சைப் போல்தான் அதிலே பேசியிருந்தார். கேரள மக்களிடத்திலே உயிர்ச் சேதம் ஏற்பட வேண்டும் என்று நாம் கருதவில்லை. உயிர் என்பது எல்லோருக்கும் பொதுவானதுதான். கேரளத்திலே ஓர் உயிர் இழப்பதற்குக்கூட நாம் சம்மதிக்கமாட்டோம். நான் அவரிடத்திலே சொன்னேன். இதனால் ஓர் உயிர் போகும் என்று சொல்லுங்கள், நாங்கள் அணையை மறந்து விடுகிறோம் என்றுகூடச் சொன்னேன்.

இரண்டாவது கேட்டேன். '5 மாவட்டங்களில் 35 இலட்சம் மக்களை அடித்துக் கொண்டுபோய் அரபிக் கடலிலே தள்ளிவிடும் என்கிறீர்களே, எப்படி நியாயம்? இந்த வாதத்தை சுப்ரீம் கோர்ட் ஒத்துக்கொள்ளலாம். மக்களிடத்தில், பாமர மக்களிடத்தில் உணர்ச்சியாகப் பேசி கைத்தட்டல் வாங்கி விடலாம். வாதத்திலே எடுபடவில்லையே' என்று சொன்னோம். அந்த வாதங்களுக்கு எல்லாம் அவர்கள் வருவதற்குத் தயாராக இல்லை. அதேபோன்று பூகம்பம் ஏற்படும் என்று சொன்னார்கள். பூகம்பம் வந்தாலும் இந்த அணைக்கு பாதகம் இல்லை என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நியாயம் நம் பக்கம்; உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நம்முடைய பக்கம். ஆகையினாலே, நிச்சயம் இந்தப் பிரச்சினையிலே தமிழகம் வென்று காட்டும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவது, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தெரிவித்தார்கள். அணையைப் பாதுகாப்பது குறித்து. அணைக்குச் சென்று வந்தவர்களுக்குத் தெரியும். அங்கே போலீஸ் இருக்கிறது, கேரளத்துப் போலீஸ். அந்தப் போலீஸுக்கு தமிழக அரசுதான் சம்பளம் கொடுக்கிறது. அந்த அணையிலிருந்து 10 அடி தூரத்திற்குப் பின்னாலே போலீஸ் உட்கார்ந்து இருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே



அணை இடிக்கப்பட்டிருக்கிறது. நேற்று பிரதமரிடத்திலேகூட நான் அதைத்தான் சொன்னேன். 'அணை பலவீனம், பலவீனம் என்று சொல்லி, 10 அடியிலே போலீஸ்—30 போலீஸ், 10, 20 போலீஸ் இருக்கிறார்கள், அணைக்குச் சேதாரம் விளைவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், நாளைக்கு வேண்டாத யாராவது வேறு பல வழிகளில் செய்து, அணைக்கு வேறு ஏதாவது ஆபத்து ஏற்படுத்தினால் என்ன செய்வது? ஏற்படுத்தமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகையினாலேதான் எங்கள் முதலமைச்சர் அவர்கள் மத்திய உள் துறை அமைச்சரிடத்திலே, இதற்கு மத்திய அரசினுடைய ரிசர்வ் போலீஸ் அங்கே போட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்' என்பதையும் நான் பேச்சுவார்த்தையினூடே பிரதமரிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே, இப்போது நாம் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்ட காரணத்தால், மத்திய அரசிடம் நம்முடைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவோம் என்பதுதான் இந்த ஆட்சியினுடைய கருத்தாக இருக்கிறது. எனவே, அணை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் மாறுபட்ட கருத்து இல்லை; நம் உரிமை காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலும் மாறுபட்ட கருத்து இல்லை. எனவே, இந்த அரசு தமிழக விவசாயிகளுடைய நலனைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் ரொம்ப விவரமான விளக்கம் கொடுத்துவிட்டார்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) No, உட்காருங்கள். உட்காருங்கள். தெளிவான விளக்கம் சொன்னதற்குப் பிறகும் திரும்பப் பேசுவது சரியில்லை.

(முற்பகல் 10–50

## (ஆ) பண்ருட்டி, மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தை இரண்டாகப் பிரித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு உள்ளடங்கிய பண்ருட்டி நகரப் பகுதியில் சுமார் 50 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு கிட்டத்தட்ட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருந்து வருகின்றன. அந்த 15,000–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி, அரசு

வழங்குகின்ற மண்ணெண்ணெய் வாங்குவதற்கு பண்ருட்டி நகரத்தில் விழமங்களத்தில் ஒரேயொரு மண்ணெண்ணெய் bunk மட்டும் இயங்கி வருகிறது. வாரத்தில் ஒரு நாள்தான் அந்த bunk–லே மண்ணெண்ணெய் வழங்குகிறார்கள். அப்படி வழங்குகின்றபோது இந்த 50,000 மக்கள், அந்தக் குடும்ப அட்டை வைத்திருக்கிற 15,000–க்கும் மேற்பட்ட மக்கள், குடும்ப அட்டைகளோடு சென்று, அந்த bunk–லே நிற்கின்றபோது, அங்கு ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு, ஒருவரையொருவர் மிதித்து, உயிர்ச் சேதம் ஏற்படுகின்ற அளவிற்குப்போய், காவல் துறை வரவழைக்கப்பட்டு, lathi charge செய்யப்பட்டு, படுகாயம் அடைந்து, மருத்துவமனையிலே சேர்க்கப்படுகிற ஒரு சூழல் இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே கடந்த அ.தி.மு.க.–வினுடைய அரசு காலத்தில் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டு வந்து, உடனடியாக அரசினுடைய நலத் திட்டங்கள் அந்த மக்களுக்குச் சென்று சேர்கின்ற வகையில், அந்த மண்ணெண்ணெய் bunk–ஐ இரண்டாகப் பிரித்து, திருவதிகை, இரயில்வே காலனி, செட்டிப்பட்டறை காலனி, இராசாபாளையம், ஆண்டிக்குப்பம் போன்ற பகுதிகளை உள்ளடக்கி, இரண்டாகப் பிரித்து ஒரு மண்ணெண்ணெய் bunk அமைத்துத் தர வேண்டுமென்று அன்றைய தினம் கேட்டோம். அன்றைய அரசு அதை மறுத்திருக்கிறது.

இன்றைக்கு மிகப் பெரிய ஒரு பதற்றமான சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் மாண்புமிகு நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்தபோதுகூட, மக்களின் சார்பாக அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆய்வு செய்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆய்வு செய்திருப்பார்கள் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பண்ருட்டி பகுதியிலே இருக்கின்ற அந்த 50,000 மக்கள் சமையல் செய்ய மண்ணெண்ணெய் வாங்குகிற அந்த bunk–ஐ இரண்டாகப் பிரித்து, திருவதிகைப் பகுதியிலே ஒரு மண்ணெண்ணெய் bunk அமைப்பதற்கு முன்வர வேண்டுமென்கிற இந்தக் கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்கின்றேன். மேலும், வாரத்திற்கு ஒரு நாள் வழங்குகின்ற அந்த மண்ணெண்ணெயை பொது மக்கள் குடும்ப அட்டைகளை என்றைக்குக் கொண்டுவந்து எண்ணெய் கேட்டாலும், தொடர்ந்து மண்ணெண்ணெய் அந்த மக்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன், வாய்ப்புக்கு நன்றி.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரத்திலே பதினைந்து நியாய விலைக் கடைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே மண்ணெண்ணெய் பெறுவதற்காக ஒரு மண்ணெண்ணெய் bunk அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. பயனாளிகள் என்று பார்க்கிறபோது, 12,062 பயனாளிகள் மண்ணெண்ணெய் பெறுகிறார்கள். அந்த 12,062 பயனாளிகளுக்கு 31 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒரு மாதத்திற்கு வழங்கப்படுகிறது. ஆனால், அங்கே ஒரு மண்ணெண்ணெய் bunk உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம், 8,000 பயனாளிகள் இருக்க வேண்டும். ஆக, 12,000 என்று கணக்கிடுகிறபோது, இரண்டாகப் பிரிக்கிறபோது, 16,000 பயனாளிகள் அங்கே இருக்க வேண்டும், ஒன்று.

இன்னொன்று, ஒரு bunk–ஐ உருவாக்குவதற்கு சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அடுத்து நகரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இடம் அங்கே கிடைக்க வேண்டும். இவை மூன்றும் இருக்கின்றன. ஆனால், இதிலே நம்முடைய பண்ருட்டியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு வேல்முருகன் அவர்கள் தொடர்ந்து—ஏற்கெனவே நான்கூட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது நானும் பார்த்துக்கொண்டிருந்தேன். —அந்த ஆட்சியிலே வலியுறுத்திக் கொண்டிருந்தார். எனவே, அதைச் சிறப்பு இனமாக எடுத்துக்கொண்டு, ஒரு சிறப்புச் சலுகையாக எடுத்துக்கொண்டு, நம்முடைய கருணைக் கடலான தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே அதைச் சீர்தூக்கிப் பார்த்து, 7,000 பயனாளிகள் என்று ஒரு பகுதியாகவும், 5,000 பயனாளிகள் என்று ஒரு பகுதியாகவும், அதைப் பிரித்துக்கொடுக்கலாம். ஆனால், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் அந்த இடம் தருவதற்கு அவர் பொறுப்பேற்றுக்கொண்டு, அங்கே இடம் தருவாரென்று சொன்னால், பண்ருட்டி வேளாண்மை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக அதை நடத்துவதற்கு அரசு முயற்சிக்கும். அப்படி நடத்துவதற்கு அவர்கள் பொருளாதாரம் இடம் தரவில்லையென்று சொன்னால், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நடத்துவதற்கு கட்டாயம் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை உறுதியாக நிறைவேற்றித் தரப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

[2007 ஜனவரி 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) அறிக்கை கொடுக்கிறீர்களா, இல்லையா? Report–ஐக் கொடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Report–ஐக் கொடுங்கள். (குறுக்கீடு) கொடுங்கள், கொடுங்கள், Report–ஐக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** நான் அதைப் பற்றிப் பேசிவிட்டுக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுங்கள். Report–ஐக் கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, Report–ஐக் கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுங்கள். Report–ஐக் கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் 56–வது விதிப்படி இன்று விடுதலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகளைக் கொடுங்கள் நீங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதை அனுமதிக்கிறீர்களா? இதைக் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. 56–வது விதியின்கீழ் வராது. நன்றி தெரிவிக்கும் தீர்மானம், இதிலே, debate–லே வராது அது. உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியென்றால் Zero hour–லே எடுத்துக்கொள்ளுங்கள். Zero hour–லே, முக்கியமான பிரச்சினை.



2007 ஜனவரி 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முடிந்தது, முடிந்தது. இரண்டு issue–விற்கு மேலே எடுக்க முடியாது. (குறுக்கீடு) முடிந்தது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இரண்டு issue–விற்கு மேலே எடுக்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியென்றால் சனிக்கிழமை எடுத்துக்கொள்ளலாம். சனிக்கிழமையாவது எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்க்கலாம். அதைப் பார்க்கலாம்.

முற்பகல் 10–55

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய பத்தொன்பது முதல் இருபத்து ஐந்து வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுத் தலைவர். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று

முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir. எல்லோரும் கேட்கிறார்கள். ஒரு ஐந்து நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திருத்தம், திருத்தம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Zero hour–லே raise பண்ணச் சொன்னீர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தம் சம்பந்தமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :

"1. வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூ.1,500 கோடியில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

2. பாலாற்றின் குறுக்கே வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆம்பூர், வெட்டுவானம், பள்ளிகொண்டா, வேலூர், மேல்விஷாரம், வசூர் வெங்கட்டாவரம், அலமேலுமங்காபுரம், கருகம்பத்தூர், சேண்பாக்கம், சத்துவாச்சாரி ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

3. வேலூர் நகரில் 80 ஆண்டுகளாக இயங்கி வந்த வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை மூடப்பட்டதை மீண்டும் திறப்பது குறித்தும்;

4. வேலூரில் அரசு சட்டக் கல்லூரி துவங்குவது குறித்தும்;

5. வேலூர் நகரில் புதிய பஸ் ஸ்டாண்டுக்கு நகர் ஊரமைப்பு தொகுதி நிதியில் ரூ.5 கோடி மானியம் தந்து பயணிகள் நிழற் கட்டடம், பஸ்கள் நிற்கும் இடம், கடைகள் போன்ற கட்டடங்கள் கட்ட வேண்டிய திட்டம் குறித்தும்;

6. வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக அறிவிக்காதது குறித்தும்;





7. வேலூர் வட்டத்தில் 500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி I.T. Park, Industrial Park தொடங்க வேண்டியது குறித்தும்;

8. வேலூரில் அரசு இசைக் கல்லூரி, இசைப்பள்ளி தொடங்குவது குறித்தும்;

9. வேலூர் மாவட்டத்தில் உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரித்து ரூ.400 கோடியில் பைப்லைன் மூலம் சென்னையில் கடலில் கொண்டுபோய்விடும் திட்டம் குறித்தும்;

10. வேலூரில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் அரசு மானியம் தந்து திறப்பது குறித்தும்;

11. வேலூர் அரசு முத்துரங்கம் கலைக் கல்லூரியில் பெரிய ஸ்டேடியம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. மதுரை எல்லீஸ் நகர்–தத்தநேரி மேம்பாலப் பணிகளை முடித்து திறப்பு விழா செய்வது குறித்தும்;

2. மதுரையில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா, மென்பொருள் பூங்கா மற்றும் குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா துவங்குவது குறித்தும்;

3. அரசினர் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றினை மதுரை பாலரெங்கபுரம் பகுதியில் அமைப்பது குறித்தும்;

[திரு. என். நன்மாறன்] [2007 ஜனவரி 25

4. மதுரை கிழக்குத் தொகுதியில் சென்னை குடிநீர் வழங்கல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பாதாள சாக்கடை திட்டப் பணிகளை நிறைவேற்றுவது குறித்தும்;

5. கல்வியில் இடைநிற்றலைத் தவிர்க்க அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்தும் நடவடிக்கையினை மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் நிறைவேற்ற வேண்டியது குறித்தும்;

6. மதுரை மற்றும் அனைத்து மாநகராட்சிகளிலும் பூமிக்கு அடியில் மின்வயர்களைப் பதிக்கும் நடவடிக்கை குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய மாவட்டத்திற்குத் திருக்கோவிலூரைத் தலைநகரமாக அமைப்பது குறித்தும்;

2. கடலூர்-சித்தூர் மாநில நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க மத்திய அரசை வலியுறுத்துவது குறித்தும்;

3. ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் தொடங்குவது குறித்தும்;

4. விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் சிவில் நீதிமன்றம் தொடங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2007 ஜனவரி 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலியை உயர்த்தி நிர்ணயம் செய்வது குறித்தும்;

2. வால்பாறை தொகுதியில் நெல்லித்துறை, மன்னம் பாலாற்றுப் பாலம், அர்த்தநாரி பாளையம் பாலாற்றுப் பாலம் அமைப்பது குறித்தும்;

3. வால்பாறை தொகுதியில் 30 ஆண்டுகளாகக் குடியிருப்போருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

4. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைப்பது குறித்தும்;

5. வால்பாறையில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம், கூடுதல் வகுப்பு அறைகள், பெஞ்சு, கழிப்பிட வசதிகள் செய்து தருவது குறித்தும்;

6. வால்பாறை அரசு மருத்துவமனை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளை விரிவுபடுத்துவது குறித்தும்;

7. வால்பாறையில் யானைகள் வீடுகளை இடித்துத் தள்ளுவதைத் தடுக்க மின்வேலி அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

8. வால்பாறையில் ஆழியாறு முதல் புல்மலை வரை ரோப் கார் விட நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

9. வால்பாறையில் மகளிர் காவல் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

10. வால்பாறைக்கு மாற்றுவழிப் பாதை அமைப்பது குறித்தும்;

11. வால்பாறையில் சுற்றுலா மையம் அமைப்பது குறித்தும்;

[திரு. கோவை தங்கம்] [2007 ஜனவரி 25

*12.* வால்பாறை தொகுதி தென்சங்கம்பாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.:

"*1.* அரியலூர் தொகுதி வி.கைகாட்டியில் காவல்நிலையம் அமைப்பது குறித்தும்;

*2.* அரியலூர் தொகுதி கண்டிராதீர்த்தம் ஏரி, வேட்டக்குடி ஏரி, சுக்கிரன் ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாருவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"*1.* திருத்தணி பகுதிகளை தமிழகத்தோடு மீட்டு எடுத்த வடக்கு எல்லை போராட்டத் தியாகிகளுக்கு உதவித் தொகைகளை அரசு வழங்குவது குறித்தும்;

*2.* பள்ளிப்பட்டு தொகுதியில் ஆந்திரா மாநிலத்தை இணைக்கும் புதிய பாலம் ஒன்றை குசஸ்தலை ஆற்றின் குறுக்கே சொரக்காய்பேட்டை அருகே அமைப்பது குறித்தும்;



2007 ஜனவரி 25] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

*3.* தேசிய இயக்கத்தின் மூத்த தலைவர் திருமிகு ஜி.கே. மூப்பனார் அவர்களின் பவள விழாவினையொட்டி முழு உருவச் சிலை ஒன்றை அவர் வாழ்ந்த மயிலாப்பூரில் அரசின் சார்பாக அமைப்பது குறித்தும்;

*4.* மறைந்த தமிழறிஞர் திருமிகு கிருபானந்த வாரியார் அவர்களுக்கு அவரது நூற்றாண்டையொட்டி மணிமண்டபம் ஒன்றை அமைப்பது குறித்தும்;

*5.* தமிழக முதல்வர் கலைஞரின் படைப்புகள், பணிகள் அனைத்தும் வெகுஜன மக்களைச் சென்றடையும் வண்ணம் அவற்றை உள்ளடக்கிய குறும் படங்களை அரசு தயாரித்து அவற்றைத் தொலைக்காட்சிகளிலும், திரை அரங்குகளிலும் வெளியிடுவது குறித்தும்;

*6.* தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்ததைப் போன்று திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்துவது குறித்தும்;

*7.* மத்திய அரசு ஆண்டுதோறும் செய்வதுபோல வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கான மாநாடு ஒன்றை தமிழக அரசு இந்த ஆண்டு சென்னையில் நடத்துவது குறித்தும்;

*8.* பள்ளிப்பட்டு தொகுதியில் புதிய போக்குவரத்துப் பணிமனை ஒன்று தொடங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

[திரு. கே.வீ. ராமநாதன்] [2007 ஜனவரி 25

"1. பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான பவானி ஆற்றின் குறுக்கே வைராமங்கலம், தளவாய்பேட்டை இணைப்புப் பாலம் அமைப்பது குறித்தும்;

2. ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பூனாட்சி ஊராட்சியில் இராமச்சந்திரா காலனிக்கு மேற்புறம் சித்தாறு ஓடையில் ஒரு தடுப்பு அணையும், சித்தார் அருகில் கலுக்கஹூரில் ஒரு தடுப்பு அணையும் அமைப்பது குறித்தும்;

3. பவானி நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக பவானிக்கு வெளியே புற வழிச் சாலை, தருமபுரி, மேட்டூர் வழியாக வரும் வாகனங்கள் குருப்பநாய்க்கன்பாளையத்தில் இருந்து காடையாம்பட்டி வந்து காடையாம்பட்டியில் இருந்து பவானி ஆற்றின் குறுக்கே மூலப்பாளையத்திற்கு இணைப்புப் பாலம் அமைத்து லட்சுமி நகர் வழியாக நெடுஞ்சாலை இணைப்புக்கு புதிய பாதை அமைப்பது குறித்தும்;

4. புராதனச் சின்னமாக விளங்கும் பவானி சங்கமேஸ்வரர் கோவிலுக்கு வரும் பக்தர்கள் ஆற்றில் நீராடுவதற்குத் தகுந்த படிக்கட்டுகளும், உடை மாற்றும் அறைகளும், பவானி சாகர் அணையிலிருந்து வெள்ளப்பெருக்கு ஏற்படும்பொழுது பவானி நகருக்குள் தண்ணீர் புகுந்து ஏற்படும் சேதத்தை முன்னெச்சரிக்கையாகத் தடுப்பதற்கு பவானி மேற்குக் கரையோரமான பவானி காளிங்கராயன் அணையிலிருந்து பவானி ஆற்றுப்பாலம் வரை தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

5. அந்தியூர் பர்கூர் மலைப்பகுதியில் இருந்து மழைக் காலங்களில் வரும் தண்ணீர் சித்தாறு ஆற்றின் வழியாக வந்து முகாசிப்புதூர் ஊராட்சி பெரிய ஏரி வழியாக தண்ணீர் வழிந்து வீணாக வெளியேறி ஆற்றில் கலக்கிறது. அத்தண்ணீரை வீணாக்காமல் பெரிய ஏரி, எட்டிக்குட்டை ஏரி, தாமரை ஏரி ஆகிய ஏரிகளைச் சீர்செய்து பயன்படுத்துவது குறித்தும்;

6. ஈரோடு மாவட்டம், பவானியில் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் (யூனிட் ஆபீஸ்) நிறுவுவது குறித்தும்;

7. அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கேசரிமங்களத்தில் ஆற்று ஓரப் பகுதியில் படிக்கட்டுகள் இல்லாததால் பொதுமக்களுக்கும், குடிநீர் வாரியத்துக்கும் உபயோகப்படும் வகையில் படிக்கட்டுகள் அமைப்பது குறித்தும்;



2007 ஜனவரி 25] [திரு. கே.வீ. ராமநாதன்]

8. அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கேசரிமங்களம் ஊராட்சியிலுள்ள குப்புச்சிபாளையம் ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

9. அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் காடப்பநல்லூர் ஊராட்சி, காடப்பநல்லூர் மயானம் வழியாக கோவில்பாளையம் செல்லும் சாலையில் ஓடையின் மீது பாலம் அமைத்து மயானத்திற்கு அருகில் ஆற்று ஓரம் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

10. பவானியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

11. பவானி நகரில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியது குறித்தும்;

12. பவானி தொகுதியில் அனைத்துப் பள்ளிகளுக்கும் தேவையான மேஜைகள், இருக்கைகள் வழங்குவது குறித்தும்;

13. பவானி தொகுதியில் சாலைகள் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. தருமபுரி மாவட்ட மக்களின் சுமார் 40 ஆண்டு கால கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டு துவக்குவது குறித்தும்;

[திரு. இல. வேலுசாமி] [2007 ஜனவரி 25

2. தருமபுரி மாவட்டத்தில் அரசு மகளிர் கல்லூரி துவக்குவது குறித்தும்;

3. தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் துவக்குவது குறித்தும்;

4. தமிழக அரசின் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்கிற கொள்கை முடிவின்படி, தருமபுரி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவது குறித்தும்;

5. தருமபுரி மாவட்டத்தில், மாவட்ட நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் துவக்குவது குறித்தும்;

6. தருமபுரி மாவட்டத்தில் மீன் கொள்முதல் நிலையங்கள் துவக்குவது குறித்தும்;

7. தருமபுரி மாவட்டத்தில் அனைத்துப் புறம்போக்குகளிலும் வீடுகட்டி சுமார் 10 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவு நீர் ஒரத்துப்பாளையம் அணையில் கலந்து நிலத்தடி நீரைக் கெடுப்பதால், அந்தக் கழிவு நீரை பைப்லைன் மூலம் நாகை பகுதியில் கடலில் கொண்டு போகும் ரூ. 800 கோடி திட்டம் குறித்தும்;



2007 ஜனவரி 25] [திரு. ஆர்.எம். பழனிசாமி]

2. ஈரோடு சாயப்பட்டறை தோல் தொழிற்சாலைக் கழிவு நீர் காளிங்கராயன் வாய்க்காலில் கலந்து நிலத்தடி நீரையும், விளை நிலங்களையும் பெரிதும் பாதிப்பதால் இந்தக் கழிவு நீரை பைப்லைன் மூலம் நாகை பகுதிக்குக் கொண்டுபோக ரூ. 800 கோடியில் நிறைவேற்றும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. கைத்தறி நெசவாளர்களுக்குக் கடந்த பல ஆண்டுகளாக உயர்த்தப்படாத அகவிலைப்படி, மாத ஓய்வூதியம் மற்றும் கூலி உயர்வு உயர்த்தப்படுவது குறித்தும்;

2. நெசவாளர்களுக்கு ஹட்கோ வங்கியில் வழங்கப்பட்ட வீட்டுக் கடன் வட்டியைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

3. ஈரோடு மாவட்டத்தில், திருப்பூர் சாயக் கழிவு நீரால் நொய்யலாற்று ஒரத்துப்பாளையம் அணையில் ஏற்பட்டுள்ள மாசினைத் தடுக்க நிரந்தரத் தீர்வு காண்பது குறித்தும்;

4. நொய்யலாற்று ஒரத்துப்பாளையம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும்;

5. பெருந்துறை சிப்காட் தொழிற்சாலைக் கழிவு நீரினால் ஏற்பட்ட பாதிப்பை நிரந்தரமாகத் தடுப்பது குறித்தும்;

6. கடந்த பல ஆண்டுகளாக நிலுவையிலுள்ள காங்கேயம் நீதிமன்றத்திற்குப் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

7. ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக அறிவிக்காதது குறித்தும்;

8. பால் கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்தும்;

9. காங்கேயம் தொகுதியில் ஏற்றுமதி சிறப்பு மென்பொருள் மற்றும் பொருளாதார மண்டலம் அமைப்பது குறித்தும்;

10. ஈரோடு நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஆய்விலுள்ள இரண்டு மேம்பாலங்கள் மற்றும் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்:

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. சத்துணவுடன் வாழைப்பழத்தை அளித்தால் விவசாயிகள் மிகவும் பயனடைவார்கள் என்பது குறித்தும்;

2. தொட்டியம் அரசு மருத்துவமனையில் காலியாகவுள்ள இடங்களை நிரப்புவது குறித்தும்;

3. காட்டுபுத்தூர் பெரிய வாய்க்கால் கரையைப் பலப்படுத்துவது குறித்தும்;

4. தாத்தையங்கார்பேட்டையில் உள்ள சுமார் 16 சிறிய, பெரிய ஏரிகளின் கரைகளைப் பலப்படுத்துவது குறித்தும்;

5. ரெட்டியார்பள்ளி ஏரியிலிருந்து மங்களம் ஏரிக்கரை வரையுள்ள மண் வாய்க்காலால் தண்ணீர் சேதமடைவதைத் தடுக்க சிமெண்ட் வாய்க்காலாக மாற்றுவது குறித்தும்;

6. ஸ்ரீராம் சமுத்திரத்திலிருந்து பல ஆண்டுகளாக தற்காலிக தண்ணீர் குளம் அமைத்து 11,000 ஏக்கர் நீர்ப்பாசனம் பெறுவதை மாற்றி,





நிரந்தர குளம் அமைப்பது மற்றும் முல்லைபாடி வாய்க்காலில் இரண்டு இடங்களில் பாலம் கட்டுவது குறித்தும்;

7. தொட்டியம் தாலுகாவிற்கென நிரந்தரக் கட்டடம், இடம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. பாலாற்றின் குறுக்கே பாலூர், செங்கற்பட்டு, வல்லிபுரம், எடையாத்தூர் ஆகிய இடங்களில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

2. மாமல்லபுரம்–கல்பாக்கம்–திருக்கழுக்குன்றம்–செங்கற்பட்டு–காஞ்சிபுரம்–அரக்கோணம்–திருத்தணி–திருப்பதி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்தும்;

3. மாமல்லபுரம், நெரும்பூர், குண்ணவாக்கம் ஆகிய இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர மருத்துவமனைகளாக நிலை உயர்த்துவது குறித்தும்;

4. செங்கற்பட்டு நீஞ்சல் மடுவு அணை, சாத்துரான் கால்வாய் புதுப்பிப்பது குறித்தும்;

5. செங்கற்பட்டு நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைப்பது குறித்தும்;

6. செங்கற்பட்டு தொகுதியிலுள்ள அனைத்துப் பாசன ஏரிகளையும் ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்துவது குறித்தும்;

7. சென்னை விமான நிலையத்தினை வேறு இடத்தில் புதுப்பொலிவோடு அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

[2007 ஜனவரி 25

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. நெசவாளர் கடன் தள்ளுபடி செய்வது குறித்தும்;

2. முதியோர் உதவித் தொகையை ஆண் மக்கள் இருந்தும் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு வழங்குதல் குறித்தும்;

3. காஞ்சிபுரத்தில் ஆண், பெண் இருபாலர்களுக்கும் புதிதாக அரசு கலைக் கல்லூரிகள் துவக்குவது குறித்தும்;

4. காஞ்சிபுரம் தொகுதியில் மகளிருக்கான தொழிற்பேட்டை ஆரம்பித்தல் குறித்தும்;

5. காஞ்சிபுரம் நகரிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல் குறித்தும்;

6. காஞ்சிபுரம் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் குறித்தும்;

7. காஞ்சிபுரம் தொகுதி, திருப்புட்குழி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள அலுவலர்கள் குடியிருப்பைப் பழுது பார்த்தல் குறித்தும்;

8. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்குப் போதிய புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

9. காஞ்சிபுரத்திலுள்ள நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிர் பெற நிதி உதவி வழங்குதல் குறித்தும்;

10. படித்த இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற புதிய தொழிற்பேட்டை காஞ்சிபுரத்தில் உருவாக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2007 ஜனவரி 25]

***திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"திருப்பூர் தொகுதியில் சாயக் கழிவினால் பின்னலாடை தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கும் அறிவிப்பினை ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கண்ணன்.

**திரு. வே. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் எனது கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பைத் தந்த தங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். செஞ்சி அருகே உள்ள பெருங்காப்பூர் எனும் குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு செஞ்சி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பதவியும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் செஞ்சி தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பும் தந்து சட்டமன்ற உறுப்பினராக்கிய, ஏற்கெனவே நான்கு முறை தமிழக முதல்வராக இருந்து தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தனது முதல் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தையே விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில், செஞ்சிக் கோட்டையில் தொடங்கி, புனித ஜார்ஜ் கோட்டையில் ஐந்தாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் பல்வேறு சாதனைகளைப் புரிந்து, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் பாராட்டும் வகையில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழ் இனத் தலைவர், முத்தமிழ் அறிஞர் அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்

நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். இனமானப் பேராசிரியர், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்து, பிரச்சாரத்தின் நிறைவு நாளன்று எனது செஞ்சி தொகுதிக்கு வந்து கொளுத்தும் வெயிலில், உணவுகூட உண்ணாமல், சிறப்பாகப் பிரச்சாரம் செய்து, விழுப்புரத்தில் நிறைவு செய்த, உறங்காத தேனீயின் உழைப்பே! உள்ளாட்சி மூலம் நல்லாட்சி நிகழ்த்திட, இன்றும், என்றும் நாட்டில் இல்லாமை, கல்லாமைகளை அகற்ற அவதரித்த, திராவிட இயக்கத்தின் வழித் தோன்றலே! எங்களின் வழிகாட்டியே! இளைய தலைவர் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செஞ்சி தொகுதியில் எனக்கு வாய்ப்பளிக்க பரிந்துரைத்து இரவு, பகல் பாராமல் தேர்தல் பிரச்சாரம் செய்து என் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து, என்னை வெற்றி பெறச் செய்தமைக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் அல்லும், பகலும் அயராது உழைத்து தேர்தல் பணியாற்றி, வெற்றிக் கனியை மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் கரங்களில் கொடுத்திருக்கும் செயல்வீரர், விழுப்புரம் மாவட்டச் செயலாளர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இம்மாமன்றத்தில் என்னை உறுப்பினராக்கிய செஞ்சி தொகுதி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல் எனது வெற்றிக்கு அயராது பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனது கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கழக ஆட்சி அமைந்து, மேதகு ஆளுநர் அவர்கள் இரண்டாவது முறையாக ஆற்றியுள்ள இந்தப் பேருரையில், மக்கள் நலன் காக்கும் பல திட்டங்கள் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அரசின் சமூக நீதிப் பாதுகாப்பும் சொல்லப்பட்டுள்ளது. தலைவர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற இடத்திலேயே பொறுப்புணர்வுடன்



செயல்பட்டு, ஏழையெளிய மக்களின் ஒரு நாள் ஊதியத்தில், அவர்களுக்கு ஒரு மாதம் உணவு கிடைக்கும் வகையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தந்தார். படிக்கும் குழந்தைகளுக்குச் சத்துணவில் முட்டை தந்து, உழவர்களுக்குக் கடன் தள்ளுபடி செய்தார். இம்மாதிரிக் கடமைகளால்தான், பின்னர் வந்த உள்ளாட்சித் தேர்தல்களிலும் தொடர்ந்து கடமைகள் செய்ய மக்கள் ஆணையிட்டார்கள்.

சமூக நீதி அறிந்தவர்; அதனால்தான் தமிழக வரலாற்றிலேயே இல்லாத சமத்துவப் பொங்கலை இந்த ஆண்டு படைத்தார். ஒரேயொரு வேண்டுகோள் வைத்தார்! ஊர் முழுக்க இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் ஒற்றுமையோடு அமர்ந்து உணவருந்தி மகிழ்ந்தார்கள். விவசாயிகள், விவசாயக் கடன் இல்லாமல் கொண்டாடிய பொங்கல் திருநாள் இந்த ஆண்டு பொங்கல்தான். இந்தச் சிந்தனை யாருக்கு வரும்; எங்கள் தலைவரை விட்டால்; வேறு யாருக்கும் வருவதில்லை.

படிக்கும் மாணவர்களுக்கு இலவச சைக்கிள்; அவர்களின் தொழிற்கல்விப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு இரத்து என எல்லாத் தரப்பையும் சரிசமமாகக் கொண்டார். அப்படிக் கொண்டதால், மக்கள் சரித்திரத்தில் நின்றார். மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த, சேவை வரி விதிப்பு நமக்கே வேண்டும் என்றார். பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அரசு புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக் குடியிருப்போரில், தகுதியானவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா என்றார். வருங்கால உலகை வளமாக்கப் போகும் மாணவர்களுக்கு, அவர்கள் படிக்கும் பள்ளிகளிலேயே கணினி ஆய்வுக் கூடங்கள்; உலகமே தெரியாத வறுமைக் கோட்டிற்குக்கீழேயுள்ள மக்களுக்கு, அந்த உலகைத் தெரிந்துகொள்ள, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; அடுப்படியில் உள்ள பெண்களின் கண்களில் தண்ணீர் வராதபடி, அதற்குச் சிந்தித்து, அவர்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகள்; பெண்கள் சுயமாக நிற்க, அவர்களுக்குச் சுய உதவிக் குழுக்கள்.

இப்படியெல்லாம் ஊக்கப்படுத்தும் எங்கள் தலைவர், இந்தியாவிலே எல்லோருக்கும் முன்மாதிரியானவர். வீட்டுப் பணியாளர்களுக்கு ஒரு வாரியம்; ஊனமுற்றோருக்கு ஒரு வாரியம்; மீனவர்களுக்கு ஒரு வாரியம் என இந்த ஆளுநர் உரையில் மூன்று வாரியங்களைக் கண்டார். இப்படி ஒட்டுமொத்தச் சமுதாயத்தோடு ஒட்டி உறவாடும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், என் தொகுதி மக்களோடும் ஒட்டி உறவாட

[திரு. வே. கண்ணன்] [2007 ஜனவரி 25

வேண்டுமென்று சொல்லி, எனது தொகுதிப் பிரச்சினைகளை இந்தப் பேரவையின்மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களின்முன் கனிவோடு வைக்கின்றேன்.

வரலாற்றையும், வரலாற்று நினைவிடங்களையும் போற்றிப் பாதுகாத்துவரும் முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்கும், அடிமைத்தனத்தை எதிர்த்தும், வீர வரலாறு கொண்டதுமான செஞ்சிக் கோட்டையை ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும்.

நாளுக்கு நாள் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால், செஞ்சிக் கோட்டைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், இராஜகிரி, கிருஷ்ணகிரி கோட்டைகளுக்கு இடையே கம்பி இழுவை வானூர்தி (Rope Car) அமைத்துத் தர வேண்டும்.

மேலும், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு தங்கும் விடுதி, தமிழ்நாடு ஓட்டல், அருங்காட்சியகம், கோட்டையின் உள்ளே இருக்கும் செட்டிக்குளத்தில் படகு சவாரி, கோட்டையின் நுழைவு வாயிலில் அலங்கார வளைவு அமைத்து, அங்கு தேசிங்கு ராஜனின் சிலை ஆகியவற்றை நிறுவ வேண்டும். அத்துடன், தேசிங்குராஜன் போரில் வீர மரணம் அடைந்த இடத்தில், மணி மண்டபம் கட்டுவதற்கான பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 1989–1991 ஆம் ஆண்டு நமது கழக ஆட்சி இருந்தபோது, அன்றைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைச்சராய் இருந்து, இன்றைக்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சராக விளங்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முயற்சியால், திருக்கோவிலூர்–தென்பெண்ணை ஆற்றிலிருந்து, செஞ்சி–அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் ஆறு கோடி செலவில், அன்றைய மத்திய அமைச்சர், நம்முடைய நினைவில் வாழும், மாண்புமிகு முரசொலியார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றது. பின்னர், இத்திட்டத்தில் இல்லாத பல கிராமங்களுக்கு, இதே திட்டத்தில் குடிநீர் எடுக்கப்பட்டது. இதனால், செஞ்சி நகருக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, மாதத்தில் பத்து நாட்களே குடிநீர் விநியோகம் நடந்து வருகிறது. அத்துடன் இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்ததைவிட, மக்கள் தொகை தற்போது மூன்று மடங்காகப் பெருகியுள்ளது. எனவே, செஞ்சி நகருக்கென, தற்போது உள்ள திட்டத்திலேயே திருக்கோவிலூரிலிருந்து, செஞ்சிக்கு நேரடியாக, தனி pipeline ஏற்படுத்தி, தினசரி குடிநீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 25] [திரு. வே. கண்ணன்]

முற்பகல் 11–10

எனது செஞ்சி தொகுதியில் அரசு சார்பில் எந்தக் கல்லூரியும் இல்லை. எனவே, இங்கு ஒரு கலைக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

செஞ்சி தாலுகாவிலுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் செஞ்சியில் ஓர் உழவர் சந்தை அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகள் நலனுக்காக வெட்டப்பட்ட நந்தன் கால்வாய் தற்போது பயன் இல்லாமல் இருக்கின்றது. இதை மேம்படுத்தி, சாத்தனூர் அணையிலிருந்து உபரி நீரை செஞ்சி பகுதி ஏரிகளுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

செஞ்சி, சங்கராபரணி ஆற்றில் தொட்டி–ராஜாம்புலியூர் இடையே மேம்பாலம் கட்டித் தரவேண்டும். அதேபோல், மணியம்பட்டு–கொங்கரப்பட்டு இடையே செல்லும் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடவம்பாக்கம்–சிறுமயிலூர் இடையே செல்லும் ஓங்கூர் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

செஞ்சியில் தற்போது சார்பு நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. எனவே, இவற்றிற்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டும்.

செஞ்சி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனைக்கு நிகரான அனைத்து வசதிகளுடன் தரம் உயர்த்தி, மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வல்லம் மற்றும் ஆவணிப்பூரில் தீயணைப்பு நிலையங்களை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓலக்கூர் சாரம் நூற்பாலை பல ஆண்டுகளாக மூடப்பட்டு கிடக்கின்றது. இதனால் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பயன்பெறும் வகையில், அந்த இடத்தில் புதிதாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

உலகில் தாய் தமிழ் காக்க தங்கள் தேக்குமர உடல்களைத் தீக்குளித்தவர்களுக்கு, தமிழ் மொழி காக்க தீக்குளித்தவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி, இந்த அவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. *(குறுக்கீடு)* Mike சரியாக இருக்கிறது அம்மா, பேசுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில் நான் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த எங்கள் சட்டமன்றப் பேரவையினுடைய, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அருமைச் சகோதரர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கிய, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையே இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கையாக அமையப்பெற்று, பதவியேற்ற 8 மாதங்களுக்கு உள்ளாக 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற இந்த அரசினுடைய உறுதிமொழி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதிலே மாற்றுக் கருத்து எதுவும் கிடையாது. ஆளுநர் உரையின் 30–வது பக்கத்திலேயும், 31–வது பக்கத்திலேயும் 52–வது பத்தியிலே, அந்தத் திட்ட அறிவிப்புகளில், மொத்தமாக இந்த 8 மாத காலங்களிலே என்னென்ன திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஒன்று விடாமல் வரிசைப்படுத்தி இருக்கின்றீர்கள். உண்மையிலேயே பசிக்கிற நேரத்திற்குச் சாப்பாடு கொடுத்தால் அதனுடைய ருசியே தெரியாமல்





சாப்பிடுவார்கள். கொஞ்சம் வயிறு மந்தமாக இருந்தால் அந்தச் சாப்பாடே அவர்களுக்கு கசக்கக்கூடிய சூழ்நிலைமை இருக்கும். ஆனாலும்கூட, பசித்த நேரத்திலே தமிழகத்து மக்களுக்கு மிக அருமையான உணவுகளாக உங்களுடைய திட்டங்கள் அடுக்கடுக்காக வந்த காரணத்தினாலே... *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்குத் தமிழகத்து மக்களுடைய எதிர்பார்ப்புகள் குறைந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, நீங்கள் அறிவித்திருக்கின்ற அந்தத் திட்டங்கள் உங்களாலேயும், அமைச்சர் பெருமக்களாலேயும் இப்பொழுது ஒவ்வொரு பகுதியிலே, ஒவ்வொரு கட்டத்திலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும், உண்மையிலேயே இந்த முறை நான் சட்டமன்ற உறுப்பினரானதற்குப் பெருமைப்படுகிறேன். காரணம், என் தொகுதிக்கு எந்தக் காலகட்டத்திலும் எந்த முதல்வரும் வந்ததில்லை. தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுப்பதற்காக, தமிழகத்தின் முதல்வரான நீங்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தீர்கள். அந்தத் தனித் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் உங்களைப் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அந்தத் தொகுதியிலே தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிய காரணத்தினாலே எனக்குப் பெருமை கிடைத்தது.

*முற்பகல் 11–15*

அதுமட்டுமல்ல, அதையடுத்து மத்திய அரசாங்கத்தின்மூலமாக NATRIP என்கின்ற ஒரு திட்டத்தை கொண்டு வருவதற்காக 303 ஏக்கர் நிலம் என்று நினைக்கின்றேன். அதனை மத்திய அரசாங்கத்திற்கு வழங்கி, என்னுடைய தொகுதியிலே ஓரகடம் பகுதியிலே ஒரு மிகப் பெரிய திட்டத்தை அமைத்திட எங்கள் அருமை அன்னை சோனியா காந்தி அவர்களையும் வரவழைத்து, இந்தியத் திருநாட்டினுடைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும் வரவழைத்து, நீங்களும் அங்கே வருகைதந்து, மத்திய மாநில அமைச்சர்கள் அத்தனைபேரும் அங்கே படையெடுத்து, அந்த மிகப் பெரிய தொழிற்சாலைக்குத் துவக்க விழாவை நடத்தி இன்னும் பெருமைக்குப் பெருமை சேர்த்தீர்கள்.

ஒரே மாதத்திற்குள்ளாக இந்த நாட்டினுடைய பிரதம மந்திரியும், இந்த நாட்டை வழி நடத்திச் செல்லக்கூடிய எங்கள் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற அன்னை சோனியா காந்தியும், தமிழகத்தினுடைய சர்வ வல்லமை படைத்த முதல்வராக இருக்கின்ற

[திருமதி டி. யசோதா] [2007 ஜனவரி 25

தாங்களும் ஒட்டுமொத்தமாக என் தொகுதியில் கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீங்கள் உங்களுடைய பயணத்தைத் தொடங்கினீர்கள், முடித்தும் காட்டினீர்கள் என்கின்ற பெருமை என்னுடைய தொகுதிக்கு மட்டும்தான் கிடைத்திருக்கின்றது என்ற அந்தப் பெருமகிழ்ச்சி எனக்கு. நெஞ்சார உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், என் தொகுதி மக்கள் சார்பாக.

அதேபோல, 'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா' என்கின்ற நிலை மாறி, கேட்டதும் கொடுப்பவர் நம்முடைய தமிழக முதல்வர் என்கின்ற காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதிக்கு—போக்குவரத்து என்று நான் சொல்வது, மந்திரி குமாரி திரைப்படத்திலே ஒரு காட்சியைப் பார்த்தேன். எல்லோரும் அவரவர்களுக்கு ஒரு மந்திரி பதவி கேட்பார்கள்; ஒருவன் வந்து கேட்பான், 'ஐயா நீங்கள் போ என்றால் போகிறேன், வா என்றால் வருகிறேன்,' எனக்கு எந்தப் பதவியும் கிடையாதா என்று; 'சரி நீ போ என்றால் போகிறாய், வா என்றால் வருகிறாய் இல்லையா, நீ தானடா போக்குவரத்து மந்திரி' என்று சொன்னார். அதுபோன்ற நிலை இல்லாமல், தலைவருக்கு நல்லதொரு பக்க துணையாக இருந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பேருந்து போகாத ஊர்களுக்கு எல்லாம் வழங்கி வருகின்றார். ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு, கிட்டத்தட்ட இந்த ஆறு மாத காலத்திலேயே 20 பேருந்துகளை விட்டிருக்கின்றார்கள். அந்தத் தொகுதியில் புதிய வழித்தடங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைத்து, 66 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு அடையாள அட்டையும் வழங்கிய உங்களுடைய அந்த நல்ல மனதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாயிகளுக்குத்தான் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுத் துறையிலே இரத்து; 50,000 ஏக்கர் நிலத்தை 25,000 பேருக்கு வழங்கி, அவர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வீதம் கொடுத்து, அவர்களை ஊக்குவித்தீர்கள். 56 சதவிகிதம் விவசாய மக்கள் இப்பொழுது இருக்கின்றார்கள். 56 சதவிகிதம் இருக்கின்ற அந்த மக்களுக்கு இப்பொழுது உங்களுடைய பார்வைதான். உங்கள் பார்வையிலே அவர்களுடைய வாழ்க்கை இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



2007 ஜனவரி 25] [திருமதி டி. யசோதா]

முற்பகல் 11-20

வேளாண்மைத் துறை, குறைந்தபட்சம் 4 சதவிகிதமாவது வளர்ச்சியடைய வேண்டுமென்கிற இலக்கை நீங்கள் கொண்டு செயல்படுவது, பாராட்டுக்குரியதுதான். நீர்வள ஆதாரத்தை மேம்படுத்த, விரைவில் உலக வங்கியிடமிருந்து நிதியுதவியினை எதிர்பார்த்து, 6 இலட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பயனடைவதற்காக, விவசாயிகளினுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்று, பல உதவிகளையும், சலுகைகளையும் வழங்கி, கடன்களை இரத்துச் செய்தும், அவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றிவரும் நமது முதல்வர் அவர்களுடைய அரசு, தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக, பச்சைப்பசேலென்று விளையும் நன்செய் நிலத்தை சிப்காட் கையகப்படுத்துவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு இரண்டு கண்கள் அடிப்படை என்று சொன்னால், ஒன்று விவசாயம். மற்றொன்று தொழில் துறை. ஆனால், தொழில் துறை சிறக்க வேண்டும் என்பதற்காக, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற எல்லா நிலங்களையும் SIPCOT அபகரித்துக் கொள்வது எந்தவகையிலே நியாயம்? பச்சைப்பசேலென்று இருக்கின்றது விளைநிலங்கள். அந்த விளைநிலங்களையெல்லாம் இப்பொழுது எடுத்துக் கொள்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நான் சென்ற மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பாகவே நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே ஒரு மனு கொடுத்தேன். நன்செய் நிலங்களை எடுக்கின்றார்கள் ஐயா, நீங்கள் தடுக்க வேண்டுமென்று. அவர் உடனே அதைக் குறிப்பெடுத்தார். அதற்குப் பிறகு இப்பொழுதும் நன்செய் நிலங்கள் எடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அந்த நன்செய் நிலங்களை எடுப்பதைத் தயவுசெய்து நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொகுதி தனித் தொகுதி. அதிலும் குறிப்பாக, ஓரகடம் பஞ்சாயத்து, சென்னீர்குப்பம், மாம்பாக்கம், இதிலேயெல்லாம் பஞ்சாயத்துத் தலைவரும் ஒரு S.C. தி.மு.க.காரர்—தி.மு.க.வைச் சேர்ந்தவர். Councillor, தி.மு.க.வைச் சேர்ந்தவர். அவரும் ஒரு S.C. District Council Member-ஆக இருப்பவர், தி.மு.க.காரர். அவரும் ஒரு S.C.

சட்டமன்ற உறுப்பினர், நானும் S.C. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். M.P.–யும் ஒரு S.C. அவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். ஒட்டுமொத்தமாக நம்முடைய கூட்டணிதான் அங்கே இருக்கிறது. இந்த நன்செய் நிலங்கள் எடுக்கப்படுகின்றன என்று சொன்னால், மக்களுடைய கோபம் எங்கள்மீது திரும்பக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்கின்ற காரணத்தினாலேதான், இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பத்தாண்டுகள் குடியிருந்தால், அந்த மக்களுடைய இடங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அது மிகப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. அதேநேரத்திலே, ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, திரு. பி. அப்பாவு அவர்கள் எம்.எல்.ஏ.வாக இருந்தபோது, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக, கிட்டத்தட்ட 44 ஆதி திராவிடர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த 44 ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு மனைகள்—காங்கிரஸ் ஆட்சி என்றால், உங்களுக்கே தெரியும். கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்ட இடம். அந்த 44 வீட்டு மனைகளை இப்பொழுது SIPCOT எடுத்துக்கொள்வதற்கு, அவர்களுக்கு notice கொடுத்திருக்கின்றார்கள். அந்த notice–லே, படிவம்–அ, விதி 3–ஐப் பார்க்கவும். 'தமிழ்நாடு அரசு தொழில் துறை' என்று போட்டு, அவர்கள் அந்த இடத்தை எடுக்கப்போகிறோம் என்று சொல்லி, notice கொடுத்திருக்கிறார்கள். இதுபோன்று, ஓர் அரசாங்கம், ஆதி திராவிட மக்களுக்காக, அவர்களாகவே பட்டா கொடுத்து, அந்த மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்த இடத்தை, அடுத்து ஓர் அரசாங்கம் வருகின்றபோது, இதுபோல எடுப்பது என்ற நிலைமை வந்தால், அவர்கள் நாடோடிகளாகத்தான் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமே தவிர, நிரந்தரமாக ஓர் இடத்திலே அவர்கள் குடியிருக்கக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக ஏற்படாது. அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

இதைப்போல சென்ற ஆட்சியிலேகூட் நான் குறிப்பிட்டேன். மாம்பாக்கம் என்கின்ற ஒரு பகுதியிலே, 100 வீடுகள், ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வீடுகள். அரசாங்கத்தின்மூலமாகக் கொடுக்கப்பட்ட வீடுகள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது கொடுக்கப்பட்ட வீடுகள். அந்த வீடுகளைச் சென்ற





ஆட்சியிலே எடுப்பதற்கு, SIPCOT முனைந்தது. அந்த நேரத்திலேகூட, நான் சொன்னேன். ஆட்சிகள் மாறலாம். கொடுக்கப்பட்ட திட்டங்கள் யாருக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இப்போது நீங்கள்கூட, பெரிய மனதோடு சைக்கிள்கள் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தை, —யார் கொடுத்தார்கள் என்பதல்ல— அந்தத் திட்டம் நல்ல திட்டம் என்பதை எடுத்துக்கொண்டு, அந்த மக்களுக்காக நீங்கள் செய்கின்றீர்கள். எல்லா மக்களுக்கும் அது கிடைக்கவேண்டும். படிக்கின்ற மாணவர்களுக்கு சைக்கிள்கள் கிடைக்கவேண்டும் என்று அந்தத் திட்டத்தை நீங்கள் ஏற்று நடத்திக்கொண்டு வருகின்றீர்கள். அதுபோலத்தான். எந்த ஒரு அரசாங்கம் கொடுத்தாலும்கூட, யாருக்குக் கொடுத்தது? ஆதி திராவிட மக்களுக்குக் கொடுத்த இடம். அந்த இடத்தை இன்றைக்கு சிப்காட் நிறுவனம் கொஞ்சம்கூட ஈவு, இரக்கம் இல்லாமல், அவர்களை அப்புறப்படுத்துவதற்கு எடுக்கின்ற நடவடிக்கையை தொழில் துறையை ஏற்றிருக்கின்ற எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெயரிலே கருணை இருப்பதால், செயலிலேயும் கருணையோடு எங்களிடத்திலே எல்லா திட்டங்களையும் கொடுத்துக்கொண்டு வருகின்றீர்கள். ஆற்றுகின்ற பணியிலே மிகச் சிறப்பான கருணை இருக்கின்றது. ஆகவே, இந்த—ஆதி திராவிட மக்களுக்கு என்னுடைய தொகுதியிலே இருக்கின்றவர்களுக்கு, நீங்கள் நிச்சயமாக உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–25*

அதேபோல, நிறைய தொழிற்சாலைகள் என்னுடைய தொகுதியிலே வந்துகொண்டு இருக்கின்றன. சுற்றுப்புறச்சூழல் துறையிலே ஓர் ஆணை இருக்கின்றது. அந்த ஆணையில், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர்ப் பிடிப்புப் பகுதி இருக்குமேயானால், நதியோ அல்லது ஏரிகளோ இருந்தால், அந்த ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் தொழிற்சாலைகள் இருக்கவேண்டும் என்று சுற்றுப்புறச்சூழல் துறையிலே ஓர் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆனால், ஒரு கிலோ மீட்டருககுள்ளேயே இன்றைக்குத் தொழிற்சாலைகள் வருகின்றன. அப்படி வருகின்றபொழுது, அவற்றினுடைய கழிவுகள் அனைத்தும் செம்பரம்பாக்கம் ஏரிக்குத்தான் போகின்றன. நான் போய் அதிகாரியைப் பார்க்கின்றேன். கழிவுகளுக்கெல்லாம் நாங்கள் பாதாளச் சாக்கடை போட்டு, அதன் மூலமாக அப்புறப்படுத்துகிறோம் என்று அவர் சொல்கின்றார். நான் போட்டோவையே காட்டினேன், இதோ பாருங்கள், இந்தக் க்ழிவுகள்

[திருமதி டி. யசோதா] [2007 ஜனவரி 25

எல்லாம் இப்படித்தான் செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்து சேர்கின்றன என்று சொன்னேன். செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கழிவுகள் வந்து சேர்வதால் சுகாதாரக் கேடுதான். நாளைக்கு அதையே குடிநீராகப் பயன்படுத்தப்போகிறோம். ஆகவே, அதுபோன்ற சூழ்நிலைகளை நீங்கள் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்றவர்களுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். நீங்கள், தேர்தல் வாக்குறுதிகளை விளம்பரப்படுத்தி, புத்தகமாகக் கொடுத்து, மக்களிடம் வாக்குகளை வாங்கி ஆட்சிக்கு வந்திருக்கின்றீர்கள். நாங்களும் அதேமாதிரி, உள்ளூர்களிலே சின்னச் சின்ன வாக்குறுதிகளைக் கொடுத்துத்தான் வந்திருக்கிறோம். அதுபோன்ற வாக்குறுதிகளில், ரேஷன் கார்டு ஒன்று; அதுபோன்ற வாக்குறுதிகளில் முதியோர் உதவித் திட்டம் ஒன்று; அதுபோன்ற வாக்குறுதிகளில் பட்டா வாங்கித் தருகிறோம் என்பது ஒன்று; அதுபோன்ற வாக்குறுதிகளில் மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கெல்லாம் நாங்கள் மின்சாரம் வாங்கித்தருகிறோம் என்பது ஒன்று; அதுபோன்ற வாக்குறுதிகளில் பஸ் ஓடாத இடங்களுக்கெல்லாம் நாங்கள் பஸ் விடச் செய்கிறோம் என்பது ஒன்று; இதுபோன்ற சின்னச் சின்ன வாக்குறுதிகள். எங்களுடைய வாக்குறுதிகளையும் நிறைவேற்றவேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ரேஷன் கார்டுக்கு கிட்டத்தட்ட நாங்களும் எழுதி, எழுதி,– நான் மொத்தமாகக் கொடுப்பதில்லை. ஒவ்வொரு application–லும் ஸ்ரீராமஜெயம் எழுதுவதுபோல, பரிந்துரை, பரிந்துரை, பரிந்துரை என்று எழுதி கையெழுத்துப் போட்டு நாங்கள் கொடுக்கிறோம்; முதியோர் உதவித் தொகைக்கும் கொடுக்கிறோம்; ரேஷன் கார்டுக்கும் கொடுக்கிறோம்; பட்டா கேட்கிறவர்களுக்கும் கொடுக்கிறோம். ஆனால், இதுவரைக்கும் ஒரு ரேஷன் கார்டுகூட எங்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. (குறுக்கீடுகள்) பின்னாலே இருந்து கையைக் காட்டுகிறார்கள். கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று. ஒரு ரேஷன் கார்டுகூடக் கிடைக்கவில்லையென்று சொன்னால், அந்தத் துறையைத் தயவுசெய்து வேகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.



2007 ஜனவரி 25] [திருமதி டி. யசோதா]

அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையங்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை, என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் துணையோடு நான் ஸ்ரீபெரும்புதூருக்கு அழைத்துச் சென்றேன். ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அரசு மருத்துவமனையில் பிணவறை மிக நாற்றம், உள்ளேயே போக முடியவில்லை. இரண்டு மந்திரிகள் மூக்கைப் பிடித்துக்கொண்டு உள்ளே போகும்போது, நானும் பின்னாலே போக வேண்டியதாகிவிட்டது. ஆக, அந்தப் பிணவறைக்கு நிச்சயமாக குளிர்சாதன வசதி தேவை என்பதை சென்ற முறைகூட நான் பேசினேன். போன ஐந்து வருடங்களும் பேசினேன். இப்பொழுதும் தொடங்கியிருக்கின்றேன். அவர் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். நிச்சயமாக அதைச் செய்து கொடுக்கவேண்டும். ஏனென்றால், விபத்துகள் அதிகமாக நடக்கக்கூடிய இடம், அந்த ஸ்ரீபெரும்புதூர்தான்.

அதேபோல, குன்றத்தூரிலே ஒரு மருத்துவமனை, பிரசவ மருத்துவமனை. அதையும் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். அதையும் சரிசெய்துகொடுக்கின்றேன் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

அடுத்தாற்போல, படப்பையிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். அதையும் வழங்க ஆவனசெய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

என் தொகுதிக்கு நீதிமன்றம் வேண்டும். இது எங்கள் தொகுதி மக்களுடைய ஆசை. பலநாள் ஆசை. நம்முடைய அருமை பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட பேசும்போது சொல்வார். "உனக்கு போட்டுக்கொடுத்துவிடுகிறேன், போ" என்று சொல்வார். ஆனால், அவருக்கு அந்த portfolio இல்லை. தாலுகா தலைநகரம் ஸ்ரீபெரும்புதூர். அதற்கு நீதிமன்றம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதியை மூன்றாகப் பிரித்துவிடுகிறார்கள். ஒரு பகுதி, குன்றத்தூரில் இருக்கிறவர்கள் எல்லோரும் பூந்தமல்லி கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஸ்ரீபெரும்புதூரில் இருக்கிறவர்கள் எல்லாம் திருவள்ளூர் கோர்ட்டுக்குப் போகிறார்கள். சுங்குவார்சத்திரத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் காஞ்சிபுரம் போகிறார்கள். மூன்று பக்கத்திலே எனது பகுதி மக்கள் அலைக்கழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு, எனது ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு, அந்த தாலுகா தலைநகரமாக இருக்கிற ஸ்ரீபெரும்புதூரில்

ஒரு நீதிமன்றத்தை, துணை நீதிமன்றத்தையாவது நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறைமூலமாக மிக வேகமாகப் பணிகள் நடைபெறவேண்டும் என்பதற்கு அரசாங்கத்தினுடைய முயற்சிகள் இருந்தாலும்கூட, கான்ட்ராக்டர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் கான்ட்ராக்ட்டை எடுத்துவிட்டு அவர்கள் வேலையே செய்யாமல், ஆறு மாதம், ஒரு வருடம் என்று தள்ளி வைத்துக் கொண்டு வருகின்றார்கள். அத்தகைய நிலைமையைப் போக்குவதற்கு நீங்கள் தயவுசெய்து முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட கான்ட்ராக்ட்காரர்களை இரத்துசெய்துவிட்டு, யார் வேகமாக அந்தப் பணிகளைச் செய்கிறார்களோ அவர்களிடம் அந்தப் பணிகளைக் கொடுத்து, துரிதமான முறையில் வேலைகள் நடைபெறுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் பல கட்டங்களில் நன்றி தெரிவிக்கவேண்டும். காரணத்தோடுதான் அந்த நன்றியை சொல்கின்றேன். எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த, மிகவும் அனுபவம் வாய்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்த, காமராஜருடைய உண்மையான பக்தையான எங்கள் அருமைச் சகோதரியார் பொன்னம்மாள் அக்கா அவர்களை அழைத்து காமராஜர் விருது கொடுத்து நீங்கள் கௌரவித்தீர்களே, அதற்காக நான் உங்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எங்களுக்கு உறைக்கிறதோ இல்லையோ, உங்களுக்குதான் சட்டென்று உறைக்கிறது. ASIAD--ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாந்தி என்கின்ற ஒரு பெண் கலந்துகொண்டு, அதிலே வெற்றிபெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றபோது, வேறு ஏதோ ஒரு தகுதியின்மை என்ற காரணத்தைக்காட்டி, அவரிடத்திலிருந்த அந்த medal-ஐப் பறிக்க வேண்டுமென்று நினைத்தபோது, அவரை வரவழைத்து அவருக்கு 15 இலட்சம் ரூபாய் கொடுத்த உங்களுடைய பெருந்தன்மையை நான் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு இல்லாமல், அந்தப் பெண்ணுடைய தாய்-தந்தையர்க்கு, அவர்களுடைய பெண் ஓடுவதைப் பார்ப்பதற்கு வீட்டிலே தொலைக்காட்சிப் பெட்டி இல்லை, பக்கத்து வீட்டிலே போய் பார்த்தோம் என்று அவர்கள் சொன்னபோது,



அந்த ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு உடனடியாக அவர்களுக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியைக்கூட கொடுத்தீர்கள் பாருங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆதி திராவிட மக்களுடைய பிரதிநிதியாக இன்றைக்கு நீங்கள் செயல்பட்டிருப்பதை நான் உண்மையிலேயே பாராட்டுகின்றேன்.

செங்கல் சூளையிலே வேலைசெய்யக்கூடிய ஒருவருடைய பெண், அந்தப் பெண். அவர்களுக்கு வசதி கிடையாது. ஏதோ விளையாட்டுத் துறையிலே, அந்தப் பெண், தானாகவே, தன்னைத்தானே தயார்படுத்திக்கொண்டு, ஏகலைவனைப்போல கொஞ்சம் கொஞ்சமாக முயற்சி செய்து இன்றைக்கு உலக அரங்கத்தில்போய் போட்டி போடக்கூடிய சூழ்நிலைக்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார். அந்தத் தகுதிக்கு இங்கே இருந்து அவர் அனுப்பப்படுகிறார். அப்போது இங்கே அவரைப் பரிசோதிக்கவில்லையா; அகில இந்திய ரீதியிலே அனுப்புகின்றார்களே, அப்போது பரிசோதனை செய்யவில்லையா; மேலைநாட்டிலே கத்தார் என்ற அந்த நாட்டிலே அங்கு அந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது அவர்கள் பரிசோதிக்கவில்லையா? ஓடவிட்டுவிட்டு, பின்னாலே வெற்றிபெற்ற பிறகு, யாரோ ஒருவர், தோற்றுப்போனவர் சொன்ன கருத்தை வைத்துக்கொண்டு, அவருடைய பரிசைப் பறிக்கின்ற நிலைமையிலே, பரிசைக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னலும் மாநில அரசின் சார்பிலே சிறப்புச் செய்த தமிழக முதல்வரை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். என்னுடைய சமுதாயத்து மக்கள் முன்னுக்கு வருவதைத் தடுக்கின்ற எந்தக் கருவியாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்கென்று நீங்கள் ஓர் அஸ்திரமாக இருப்பீர்கள் என்று சொன்னால், உங்களுக்குப் பின்னாலே இந்தச் சமுதாயம் நிற்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகின்றேன். என்னுடைய தொகுதியிலே மணல் குவாரியெல்லாம் கிடையாது. எல்லாம் கல்தான். பாறாங்கல். அந்தக் கல் குவாரியை, அன்றைக்கு, கொல்லச்சேரி ஆதி திராவிட கல் உடைக்கும் தொழிலாளர் சங்கம் என்ற ஒன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கக்கன்ஜி அவர்களாலே ஏற்படுத்தப்பட்டு, காமராஜர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அந்தச் சங்கம் 1995—லிருந்து இன்று வரை அப்படியே இயங்காமல் இருக்கிறது. நடைபெறவில்லை. காரணம், அந்தச் சங்கத்திலே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு என்றுதான் கல் குவாரியை ஒப்பந்த

அடிப்படையிலே அரசாங்கம் கொடுத்துக் கொண்டு வந்தது. 1995—லிருந்து அது நிறுத்தப்பட்டக் காரணத்தினாலே, இன்றைக்கு அங்கேயிருக்கின்ற ஆதி திராவிட மக்கள் ஆயிரம் பேருக்கு மேலாக, அவர்கள் வாழ வ்சதியில்லாமல் மிகவும் ஒரு சோகமான நிலையில் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதை அரசாங்கத்தின்மூலமாக கொடுப்பதை நிறுத்திய காரணத்தினாலே, இன்றைக்குத் திருட்டுத்தனமாக கல் உடைத்து, அரசாங்கத்திற்கு வர வேண்டிய அத்தனை தொகையையும் தனிப்பட்டவர்கள் சுருட்டிக்கொண்டு போகின்றார்கள். ஆகவே, அந்தத் திருட்டுக் கல் எடுப்பதைத் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் தயாராக இல்லை என்கின்ற நிலைமை இருக்கின்றபோது, அரசின் கல் குவாரிகளையெல்லாம் தடை நீக்கி அறிவித்து, ஊக்குவித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை நீங்கள் உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–35*

அதேபோல, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும், (குறுக்கீடு) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அந்தத் திட்டத்தின்மூலமாக பஞ்சாயத்துகளைத் தேர்வு செய்கின்றவர்கள் யார்? அதிகாரிகள். அதிகாரிகளுக்குத் தெரியாது. அவர்கள் உண்மையிலேயே செக்குக்கும் சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாத மாதிரி select பண்ணி வைத்திருக்கிறார்கள். எம்.எல்.ஏ.–க்கள் எங்களுக்குத் தெரியும், எந்தப் பஞ்சாயத்துக்கு உடனடியாக அந்த உதவி போய்ச் சேரவேண்டுமென்று. (மேசையைத் தட்டும் ஒலி) போன மழையிலே செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பி வழிந்தது. அந்தத் தண்ணீர் எந்த ஊருக்குள்ளே புகுந்ததோ, அந்த ஊருக்குத்தானே இப்பொழுது நம்முடைய நிவாரணம் உடனடியாக வேண்டும், என் தொகுதியைப் பொறுத்தவரைக்கும். செம்பரம்பாக்கம் ஏரி உள்ளே நுழைந்ததனாலே ரோடுகள் எல்லாம் பாழ்பட்டுக் கிடக்கின்றன, சுடுகாடுகூட சரியாக இல்லை. அதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கும்பொழுது, அந்தத் திட்டத்தை எந்த வருடத்திற்கு போட்டிருக்கிறார்கள் தெரியுமா? 2010–க்குப் போட்டிருக்கிறார்கள். 2010–லே கொண்டுபோய் நிறுத்தி இருக்கிறார்கள். அப்பொழுது 20 இலட்சம் ரூபாய் தரப்படுமாம். அப்பொழுது வருமாம் அந்த 20 இலட்சம். அது வந்தால்தான் என்ன, வராமல் போனால்தான் என்ன? அதனாலே, சட்டமன்ற



உறுப்பினர்களைக் கலந்து பேசி, எந்தெந்தப் பகுதிகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்னாலே நான் தளபதியிடம் பேசிவிட்டேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையிலே, scientific ஆக, அறிவியல் ரீதியாகத்தான் இந்தக் கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மக்கள்தொகையின் அடிப்படையிலேயும் (குறுக்கீடு) சொல்லி விடுகிறேன். அப்புறம் சொல்லுங்கள். 5 ஆண்டுகளுக்கும் அந்தந்த ஊரிலே வரக்கூடிய வருமானத்தின் அடிப்படையிலே (குறுக்கீடு) சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள் சார். அதாவது, எந்தக் கிராமத்திற்கு குறைவாக வருமானம் வருகிறதோ, அந்தக் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான், வருமானம் குறைவாக வருகின்ற கிராமங்களை முதலிலே எடுத்துக்கொண்டு, அதற்கு அடுத்து, அதிகப்படியாக, வருமான அடிப்படையிலேதான் அறிவியல் ரீதியாக இதை நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் சொல்கிற மாதிரி நெருக்கடியான சூழ்நிலை இருக்குமானால், பல்வேறு துறைகளிலே இருந்து வருகிற நிதி இருக்கிறது. இந்த நிதியைப் பொறுத்தவரையிலே எல்லா கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற ஓர் உயரிய நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டு, எந்தக் கிராமங்களுக்கு மிகக் குறைவாக வருமானம் இருக்கிறதோ, அந்தக் கிராமங்களை முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக்கொண்டு, 5 ஆண்டுகளுக்கு எல்லா கிராமங்களையும் அதில் அடுக்கிவைத்திருக்கிறார்கள். அதுதான் நடைமுறைரீதியாக சாத்தியக்கூறு என்பதனால், எந்தப் பிரச்சினையும் வராமல் இருப்பதற்காக ஒரு scientific method–லே computerised system மாதிரி பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே யாருடைய தலையீடும் கிடையாது. அறிவியல்ரீதியாகச் செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஓர் அற்புதமான ஊரக வளர்ச்சித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசினுடைய திட்டங்களைக் கண்காணிப்பதற்காக நம்முடைய அரசு

நியமித்த குழுவிலே நான் இருக்கிறேன். அதற்கு இந்த ஆண்டு மத்திய அரசு தந்த திட்டம் எவ்வளவு, ஊரக வளர்ச்சித் துறைக்குத் தந்த தொகை எவ்வளவு என்பதை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, மத்திய அரசு தருகின்ற எல்லாத் தொகைகளையும்விட மிக அதிகமாகச் செலவிடப்படுகின்ற திட்டம் இந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இருக்கிறது. இதிலே நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல வருமானத்தின் அடிப்படை என்பது, அந்த வருமானத்தைக் கணக்கிடுவது யார்? பாதி ஊர்களிலே தவறான தகவல்கள் சொல்லப்படுகின்றன. இரண்டாவது, திட்டங்கள் என்பது தேவைகளின் அடிப்படையிலே இருக்கவேண்டுமேயொழிய, சில கிராமங்களுக்கு வருமானம் குறைவாக இருந்தாலும்கூட தேவைகளே இல்லாமல் இருக்கலாம். உதாரணமாக, என்னுடைய கிராமத்திலே, களக்காடு என்கிற ஒரு பஞ்சாயத்துக்கு இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே மீன் வளர்ச்சிக்காக 30 ஆயிரம் ரூபாய் செலவிட வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். அந்த ஊரிலே அதற்கான வாய்ப்பே இல்லை. ஆகவே, என்ன திட்டம் எடுத்துக் கொள்ளப்படுகிறது எந்தக் கிராமம் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதை மக்கள் பிரதிநிதிகளை கலந்தாலோசிக்காமல், அதிகாரிகளே உட்கார்ந்து அதை முடிவு செய்வது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன். அதாவது, நல்ல அற்புதமான திட்டம். கோடி கோடியாக அள்ளிக் கொடுக்கின்றீர்கள். அது சரியான இடத்திற்கு போய்ச் சேரவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையேயொழிய, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களே பேசிக்கொண்டது, அனைத்து உறுப்பினர்கள் சார்பாகவும் நான் சொல்கிறேன். இந்தத் திட்டங்களை, எந்தப் பஞ்சாயத்து என்று அவர்கள் தேர்ந்தெடுக்கின்றபொழுது, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரையும் கலந்து, அந்த அதிகாரிகள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களைத் தேர்ந்தெடுக்கிறபோது, நான் சொன்ன முறையிலே வருமானத்திற்குக் குறைவாக உள்ள கிராமங்களை முன்னுரிமை கொடுத்து தேர்ந்தெடுக்கிறார்கள். ஆக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே



எந்தெந்த ஆண்டு என்று தெரிகிறது. இப்போது. 2009–லே எந்தக் கிராமம், 2010–லே எந்தக் கிராமம் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுகிறது. அதை கிராமங்களில் இருக்கிற (குறுக்கீடுகள்) Collectorate–லே. வரும் சார். இன்னும்... (குறுக்கீடுகள்) முடிவு பண்ணிய பிறகு, நிச்சயமாக (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) எல்லா எம்.எல்.ஏ.–க்களுக்கும் உள்ளதுதாங்க இது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தந்தத் தொகுதிகளிலே... (குறுக்கீடுகள்) அப்புறம் எப்படித் தெரியும், உங்களுக்கு 2010–லே வருகிறது என்று? (குறுக்கீடுகள்) List அதைத்தான் சொல்கிறேன், அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தாங்க சொல்கிறேன். நான் சொல்வதைத் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள்.

இந்த 5 ஆண்டுகளுக்கும், எல்லா கிராமங்களுக்கும், நீங்கள் சொல்வது முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது. நாம் இத்தனை villages–தான் எடுக்கப்போகிறோம் என்று சொன்னால், அதற்கு முன்னுரிமை கொடுக்கலாம். ஆனால், இந்தத் திட்டத்திலே எல்லா கிராமங்களுக்கும் இந்த நிதி ஒதுக்கப்படுகிறது. அதனாலே, எல்லா கிராமங்களுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறபோது, எந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்பதை நிர்ணயிப்பதற்குத்தான் ஒரு முறையைப் பின்பற்றுகிறது இந்த அரசு.

நீங்கள் சொன்னீர்களே, அந்தக் கிராமப் பஞ்சாயத்தினுடைய நிதி எல்லாம் எல்லா இடத்திலேயும் recorded–ஆக இருக்கிறது. அதுபோன்றுதான். அந்த நிதியை வைத்துக்கொண்டுதான், குறைவாக இருக்கிற பஞ்சாயத்துகளுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுவும் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பதை அந்தக் கிராமத்திலேயே ஒரு குழு அமைக்கப்பட்டு, அங்கேயே போய் மாவட்ட ஆட்சித் தலைவரும், அலுவலர்களும் சென்று அமர்ந்து அந்த ஊர்மன்றக் குழு கூடித்தான் எந்தெந்த வேலைகளை நிர்ணயிக்க வேண்டும் என்பதுகூட முடிவு செய்து, அது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தன்னிச்சையாக எதுவும் அதிகாரிகள் அங்கே முடிவு செய்வதில்லை. அந்தக் கிராமத்திலே இருக்கிற கிராமக் குழுவைக் கூட்டித்தான் எந்தெந்த வேலைகள் செய்யப்பட வேண்டுமென்பது நிர்ணயிக்கப்படுகிறது. அந்த மாதிரி ஏதாவது மீறி இருந்தால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நீங்கள் தெரிவிப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். கிராமத்திலே இருக்கிற கிராமத் தலைவர் மூலமாகத்தான் அந்த முடிவை எடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அது சரியானதுதான். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. மிகச் சரியானது. அதிலே, இப்போது உறுப்பினர்களுக்கு இருக்கிற வேண்டுகோளும், அவர்களுக்கு இருக்கிற பிரச்சினையும், அதைத் தேர்வு செய்கிற பணிகளைப் பற்றிய பிரச்சினைகளும், அங்கே நடைமுறைச் சிக்கல்களும் இருக்கின்றன என்பதைத்தான் தெளிவுபடுத்த விரும்புகிறார்கள்.

ஒன்றை நான் சொல்ல விரும்புவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, வருமானத்தின் அடிப்படையிலே, குறைந்த வருமானம் உள்ள அந்த ஊராட்சிகள் முன்னுரிமையில் தேர்வு செய்யப்படுகின்றன என்று சொல்கிறீர்கள். அந்தத் தேர்வு செய்வதிலேயே பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைத் தயவுசெய்து உணர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்கள் 500 பேர் இருக்கிற ஒரு கிராமத்தில், அவர்களுடைய தினசரி வருமானம் 80 ரூபாய் என்று கணக்கிட்டு, அந்தக் கிராமத்தினுடைய வருமானம் என்பது கூடுதலாக இருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படிக் கணக்கிடு செய்கிறபோது, அந்தக் கிராமம் இந்த முன்னுரிமைப் பட்டியலில் வராமல், அது பின்னுக்கு 2009–க்கோ, 2010–க்கோ சென்று விடுகிறது. ஆகவே, விவசாயத் தொழிலாளர்கள் வருமானம், இதர வருமானம் என்ற கணக்குகளை வைத்து, வருமானத்தின் அடிப்படையிலே தேர்வு செய்யப்படுகிறபோதுதான், இந்தப் பிரச்சினை வருகிறது என்ற காரணத்தினாலேதான், இதைப்பற்றிய மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறோம். இதிலே பிரச்சினையாகவோ, தவறாகவோ, குற்றமாகவோ எடுத்துக்கொள்ளாமல் இதை ஆய்வு செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய பணிவான வேண்டுகோள். அதைச் செய்வதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, ஊராட்சி மன்றங்கள்,





கிராமங்களைத் தேர்ந்தெடுக்கிறபோது வருமான அடிப்படையிலேதான் தேர்ந்தெடுக்கிறார்கள். வருமானம் என்பது வீட்டு வரி, வேறு சில, அதாவது stamp duty, இப்படி எல்லா வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான், கணக்கிட்டுப் பார்க்கிறார்கள். அந்த வருமான அடிப்படையிலே குறைந்த வருமானம் உள்ள ஊராட்சி மன்றத்திற்கு முன்னுரிமை தருகிறார்கள். இன்னொன்று, மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட முகமை அலுவலர் அவர்கள் இந்த வருமானத்தைப் பார்த்து, இந்த ஆண்டு, இந்தக் கிராமத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்து அந்தப் பட்டியலை வெளியிடுகிறார். அந்தப் பட்டியலை ஒன்றும் இரகசியமாக வைப்பது இல்லை; எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அதை வாங்கிப் பார்க்கலாம். வாங்கிப் பார்த்து, அது சரியாக இருக்கிறதா, இல்லையா என்று சொல்லலாம். ஏதாவது முக்கியமான பணி விடுபட்டுப்போய் இருக்குமானால், அதைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொன்னால், அவர்—சில நேரங்களிலே அரசியல் காரணத்திற்காகக்கூட போட வேண்டிய இடத்திற்கு ரோடு போடாமல் விட்டுவிடுவார்கள். குடிதண்ணீர் தேவையான இடத்திற்கு செய்துதராமல்கூட அதை விட்டுவிடுவார்கள். அப்படி ஒரு சூழ்நிலை வந்துவிடக்கூடாது, எல்லா பகுதிகளுக்கும் சமமாக இந்தத் திட்டங்கள் சென்றடைய வேண்டும். அப்படி ஏதாவது விடுபடுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர்—இறுதி முடிவு எடுத்து, இந்தப் பணி அவசியம், நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று அந்த ஊராட்சி மன்றத்திற்குத் தெரிவித்து அதை நிறைவேற்றலாம் என்றும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை 1996–2001–லே கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, இந்தியாவிலே எங்குமே இல்லாத புது வகையான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அது தமிழகத்திற்கே பெருமை சேர்த்தது. அந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்த வேளையில், அந்தக் கிராமத்தை, அந்த ஊராட்சியைத் தேர்வு செய்யக்கூடிய பொறுப்பு, அந்தந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குடையது என்ற மகத்தான அறிவிப்பைச் செய்தார்கள். அந்த அடிப்படையிலே, பின்தங்கிய ஊராட்சியைத் தேர்வு செய்து (குறுக்கிடு) இல்லை, அப்படித்தான் செய்தார்கள். அந்த அடிப்படையிலே, அந்தக்

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 25

கிராமத்தினுடைய வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டன. ஆனால், மீண்டும் கடந்த ஆட்சிக் காலத்திலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று ஓர் அறிவிப்பு செய்து, அந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு மூடுவிழா செய்து, மோசடி செய்தார்கள். ஆக, இப்பொழுது மீண்டும் முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; எல்லாக் கிராமங்களுக்கும் வருவதை நாங்கள் வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். ஆனாலும்கூட, அந்த ஊராட்சியினுடைய பின் தங்கிய நிலை, அவசியத் தேவைகள், விடுபட்ட பணிகளைத் தேர்வு செய்வதற்காக, கடந்த முறை இருந்தமாதிரி, சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்கலாம்; அல்லது மறைமுகமாகவாவது ஆலோசித்து அதைத் தேர்வு செய்தால், அது பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதை ஏற்று நடைமுறைப்படுத்தவேண்டும். அமைச்சர்கள் சொன்ன மாதிரி அது தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கலாமே தவிர, வருவாயைக் கொண்டு அல்ல, நடைமுறையில் அது சாத்தியம் இல்லை. அப்படி இல்லை என்பதையும் நான் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். வேண்டுமென்று சொன்னால், ஆதாரங்களோடு நான் உங்களுக்குக் கொடுக்கின்றேன். அதிக வருவாய் உள்ள ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அது எங்களிடத்திலே இருக்கிறது. நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பா.ம.க.வினுடைய தலைவர் திரு. மணி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். 1996 ஆம் ஆண்டிலே அதிக ஜனத்தொகை உள்ள கிராமங்கள்தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டன. சட்டமன்ற உறுப்பினர்களுடைய விருப்பப்படி எடுக்கப்படவில்லை என்று. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதிக ஜனத்தொகை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் தேர்வு செய்ய முடியாது. அதிக ஜனத்தொகை. ஓர் ஒன்றியத்தில் அதிக ஜனத்தொகை உள்ளதைத்தான் முதலில் எடுத்தார்கள். இப்பொழுது குறைந்த வருமானம்... (குறுக்கீடுகள்)



2007 ஜனவரி 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசும்போது இடையிலே குறுக்கிடாதீர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** குறைந்த வருமானம் உள்ளதை இப்போது நாம் எடுத்துக்கொள்கிறோம். அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, போதும். இதுசம்பந்தமான விவரம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நான் கொஞ்சம் தெளிவாகச் சொல்லிவிடுகின்றேன். இந்தச் செய்தியைப் பொறுத்தவரையிலே தெளிவாகச் சொல்லிவிடுவது நல்லது என்று நான் நினைக்கின்றேன். இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, ஒன்றியத்திற்கு ஒன்று என்றுதான் முதலில் கொண்டு வந்தோம். வருடத்திற்கு ஒன்று என்று கொண்டு வந்தோம். அது எல்லாக் கிராமங்களுக்கும் கிடைக்கின்ற திட்டம்தான். எப்பொழுது முன்னர், எப்பொழுது பின்னர் என்பதுதான் விஷயம். முதல் பந்தியா, இரண்டாவது பந்தியா என்பதுதான் ஒரே வித்தியாசம். எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கின்ற திட்டம். இந்தப் பந்தி, எந்தப் பந்தி என்பதுதான் முக்கியம். அதை நாமே செலக்ட் செய்து கொடுத்துவிட்டால், அவர் இந்தக் கட்சியை விட்டுவிட்டார், அந்தக் கட்சியை விட்டுவிட்டார் என்ற குறைபாடுகள் வரக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடுதான் வருமானத்தின் அடிப்படையில் என்று சொன்னோம். அவர் சொன்ன மாதிரி தனி நபர் வருமானம் கிடையாது. ஒரு பஞ்சாயத்தினுடைய வருமானம்தான். (குறுக்கீடு) நீங்கள் சொன்ன மாதிரி, பஞ்சாயத்து வருமானம் என்பதில், குறைந்த வருமானமுள்ள பஞ்சாயத்தை விட்டுவிட்டு, அதிக வருமானம் உள்ள பஞ்சாயத்தை எடுத்துவிட்டார் என்ற குறைபாடு இருக்குமேயானால், நிச்சயமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தால், அதற்குரிய நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருக்கின்றார். ஆனால், ஒவ்வொரு Collectorate–லும், ஒவ்வொரு தொகுதிவாரியாக குறைந்த வருமானமுள்ள கிராமத்தை எடுத்து, பட்ஜெட்டை தயார் செய்து வைத்துவிட்டார்கள். இப்பொழுதுதான் தொடங்கி வைத்திருக்கிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. மாவட்ட ஆட்சித்தலைவரைப் பார்த்தால் கண்டிப்பாகக் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கும்போது, குறைந்த வருவாயுள்ள

கிராமங்களைத்தான் எடுக்கிறார்கள். அந்த மாதிரி இந்த வருடம் அந்த அடிப்படையில்தான் எடுக்கிறார்கள். அதில் வருமானத்தை மாற்றி எழுதியிருந்தாலோ, தவறாக எழுதியிருந்தாலோ, அதை நிவர்த்தி செய்வதற்கு உள்ளாட்சித் துறை நிச்சயமாக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும், அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேல்முருகன், உட்காருங்கள். Time ஆகின்றது, நீங்கள் பேசுங்கள் அம்மா. *(குறுக்கீடு)* சரி, திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில், எந்தப் பஞ்சாயத்தைத் தேர்வு செய்யவேண்டும் என்பதை அதிகாரிகளே தேர்வு செய்து பட்டியலிட்டு, இந்த இந்த ஆண்டு இன்னின்ன வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்று பட்டியல் வந்துவிடுகிறது. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், ஐந்தாண்டு காலங்களுக்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு வரக்கூடிய அத்தனைப் பஞ்சாயத்துகளுக்கும், 20 இலட்சம் ரூபாயும், இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது. அப்படி இருக்கும்போது கண்டிப்பாக எந்தப் பஞ்சாயத்தும் விடுபட்டுவிடாது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் எந்தெந்தப் பஞ்சாயத்தைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்து, தேர்வு செய்து, பரிந்துரை செய்கிறோம் என்கிறோம். அப்படி நாங்கள் செய்கின்றபோதுகூட, எக்காலத்திலும் எதிர்க்கட்சி உறுப்பினரோ அல்லது வேறொரு பஞ்சாயத்து தலைவருடைய பஞ்சாயத்தையோ விடுவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனென்று சொன்னால், நான் அந்த மானியக் கோரிக்கைமீது பேசும்போது, தளபதி அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். உதாரணத்திற்கு, 50 பஞ்சாயத்துகள் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு வருகிறது என்று சொன்னால், அவற்றில் ஓராண்டுக்கு 10, 10 பஞ்சாயத்துகளாக எடுத்து, அதில் முழுக்க அந்த 20 இலட்சம் ரூபாய் பணமும் தருவதற்கு நம்முடைய அரசு தயாராக இருக்கிறது. அப்படி இருக்கும்போது எந்தப் பஞ்சாயத்திற்கு முதலில் செய்யவேண்டும்; எதை இரண்டாவதாகச் செய்யவேண்டும் என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாங்கள் முடிவு செய்கிறோம். இந்த ஆண்டுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயை முதல்வர் அவர்கள்



எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த நிதியை நாங்கள் அந்தக் கிராமங்களுக்கு செலவிட்டுக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11–50

அப்படி எந்தக் கிராமத்திற்கு எங்களுடைய நிதியைக் குறைவாக நாங்கள் கொடுத்திருக்கிறோமோ அந்தக் கிராமத்திற்கு இந்தப் பஞ்சாயத்துக்களைத் தேர்வு செய்து சமன் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த அடிப்படையின் காரணத்தினால்தான் தொடர்ந்து இந்த ஐந்தாண்டு காலத்தில் நீங்கள் கொடுக்கிற இந்த 6 கோடி ரூபாய் நிதியும், நீங்கள் கொடுக்கிற இந்த 20 இலட்சம் ரூபாய் நிதியும் சேர்த்து அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற நாங்கள் அந்தத் தொகுதிக்குள் அடங்கிய அத்தனை பஞ்சாயத்துக்களையும், அத்தனை கிராமங்களையும் நாங்கள் சமன் செய்வதுபோல அந்தத் திட்ட ஒதுக்கீடுகளைத் தேர்வு செய்து, அந்த நிதியைச் செலவிட்டால் அந்தத் தொகுதியினுடைய முன்னேற்றத்திற்கு, அந்த மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு, அவர்களுடைய பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு எட்டப்படும் என்கிற அந்த நல்லெண்ண அடிப்படையில்தான் இதற்கு ஒரு மாறுதலை நீங்கள் வழங்க வேண்டும். அந்தப் பஞ்சாயத்துக்களைத் தேர்வு செய்கிற அதிகாரமும், அந்தக் கிராமத்தினுடைய வேலைவாய்ப்புகளைத் தேர்வு செய்கின்ற அதிகாரங்களையும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற எங்களுக்குப் பரிந்துரை செய்கின்ற அதிகாரத்தையாவது தாருங்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து, நாங்கள் இந்தப் பஞ்சாயத்துக்களைத் தேர்வு செய்துவிட்டோம், பணி நடக்கவிருக்கிறது. இது பஞ்சாயத்துத் தலைவரே பஞ்சாயத்திலே தேர்வு செய்து அந்தப் பணிகளைத் தொடங்கலாம் என்று வருகிறதே தவிர சட்டமன்ற உறுப்பினருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்த அந்த அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதனால்தான் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பரிந்துரை செய்கின்ற அதிகாரம் எங்களுக்கு வேண்டும் என்பதை இந்த நேரத்திலே இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேல்முருகன் இவ்வளவு ஆத்திரப்படத் தேவையில்லை. உங்களுக்குச் சாதகமாகத்தான் பண்ணியிருக்கிறோம். ஏனென்றால், ஒரு எம்.எல்.ஏ. தொகுதியிலே இந்தக் கிராமத்தை எடு, இந்தப்

[திரு. துரைமுருகன்] [2007 ஜனவரி 25

பஞ்சாயத்தை எடு, இதை எடு என்றால் அடுத்த ஊர்க்காரன் சொல்லுவான், அப்ப எங்கள் ஊர் இளக்காரமாக போய்விட்டதா என்பான். இரண்டாவது என்ன சொல்வான் என்றால் அவர் பா.ம.க. இருக்கிற ஊராகப் பார்த்துவிட்டார்; இவர் D.M.K. இருக்கிற ஊராகப் பார்த்துவிட்டார் என்பான். எதற்கு வம்பு? அதிகாரியை போட்டுவிட்டோம். அவர்கள் தலைமையிலே போட்டுவிட்டு நடத்துவோம். எல்லா கிராமத்திற்கும் வரப்போகிறது. இப்போது மூன்றாவது இன்னும் ஒன்று. போன ஆட்சியிலே... (குறுக்கீடுகள்),

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துகளையெல்லாம் உள்ளாட்சித் துறை அமைச்சர் வந்தபிறகு, அவரிடம் சொல்கிறோம். அப்புறம் கவனிக்கலாம். ஆனால், போன ஆட்சியிலே இப்படி ஓர் உறுப்பினர் பேசி, இப்படி ஓர் அமைச்சர் குறுக்கிட்டால், பேசிக் கொண்டிருக்கின்ற உறுப்பினருடைய டைம் முடிந்துவிட்டது என்று அர்த்தம். (சிரிப்பு) போன முறை அப்படித்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், உட்காருங்கள். திருமதி யசோதா, பேசுங்கள், சீக்கிரம் முடியுங்கள். 40 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திருமதி டி. யசோதா:** சபையை நடத்துகிறவர் கொடுக்க வேண்டிய ruling-ஐ நீங்கள் கொடுத்துவிட்டீர்கள் என்றால் எப்படி? அதாவது, முதல் பந்தி எது, கடைசிப் பந்தி எது என்று நீங்கள் சொல்கிறீர்கள்? அது, எங்களுக்குத்தான் தெரியும். ஏனென்றால், ஊரில் இருக்கிறவர்களுக்கு எதற்கு முதல் பந்தி வைக்கலாம், எதற்கு இரண்டாம் பந்தி வைக்கலாம், எதற்கு கடைசிப் பந்தி வைக்கவேண்டும் என்று எங்களுக்குத்தான் தெரியும். அதைத்தான் (குறுக்கீடுகள்) நான் உங்களிடம் என்ன கேட்கிறேன் என்றால் அங்கே இருக்கிற, உள்ளூரில் இருக்கிற நிலைமை என்ன என்று எங்களுக்குத் தெரியும் (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் சார், என் நேரத்தை நீங்கள் வேறு எடுத்துக்கொள்கிறீர்கள். இல்லை சார், நான் பேசுகிறேன். நீங்கள் கடைசியாகப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஒரே ஒரு கிளாரிபிகேஷன் மட்டும் கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே,



2007 ஜனவரி 25] [டாக்டர் க. பொன்முடி]

இதிலே அவர் சொன்ன மாதிரி நாம் கொடுக்கும் பணத்தை எந்த ஊருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்பதாலே கொடுத்திருக்கிறார்கள் ஒரு கோடி ரூபாய். இது அண்ணன் துரைமுருகன் சொன்னமாதிரி, எதுவும் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் செய்திருக்கிறார்கள். அதோடு இன்னும் ஒன்று. (குறுக்கீடு) இல்லை இன்னும் ஒன்று. இருங்கள். இந்த வருமானம் பஞ்சாயத்தினுடைய வருமானம்தான். தனிநபர் வருமானம் கிடையாது. அதையும் தயவுசெய்து சொல்லிவிடுகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியும் அரசாங்கத்தினுடைய நிதிதான். பஞ்சாயத்துக்கு கொடுக்கிற நிதியும் உள்ளாட்சித் துறை மூலமாகக் கொடுக்கப்படுகிற நிதியும் அரசு நிதிதான். எல்லாம் அரசாங்கத்தினுடையதுதான். தனிப்பட்டவர்களுடையதல்ல. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தெந்தப் பஞ்சாயத்துக்கு, எது எது உடனடியாகத் தேவை, என்பது தெரியும். எங்கே சவலைக் குழந்தை இருக்கிறது; எங்கே பலமான குழந்தை இருக்கிறது; எங்கே புஷ்டியான குழந்தை இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும். அந்தந்தப் பகுதிகளுக்கு நாங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நான் தளபதிகிட்டே இதைப்பற்றி ஏற்கெனவே பேசிவிட்டேன். அவர் சொன்னார்; அவர் சொன்ன பதிலுக்கும் உங்கள் பதிலுக்கும் நிரம்ப வித்தியாசம் தெரிகிறது. அவர் என்ன சொன்னார், ரொம்ப short period-ல் இந்த scheme-ஐக் கொண்டுவந்து நாங்கள் முன்னிலைப்படுத்தியிருப்பதால் இது ஏற்பட்டிருக்கலாம். அடுத்த முறை உங்களை எல்லாம் கலந்து பேசி அந்தப் பஞ்சாயத்துக்களைத் தேர்வு செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு நிச்சயமாக இருக்கும் என்று அவர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே பதில் சொல்லியாகிவிட்டது. அடுத்த subject-க்குப் போங்கள் அம்மா, திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** இல்லை, இல்லை, தளபதி அறையில சொல்லியிருக்கிறார். நான் இப்போது அவர் இருப்பார் என்று நினைத்தேன், அவர் இல்லை. House-ல் அந்தப் பதிலை வாங்கலாம் என்று இருந்தேன். அவர் இல்லை.

[2007 ஜனவரி 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தளபதியே பதில் சொல்லிவிட்டார் அல்லவா; ஏன் திரும்பவும் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் ?

**திருமதி டி. யசோதா:** பதில் இங்கே சொல்லவில்லை. நான் அவர் அறையில் கேட்டபோது சொன்னார். இங்கேதான் சொல்லவேண்டும். அதற்காக, அதேமாதிரி வருமானம், வருமானம் இல்லையென்பது பற்றி தேர்வு பண்ணுவதற்கு இல்லை. ஏனென்றால், எல்லா பஞ்சாயத்துகளுக்கும் செய்யப்போகிறோம். எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் இந்த வருமானத்தினுடைய அடிப்படையிலே தேர்வு செய்வது என்பது தேவையில்லை. தேவையினுடைய அடிப்படையிலே இந்தத் தொகை அங்கே கொடுக்கப்படுமேயானால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–55*

அதேபோல, அன்னை சோனியா காந்தியினுடைய வழிகாட்டுதலில் நடைபெறும் மத்திய அரசு, 33 சதவிகிதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்வதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கவர்னர் உரையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் தெரிவித்து, தன்னுடைய எண்ணங்களைப் பதிய வைத்திருக்கிறார்கள். அதற்கு நாங்களும் முழுமையான ஆதரவினை இந்த மாமன்றத்தின் வாயிலாக அவருக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தனியார்த் துறையிலும்கூட இடஒதுக்கீடு வேண்டும் என்று இந்த கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, எங்கெல்லாம் தொழிற்சாலைகள் உருவாக்கப்படுகின்றனவோ அந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவதற்கு உள்ளூரிலே இருக்கின்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற கலைஞர் அவர்களுடைய அந்த நல்லெண்ணத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டீர்கள். இனிமேல் நிறைவேற்றுவதற்கு என்று எதுவும் இல்லை. புதியதாகச் சிந்தனைகள் ஏதாவது தோன்றினால்தான். கொஞ்சம் 3 வருடம் இடைவெளி கொடுங்கள். நிறைய திட்டங்களைச் சொல்லிவிட்டதனாலே ஜனங்கள் மிக அதிகமாக அனுபவிக்கின்ற நிலைமை இருக்கிறது. அதனாலே இந்த 3 வருடங்களில் இந்தத் திட்டங்கள் மக்களிடத்திலே போய்ச் சேரக்கூடிய அளவிற்கு நம்முடைய பார்வை இருந்து, யார், யாருக்குப் போய்ச் சேர்ந்தது; எங்கெங்கே



2007 ஜனவரி 25] [திருமதி டி. யசோதா]

போய்ச் சேர்ந்தது; எங்கு சேரவில்லை; இதை முழுவதுமாக பரவலாக முடித்ததற்குப் பிறகு, அதற்குப் பிறகு நீங்கள் புதிய திட்டங்களை அறிவித்தால் அது இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இந்தத் திட்டங்களையெல்லாம் அறிவித்துவிட்டீர்கள். இப்போது இருப்பது எம்.எல்.ஏ.–க்களுடைய பிரச்சினைகள்தான். எங்களுக்குத் தொகுதிகளில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு ஒரு முன்னுரிமை கொடுத்து அவற்றை நிறைவேற்றுவதற்கு நீங்கள் நிச்சயமாகத் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு வார்த்தை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 45 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திருமதி டி. யசோதா:** முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நானா? அவர்கள் எல்லாம் எடுத்துக் கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 45 நிமிடங்கள் ஆயிற்று.

**திருமதி டி. யசோதா:** கடந்த ஆட்சியிலே முடியாததெல்லாம் இந்த ஆட்சியிலே முடிவுக்கு வந்து இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உள்ளாட்சித் தேர்தல், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் இந்த ஊர்களுக்கு எல்லாம் தேர்தல் நடக்குமா? (குறுக்கீடு) ஆம், கொட்டக்காச்சியேந்தல் இந்த ஊர்களுக்கெல்லாம் election நடக்குமா? ஏன் நடக்கவில்லை? Nomination போடுகிறார், ஜெயித்தமாதிரி un–opposed–ஆக வருகிறார். அடுத்த நாளே கொண்டு வந்து இராஜினாமாவைக் கொடுத்துவிட்டுப் போய் விடுகிறார். இரண்டையுமே ஊர்வலமாக நடத்திக் கொண்டு வந்து முடித்துவிட்டுப் போய்விடுவார்கள். இந்த நிலைமை இன்றைக்கு மாறி, 4 பஞ்சாயத்துக்களிலும் ஆதி திராவிட தலைவர்கள் உருவாவதற்கு முயற்சி எடுத்த நம்முடைய முதல்வர் அவர்களையும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆகவே, உரிமைகள் யாரிடத்திலேயிருந்தும் பறிக்கப்படக் கூடாது. அவரவர்களுடைய உரிமைகள் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே நடைபெறுகின்ற இந்த அரசுக்கு குறிப்பாக பாராட்டுதல்களைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

[2007 ஜனவரி 25

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீதான விவாதத்திலே பங்குகொள்ள அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையிலே மிகச் சிறப்புக்குரிய வகையிலே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையிலும் இந்த ஆளுநர் உரையிலே நமது மாநிலத்திற்குரிய உரிமைகள் நிலைநாட்டப்படுவதற்காகவும், மாநில சுயாட்சிக் கொள்கையை உறுதி செய்வதற்குரிய முயற்சியாகவும் பல்வேறு செய்திகள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. 'உறவுக்குக் கை கொடுப்பது, உரிமைக்குக் குரல் கொடுப்பது' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்தக் கொள்கையை நிலைநாட்டச் செய்வதற்குரிய முயற்சியை ஆளுநர் உரையின்மூலமாக நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் கொண்டு வந்திருப்பதை சிறப்புக்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம்.

நண்பகல் 12-00

அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் 'இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பற்றிய மறு சிந்தனை–மறு ஆய்வு–மறு மதிப்பீடு செய்வதற்கான நேரம் வந்துவிட்டது' என்று தலைப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற அந்தச் செய்தி இருக்கிறதே, உண்மையிலேயே சிறப்புக்குரியது. குறிப்பாக இதை இங்கே அமர்ந்திருக்கிற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் மனதார வரவேற்று, பாராட்டி, மறு ஆய்வு செய்ய வேண்டுமென்ற அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதை நாங்கள் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற இந்தக் கருத்து இருக்கிறதே, இதை ஒரு சாதாரண கருத்தாக எடுத்துக்கொள்ள முடியாது. இதிலே, குறிப்பாக அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்று என்று சொன்னாலும், அதிலே ஆழமாக, அறிவியல்பூர்வமாக சொல்லப்பட்டிருக்கிற செய்தி என்பது, 'மனித இனப் பரிணாம வளர்ச்சியில் மாற்றமென்பது மாற்றிட இயலாதது' என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு, இந்தியத் திருநாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பரிமாணங்களும், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளும் முற்றிலுமாக மாறிவிட்டன. ஆகவே, இதற்கேற்ப அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, குறிப்பாக



2007 ஜனவரி 25] [திரு. வை. சிவபுண்ணியம்]

பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், இவர்களுக்காக காலம் காலமாகப் போராடிப் பெற்றிருக்கிற அந்தச் சமூக நீதியையும், சிறுபான்மையினருக்கான உரிமையையும், பெண்ணுரிமையை நிலைநாட்டம் செய்வதற்குரிய முயற்சிகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது, அதற்குரிய சமூக நீதியை உறுதி செய்ய, கம்பிமீது நடப்பது போன்ற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற அந்த வார்த்தை இருக்கிறதே, அது சாதாரண வார்த்தை அல்ல. மிக ஆழமான அர்த்தம் புரிந்த அந்த வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

இதற்குக் காரணம், பல்வேறு வகையிலே இது கேள்விக்குறியாக்கப்படுகிறது. சமூக நீதி என்பது நமது நாட்டிலே கேள்விக்குறியாக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆகவேதான், இந்த வார்த்தையை, பொருத்தமான முறையிலே ஆளுநர் உரையின்மூலமாக நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆகவே, உண்மையான கூட்டாட்சித் தத்துவம் நிலை பெற வேண்டும், தட்டுத் தடங்கலின்றி சமூக நீதிச் சக்கரம் சுழல வேண்டுமென்ற செய்தியைச் சொல்லிவிட்டு, மாநிலங்களுக்கான அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற அந்தச் செய்தி வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, மத்திய, மாநில அரசுகளுக்கான அதிகாரப் பட்டியல்களின் மறுபரிசீலனை அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது, இவை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டுமானால், இந்திய அரசமைப்புச் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

***(மாண்புமிகு மாற்றுத் தலைவர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் தலைமை)***

இதிலே குறிப்பாக, இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை என்று சொல்கிறபோது, நான் சென்ற முறை இந்த அவையிலே பல செய்திகளைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றேன். இந்தியா ஒன்றுபட்ட நாடாக, ஒருமைப்பாட்டுடனகூடிய நாடாக, ஒற்றுமையுள்ள நாடாக, ஏக இந்தியாவாகச் செயல்பட வேண்டுமானால், குறிப்பாக, பல்வேறு திட்டங்களை ஒருமைப்படுத்தி,

மாநிலங்கள்மூலமாக அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து செயல்படுத்தச் செய்வதன் மூலமாகத்தான் அதை நிறைவேற்ற முடியும். அப்படிப் பார்க்கிறபோது, இந்தியாவிலே இப்போது ஒற்றுமையான இந்தியா, ஒருமைப்பாட்டுடன்கூடிய இந்தியா, ஏக இந்தியா என்று எதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடிகிறது? நான் இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்திருக்கிறேன். குறிப்பாக, இரயில் போக்குவரத்து, ஏக இந்திய அளவிலே செயல்படுகிறது. தபால், தந்தி, தொலைத் தொடர்பு, ஏக இந்திய அளவிலே செயல்படுகிறது. அதேபோல, விமானப் போக்குவரத்து, ஏக இந்திய அளவிலே செயல்படுகிறது. இப்படி விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில செயல்பாடுகள் மூலமாகத்தான் அது ஏக இந்தியாவாக இருக்கிறதே தவிர, ஒற்றுமை ரீதியாக, ஒருமைப்பாட்டு ரீதியாக, உணர்வு ரீதியாக, தேவை ரீதியாக, எல்லாச் செயல்களையும் ஒருங்கிணைத்து செயல்படுவதன்மூலமாக அது ஏக இந்தியாவாக இருக்கிறதா என்று பார்த்தால், இல்லையென்றுதான் சொல்ல முடியும். இது என்னுடைய சொந்தக் கருத்து. இதை நான் பல முறை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இதனுடைய ஆழமான அந்த அர்த்தத்தைப் புரிந்து இந்தச் செய்தி இதிலே சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, இதை மத்திய அரசாங்கம் காலத்தில் உணர்ந்துகொண்டு, புரிந்துகொண்டு, கால மாற்றத்திற்கேற்ப பொருத்தமான முறையிலே அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற அந்தக் கோரிக்கை நியாயமானது. இதை உடனடியாகச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற ஆளுநர் உரையை, அதற்கான அந்த முன்முயற்சிகள் எடுத்திருக்கிற நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு சேர்ந்த முறையிலே, 'மக்களுக்கான நற்பணிகளை ஆற்றும் பொறுப்பு மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது' என்பது நல்ல அழகான செய்தியாக இருக்கிறது. Service Tax-க்கு பெயர் நற்பணி வரி. ஆகவே, இந்த நற்பணி வரியை மத்திய அரசாங்கம் பெரும்பாலும் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறது. மாநில அரசுகள்தான் எல்லாக் காரியங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால், மத்திய அரசு வரி போடும், மாநில அரசு செயல்படும் என்று சொன்னால், இது மத்திய மாநில அரசுகளுக்கான கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு இருக்கிற கொள்கைக்கு, என்னுடைய பாணியில் சொல்லவேண்டுமானால் அது விரோதமானது. ஆகவேதான், அது





நயம்படச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தச் சேவை வரி, நற்பணி வரி இருக்கிறதே, இதை விதிக்கிற அந்த அதிகாரம் என்பது மாநிலங்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகத் தைரியமாக, ஆணித்தரமாக அதை எடுத்து வைத்து இருக்கிறார். அதை மத்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த அவையின்மூலமாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–05*

முல்லைப் பெரியாறு குறித்த விஷயங்கள் இங்கே பேசப்பட்டிருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது; வேறு வழி இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இது தென் மாவட்ட மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தினாலே, இதை இறுதி செய்வதற்கான முயற்சிகளை விரைவாக நாம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல மகிழ்ச்சியான செய்தி, *16* ஆண்டு காலமாக, காவிரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு வரும் என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த விவசாயிகளுக்கு, அடுத்த மாதம் *5* ஆம் தேதி அதனுடைய இறுதித் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது என்ற செய்தி வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இந்தச் செய்தியை மகிழ்ச்சிக்குரியதாக நாம் இந்த அவையிலே பகிர்ந்துகொண்டால்கூட, எனக்கிருக்கிற அச்சத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இப்படித்தான் இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டது. *205* டி.எம்.சி. இடைக்காலத் தீர்ப்பாக வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு. ஆனால், அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதற்குரிய முயற்சி எடுக்கிறபோது, கர்நாடக அரசு அதை ஏற்றுக்கொள்ள மறுத்து, கடைசிவரையிலும் அந்த இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றச் செய்ய விடாமலே செய்துவிட்டார்கள். இப்போது வருகிற இந்த இறுதித் தீர்ப்பு இருக்கிறதே, *5* ஆம் தேதி வருகிற இறுதித் தீர்ப்பு, அந்த விவசாயிகளுக்காக, தமிழக மக்களுடைய நலனுக்கான நல்ல தீர்ப்பாக அமையும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்று நாம் சொன்னால்கூட, இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன் அதை அமல்படுத்துவது, நடைமுறைப்படுத்துவது, யார்? இதைத்தான் நமது மத்திய

அரசாங்கத்தை வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறோம். இதன் மீது மத்திய அரசாங்கம் ஓர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும், இப்படி இறுதித் தீர்ப்பு வெளிவந்தவுடன் இந்த இறுதித் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சி யார்மூலமாக நடைபெறப் போகிறது; இதைத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேள்வியாக முன் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வேண்டுகோள் என்பது, காவிரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு வந்ததற்குப் பின்னாலே, அதை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகாரம் படைத்த ஓர் ஆணையத்தைக் கண்டிப்பாக நியமனம் செய்ய வேண்டும். அந்த ஆணையம் தொடர்ந்து கண்காணித்து, இறுதித்தீர்ப்பின் பலன் நமக்குக் கிடைக்கச் செய்வதற்குரிய முயற்சியை உறுதி செய்ய வேண்டும். அதற்கான ஓர் உத்தரவாதம் இல்லாத கட்டத்திலே நமக்குக் காவிரி நீர் தீர்ப்பு வந்தால்கூட, கர்நாடகம் என்ன செய்யமுடியும் என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஆணையம் அமைப்பதற்கான முயற்சியைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தென்னக நதிகள் இணைப்பு பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு காலத்தில் எடுக்கக்கூடிய முயற்சி, நல்ல முயற்சி. இதிலே குறிப்பாக நமது சுப்ரீம் கோர்ட் மத்திய அரசாங்கத்திற்கு ஓர் ஆலோசனை சொல்லி இருக்கிறது. உடனடியான ஒரு தீர்வு என்ற முறையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தத் தென்னக நதிகளை இணைப்பதற்கான புதிய முயற்சிகளை மேற்கொள்கிற மத்திய அரசாங்கம், என்ன ரீதியாக இந்தத் தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ளப்போகிறீர்கள்; இதை உடனடியாக 10 தினங்களுக்குள்ளாக சுப்ரீம் கோட்டுக்கு ஓர் அறிக்கையை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை சுப்ரீம் கோர்ட் கேட்டு இருக்கிறது. ஆகவே, இதைக் கேட்பது என்பதே ஒரு சரியான நிலைப்பாடாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, சுப்ரீம் கோர்ட் கேட்டிருக்கிற இதைப் பயன்படுத்தி, மத்திய அரசாங்கம் ஓர் அறிக்கையை, இந்தத் தென்னக நதிகளை எந்த மாதிரியாக இணைக்கப் போகிறோம்; என்ன திட்டங்கள் வைத்திருக்கிறோம்; என்ன செலவு செய்யப் போகிறோம்; எப்படி இதை





ஈடுகட்டப் போகிறோம் என்பதற்குரிய அறிக்கையை மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு வழங்கவேண்டும்; 10 தினங்களுக்குள்ளாக வழங்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் கேட்டு இருக்கிறது. நான் விரும்புவது, அப்படி சுப்ரீம் கோர்ட், மத்திய அரசாங்கத்தைக் கேட்டு ஓர் அறிக்கையைப் பெறுகிற அதேசமயத்திலேயே, நம்முடைய மாநில அரசும், இதில் இணைந்து, இதை மேலும் தேவையான முறையிலே நம்மையும் ஒரு வாதியாக இணைத்துக்கொண்டு, தேவையான ஆலோசனைகளை சுப்ரீம் கோர்ட்டிலே நாமும் அறிக்கை தாக்கல் செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சிந்திக்க வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அப்படி இந்த 10 தினங்களுக்குள்ளாக அவர்கள் அறிக்கை அளிக்கிறபோது நம்முடைய மாநிலத்தின் சார்பிலும், நாம் ஓர் அறிக்கையை நம்முடைய ஆலோசனையை, நம்முடைய வேண்டுகோளை இணைத்து சுப்ரீம் கோர்ட்டிலே வழங்கச் செய்வதற்குரிய முயற்சியாக எடுத்தால், இந்த வாய்ப்பு தென்னக நதிகளை இணைக்கச் செய்வதற்குரிய முயற்சியில் நம்முடைய மாநிலத்தினுடைய பங்கு இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இதைச் செய்யவேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–10*

நம்முடைய மாநிலத்திலே பல்வேறு பிரச்சினைகள், தொழில் வளர்ச்சி பற்றி பல்வேறு செய்திகள் குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றன. இந்தத் தொழில் வளர்ச்சிக்கான பல முன் முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டுக் கொண்டிருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது. வேலைவாய்ப்பும் பெருகி வருவதும் மகிழ்ச்சியளிக்கிறது. அதேநேரத்தில், இந்தத் தொழில்கள் தொடங்குவதிலே ஒரு கருத்து இருக்கிறது. குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு தொழில்கள் சென்றடைவதிலே தேக்கம் இருக்கிறது, தயக்கம் இருக்கிறது என்ற ஒரு செய்தி வலுவாக வந்து கொண்டிருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே 1996–2001 ஆட்சி காலத்திலேதான் தென் மாவட்டத்திலே நாங்குநேரி பகுதியிலே தொழிற் பூங்கா தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான எல்லா திட்ட நடவடிக்கைகளும் சொல்லப்பட்டன. அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த

[திரு. வை. சிவபுண்ணியம்] [2007 ஜனவரி 25

மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் அதற்கான திட்டங்களை எல்லாம் தயாரித்து அறிவித்து, அதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால், அந்தத் திட்டம் இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டால்கூட நாம் சென்னையிலும், சென்னையைச் சுற்றிலுமே தொழில்கள் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். தென் மாவட்டங்களுக்கு அந்தத் தொழில்களைக் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்ற குறைபாடும், ஏக்கமும், எதிர்பார்ப்பும் இருக்கிறது. அதை நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக தென் மாவட்டம் என்று சொல்கிறபொழுது சாலை வசதி இல்லை; கப்பல் போக்குவரத்து வசதி இல்லை என்று சொன்ன காலங்கள் எல்லாம் பழைய காலங்களாக இருக்கின்றன. இப்போது தூத்துக்குடி துறைமுகம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மதுரையிலிருந்து கன்னியாகுமரி சாலை தேசிய நெடுஞ்சாலையாக, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, போக்குவரத்து வசதி இல்லை என்ற காரணத்தைச் சொல்வது இயலாத சூழ்நிலையில், இப்போது தென் மாவட்டங்களில் போக்குவரத்து சாலை வசதி, கப்பல் வசதி என்று எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, தென் மாவட்டங்களுக்குத் தொழில்களைக் கொண்டு செல்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வெளிநாட்டு முதலாளிகள் நம்முடைய தமிழகத்திற்கு ஏராளமாக வந்து கொண்டிருக்கிறார்கள். பல தொழில்களைத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை; வரவேற்கிறோம். பல தொழில்கள் தொடங்கப் பட்டிருக்கின்றன. ஆனால், உள்நாட்டு முதலாளிகள் தொழில் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பல செய்திகள் வருகின்றன. குறிப்பாக, பெருந்துறையிலே சிப்காட் மூலமாக 350 கோடி ரூபாய் செலவிலே தொழில் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அநேகமாக அது தொடக்க நிலையிலே இருப்பதாக அறிகிறேன். அதைத் தொடங்குகிறபொழுது அதற்குரிய முக்கியத்துவம், முன்னுரிமை என்பது நமது அரசாங்கத்தின்மூலமாக தொழில் துறையின்மூலம் வேகமாக நடைபெறவில்லையோ என்ற



2007 ஜனவரி 25] [திரு. வை. சிவபுண்ணியம்]

ஒரு செய்தி பரவலாக வந்து கொண்டிருக்கிறது. வெளிநாட்டு முதலாளிகளை ஊக்கப்படுத்துவதைப்போல, உள்நாட்டு முதலாளிகளை ஊக்கப்படுத்தவில்லையோ என்ற ஒரு கருத்து இருக்கிறது. அது சரியா, தவறா என்று நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால், அப்படி ஒரு கருத்து வந்திருப்பதை பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தொழில்கள் நமது மாநிலத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவை மாவட்டம், திருப்பூரிலே பனியன் உற்பத்தித் தொழில் என்பது மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலக அளவில் ஏற்றுமதி செய்வதற்குரிய மிக வர்த்தகச் சந்தையாகவே, அது திகழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படி அந்தத் திருப்பூரிலே உற்பத்தி செய்கிற அந்தச் சாயப்பட்டறையாளர்கள் இப்பொழுது பிரச்சினையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான பல்வேறு திட்டங்கள் மாநில அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டன. இந்தத் திட்டங்களை அந்தச் சாயப்பட்டறை உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதிலே குறிப்பாக சிக்கலுக்குரிய பிரச்சினையாக இருப்பது என்பது, வெளியேற்றப்படுகிற அந்தக் கழிவுநீரை reverse osmosis என்ற முறையிலே கழிவுநீர் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பது நமது அரசாங்கத்தினுடைய முடிவாக இருக்கிறது. இதைச் செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொருட்செலவு ஆகும் என்பதுதான் அவர்களுடைய கருத்து.

இதிலே குறிப்பாக இருக்கிற ஓர் இடைவெளியைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த உரிமையாளர்களும் சரி, அரசியல் கட்சித் தலைவர்களும் சரி, ஒரு கருத்துச் சொல்வது என்பது, இதைச் சொல்கிறபோது அரசாங்கத்திலே, குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் சொல்லப்படுகிற கருத்துகளையும், அவர்கள் நம்மிடம் சொல்கிற கருத்துகளையும் பார்க்கிறபொழுது, ஏதோ தவறான செய்தியைச் சொல்லி ஓர் இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்ற கருத்து அவர்கள் மூலமாகச் சொல்லப்பட்டது. ஏதோ அரசு சொன்னதை ஏற்றுக்கொள்ள மறுத்து அந்தச் சாயப்பட்டறை உரிமையாளர்கள் அதை நிறைவேற்ற மறுப்பதைப்போல் ஒரு தோற்றம்

இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி அல்ல; எங்களாலே அதை நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறோம் என்பதுதான் எங்களுடைய நிலைமை என்பதை நீங்கள் சொல்ல வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதன்மூலமாக விவசாயம் பாதிக்கப்படுகிறது. தண்ணீர் பாதிக்கப்படுகிறது; அதற்குரிய கோரிக்கைகள், அதற்குரிய போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. ஆனால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் திருப்பூர் என்பது பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய ஒரு நகரமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 5 இலட்சம் தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக எங்களது காவிரி டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் இருக்கிற இளைஞர்களும், இளம் பெண்களும் ஏராளமானவர்கள் அங்கேதான் பிழைப்பிற்காகச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், இந்தச் சாயப்பட்டறைகளை மூடுகிற அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதைக் கவனத்திலே கொண்டு இதைச் சரிசெய்வதற்கான முயற்சியை எடுப்பதில் நம்முடைய மாநில அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களுக்குத் தெரியும். இதில் பிரச்சினையே அரசு அல்ல. உச்ச நீதிமன்றம்–சாயப்பட்டறைக்காரர்களுக்குத்தான் பிரச்சினை. உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்கள் அவர்கள். அதை மறுபடியும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நம்மிடம் சொல்லி பிரயோசனம் இல்லை. அவர்களிடம்தான் சொல்ல வேண்டும். யாரிடம்; கோர்ட்டிலேதான் சொல்ல வேண்டும். கோர்ட் எங்களிடம் என்ன கேட்கலாம், சர்க்காரும் இதிலே தலையிடலாமா என்று கேட்கலாம். இது ஒன்று. எனவே, மறுபடியும் அவர்கள் review petition போட்டு நிலைமைகளை விளக்கினால், நீதிமன்றம் தருகிற தீர்ப்பின் அடிப்படையில்தான் செய்ய முடியுமே தவிர, அரசைப் பொறுத்தவரையில் இரண்டு பக்கமும் பார்த்துச் செய்ய வேண்டும். ஒன்று, அந்தச் சாயப்பட்டறைகள் நசுங்கிவிடக் கூடாது என்பதையும் பார்க்க வேண்டும்; அந்தச் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறுகிற நீரினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்; அதையும் பார்க்க வேண்டும். ஆகையினாலே, அரசு என்ன செய்ய வேண்டுமென்று



revision petition போட்டு, judgement வருவதுவரையிலும் நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்க முடியும். ஏன் என்றால், நீதிமன்ற உத்தரவில் நாங்கள் தலையிட முடியாது.

கேட்டால், உச்ச நீதிமன்றத்திலே

பிற்பகல் 12–15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில், அந்தச் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறக்கூடிய நீர் என்பது உப்பில்லாமல் zero degree–க்கு discharge செய்யப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், உலக அளவில் zero degree–க்கு உப்பே இல்லாமல் செய்ய முடியாது என்பது விஞ்ஞானம். இந்த இடத்தில் மாநில அரசினுடைய தலையீடு வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அன்று உச்ச நீதிமன்றத்தில், அந்த zero degree–யில் நாங்கள் தண்ணீரை வெளியே விடுகிறோம் என்று ஒப்புக்கொண்டது ஆலை அதிபர்களே தவிர, அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனால், கடந்த ஆட்சியில் ஒரு கடுமையான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி, ஆலைகளை நிறுத்தி விடுவோம்; மின்சாரக் கட்டைகளை எடுத்துவிடுவோம்; ஆகவே, நீங்கள் இதை ஒத்துக்கொண்டு கையெழுத்திட வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்திய ஒரு சூழ்நிலையில், கழுத்திலே கத்தியை வைத்துக்கொண்டு ஒருவன் மிரட்டினால் எப்படி பயப்படுகிறாரோ, அப்படி அந்த நிலையில், வேறு வழியில்லாமல், அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஆனால், இன்றுவரையில் அந்த zero degree discharge–க்கான எந்தத் தொழில்நுட்பமும் அரசோ அல்லது நம்முடைய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமோ அவர்களுக்குச் சொல்லவில்லை என்பதும் அதோடு இணை[illegible] என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய [illegible] [illegible]வர விரும்புகிறேன்.

தமிழ்நாடு ... 827484 சென்னை-600 008

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். எவ்வித நச்சுத் தன்மையும் இல்லாமல் வெளியேற்றப்பட வேண்டுமென்ற உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இருந்தாலும்கூட, அதிலே உப்புத் தன்மையை அறவே மாற்ற முடியாது என்பது யதார்த்த நிலை. தொழில்நுட்ப வல்லுநர்கள் உப்புத் தன்மையை மாற்ற முடியாது; ஆனால், நச்சுத் தன்மைகளை எல்லாம் மாற்றிவிடலாம் என்று சொல்கிறார்கள். கடல் நீர் உப்புத் தன்மை கொண்டது. இந்த உப்புத் தன்மை கொண்ட நீர், உப்புத் தன்மையுள்ள நீரோடு இப்போது கலப்பதிலே தப்பில்லை. ஆனால், கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழக்கக்கூடாது என்பதிலே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமே தவிர, உப்புத் தன்மையைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஆகவேதான், நம்முடைய தொழிற் சங்கங்கள், தொழிலாளர்கள், ஆலை முதலாளிகளெல்லாம் கேட்டுக்கொள்வது, மாநில அரசு இதிலே தலையிட்டு ஒரு நல்ல தீர்வினை உண்டாக்க வேண்டும். அது உச்ச நீதிமன்றத்தின் வாயிலாக ஏற்பட்டாலும் சரி அல்லது மாநில அரசே முழுப் பிரச்சினையையும் கையில் எடுத்துக்கொண்டு தீர்வு ஏற்படுத்தினாலும்சரி, 5 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட பிரச்சினை. இது முக்கியமான பிரச்சினை. அன்னியச் செலாவணியை அரசுக்கு ஈட்டித் தரக்கூடிய பிரச்சினை. ஆகவே, மாநில அரசு உடனடியாக தலையிட்டு, திருப்பூர் பின்னலாடைத் தொழிலுக்குப் புத்துயிரூட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதுதான் மக்களுடைய பிரச்சினை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. அதுதான், திரும்பவும் நாங்கள் சொல்கிறோமே? திருவாளர்கள் கோவிந்தசாமி சொன்னது மாதிரி, பாலபாரதி சொன்னது மாதிரி, zero degree–யிலே discharge செய்து கொடுக்க முடியும் என்றும் நாங்கள் சொல்லவில்லை. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். எந்த நாட்டிலேயும் எங்கேயும் zero degree discharge வராது, practical ஆக வராது என்பதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால், அன்றைக்கு கோர்ட்டிலே போய், நாங்கள் zero degree–யிலே விடுகிறோம் என்று எழுதிக் கொடுத்தது ஆலை அதிபர்கள். அது ஏன் என்று கேட்டால், பின்னாலே கத்தியை





வைத்துக்கொண்டு பண்ணினார்கள் என்று சொன்னார். அதைச் செய்தார்கள். அன்றைக்கு நாங்கள் இல்லை. அதை கோர்ட்டிலே போய்ச் சொல்ல வேண்டும். அப்போது கத்தியை வைத்தார்கள் என்று சொல்ல வேண்டும். என்ன பண்ண முடியும்? ஆகையினாலே, கோர்ட்டிலே என்ன கேட்கலாம் எங்களை என்றால் உங்களுடைய சர்க்காருடைய நிலைமை என்ன என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால், நாங்கள் கோர்ட் என்ன சொல்கிறதோ அதனைச் சர்க்கார் செய்யத் தயாராக இருக்கிறது என்று நாங்கள் சொல்லலாமே தவிர, சர்க்கார் இதிலே வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. அதுதான் இதிலே பேசி முடித்திருக்கிறோம். அவர்களிடமும் பேசியிருக்கிறோம். அதிலே ஒன்றும் பிரச்சினையில்லை. அவர்கள் பேசியதனாலே சொன்னோமே தவிர, அரசு இரு பக்கமும் அனுதாபத்தோடு இருக்கிறது. விவசாயிகளுக்கும், ஆலை முதலாளிகளுக்கும் இரண்டு பக்கமும் அனுதாபத்தோடுதான் இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

*பிற்பகல் 12–20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** என்னுடைய நேரம் போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மைக் கொடுங்கள். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, நீதிமன்றம் எதைச் சொல்கிறதோ, அதை நாங்கள் செய்கிறோம் என்று இங்கே கருத்தைத் தெரிவித்தார்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இப்போது நீதிமன்றம் அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இப்போது நீதிமன்றம் அவர்களுக்கு அபராதம் என்று ஒன்றைப் போட்டு, அதைக்

கட்ட வேண்டும் என்று சாயத் தொழிலதிபர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அது வேறு. ஆனால், இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டுமென்று சொன்னால், ஈரோடு, திருப்பூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் இருக்கக்கூடிய சாயப் பட்டறைகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீர், ஒரத்துபாளையம் dam–லே போய் சென்று தேங்கி, அந்தப் பகுதியைப் பூராவும், முழுக்க முழுக்க அங்கே மாசு அடையச் செய்கிற காரணத்தினாலேதான் இந்தப் பிரச்சினை எழுகிறது. அதே பிரச்சினை, எங்களுடைய பொதுப் பணித் துறை அமைச்சரும் நானும் இருக்கிற இந்த வேலூர் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய நீர் பாலாற்றை முழுமையாகக் கெடுத்துவிடுகிறது. ஆகவே, இதற்கு ஒரு தீர்வு என்று சொல்கிறபோது, சுத்திகரிக்கப்படுவதில் அந்த ஜீரோ டிகிரி அது வராது. அந்த T.D.S. ஜீரோ தன்மைக்கு வராது என்ற காரணத்தினால், உப்புத் தன்மை இருக்கக்கூடியவற்றை, உப்புத் தன்மை இருக்கக்கூடிய கடல் நீரில்கொண்டு போய் விடுவதுதான், ஒரு சரியான தீர்வு என்று சொல்லி, அதை ஈரோடு, திருப்பூர் மாவட்டத்திற்கு, சாயப் பட்டறைத் தண்ணீரை 800 கோடி ரூபாய் திட்டத்திலே கொண்டுபோய் நாகைப் பகுதியிலே இருக்கக்கூடிய கடற் பகுதியிலும், அதேபோல, வேலூர் மாவட்டத்திலிருந்து வரக்கூடிய தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீரை எல்லாம் பைப் லைன் மூலம் சென்னையிலே கடற் பகுதியிலே கொண்டு வந்துவிட்டால்தான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு என்கிற காரணத்தினாலேதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையிலே இருக்கிற இந்த நேரத்தில் எங்களுடைய ஒட்டுமொத்தக் கோரிக்கை, இதை பைப் லைன்மூலம் கடலிலே கொண்டுபோய் விடுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்றுதான் நாங்கள் ஒரு நிரந்தரத் தீர்வாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாயப் பட்டறைகளிலிருந்து வெளிவருகிற நீரில் உப்பு இருக்கிறது. கடலிலே உப்பு இருக்கிறது. உப்பு உப்போடு சேரட்டும் என்று சுலபமாக ஒரு தத்துவத்தைச் சொன்னார். அதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அப்படி விடுகிறபோது, கடல்வாழ் உயிரினம் இறந்துவிடுகிறது என்று யாராவது ஒருவர் பெட்டிஷன் போட்டால், அதை உடனே நிறுத்திவிடுவார்கள். உங்களுக்குத் தெரியாதது அல்ல. அதனாலே கோர்ட்டிலே அதைத்தான் உடனே முதலிலே எடுத்துக்கொள்வார்கள். ஆகையினாலே, கடலில் விடுவதாக இருந்தாலும், அதை treat பண்ணிவிட்டால்தான் ஏற்றுக்கொள்வார்களே





தவிர, அப்படியே கொண்டுபோய் விட்டுவிட முடியாது. அது வீண்தான். அது நீண்ட காலத் திட்டம். இப்போது, அவர்களுக்கு 1 ஆம் தேதி கட்டவில்லை என்றால், factory–ஐ மூடிவிடுகிறேன் என்று சொல்கிறார்களே, உடனடியாக, அது முதலில் தற்காலிகமாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம். அந்த இரண்டு திட்டத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவ்வளவுதான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். குறிப்பாக, உப்பு நீர் கடல் நீரில் கலப்பதால் அதிலே பிரச்சினை வந்து, அதிலே ஒரு மாற்றுக் கருத்து அல்லது ஏதாவது ஒரு பெட்டிஷன் போட்டால் என்ன ஆகிறது என்று. ஆனால், இந்தியாவிலேயே 4 மாநிலங்களிலே கடலில்தான் இப்படிப்பட்ட ஆலைகளிலிருந்து வருகிற கழிவுநீரை, அந்த உப்பு நீரைக் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

அரியானா மாநிலத்திலே, மஹாராஷ்டிராவிலே, குஜராத்திலே இப்படிப்பட்ட மாநிலங்களிலே இந்தத் தொழில்கள் நடைபெறுகிற இடங்களிலே அருகிலே அந்தக் கடல் இருக்கிற காரணத்தினாலே அதிலே கலந்துகொண்டிருக்கிறது. அது நடைமுறையிலே இப்போது இருக்கிற செய்தி. ஆகவே, இது ஒரு பிரச்சினையாக மாறாது. ஒன்று என்னவென்றால், இதைத் தடுப்பதற்கான முயற்சி எடுக்கிற மத்திய சுற்றுச்சூழல் துறையாக இருந்தாலும் சரி, மாநில சுற்றுச்சூழல் துறையாக இருந்தாலும் சரி, இப்படிக் கழிவு நீர் வருவது என்பதற்கு எதிராக இருக்கிறது என்பது உண்மைதான்; அதைத் தடுக்க வேண்டும், நிறுத்த வேண்டும் என்று மட்டும் சொல்கிறார்களே தவிர, அதற்கு மாற்று ஏற்பாடு என்ன என்பதைச் சொல்ல வேண்டுமா, இல்லையா? இதை மத்திய அரசாங்கத்தினுடைய சுற்றுச்சூழல் துறையும் சொல்வதில்லை; மாநில அரசாங்கத்தினுடைய சுற்றுச்சூழல் துறையும் இதற்கு மாற்று ஏற்பாடு என்ன என்று சொல்வதேயில்லை. இதுதான் இப்போதிருக்கிற பிரச்சினை. ஆகவேதான், மாற்று ஏற்பாடு என்ன செய்யலாம் என்பதை இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே நடைமுறையிலே இருக்கிற காரணத்தினாலே, அந்த இரசாயனக் கழிவை அங்கேயே சுத்திகரிப்புச் செய்துவிட்டு, அதிலேயிருந்து வருகிற உப்பு நீரைக் கடலிலே கொண்டு செல்வதற்குரிய பைப் லைன் போட்டால், அதற்குரிய திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொல்லப்படுகிறது.

இதற்குரிய முயற்சியை நம்முடைய கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய சுப்பராயன் அவர்கள், நம்முடைய மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் மாண்புமிகு ராஜா அவர்களிடத்திலே கடிதமாக எழுத்துமூலமாகக் கொடுத்து, அவரும் ஒரு பதில் கடிதம் அனுப்பி இருக்கிறார். அவர் சொல்லியிருப்பது இதைப்பற்றி சிந்தனை செய்வதற்கு மத்திய அரசாங்கம் யோசனை செய்யும். இதற்கு மாநில அரசாங்கத்தின்மூலமாக ஒரு திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தால், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி இந்த அரசு யோசிக்கும் என்று அவர் எழுத்துபூர்வமான பதிலை மாண்புமிகு சுப்பராயன் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு தயாராக இருக்கிற நிலையிலே நம்முடைய மாநில அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றம் செய்வதற்குரிய முயற்சியை எடுத்தால், ஒரு *400* கோடியிலிருந்து *500* கோடி அல்லது *800* கோடி அளவு செலவு செய்தால், இதை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்துகொண்டு அதற்குரிய திட்டத்தை நிறைவேற்றம் செய்வதற்குரிய முயற்சிகளும் வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினாலே, இதைப்பற்றி ஆழமாக நம்முடைய மாநில அரசு சிந்தித்து, உடனடியாகத் தலையிட்டு, இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும்; விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும்; தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும். அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)* குறிப்பாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள், நேரமாகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். குறிப்பாக... (குறுக்கீடு)

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடியல் எஸ். சேகர், சொல்லுங்கள் என்ன என்று.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரத்துபாளையம் நீரிலே விவசாயிகள் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே தொழிலும் வளரவேண்டும், உழவும் செழிக்க வேண்டும். இதற்கு உறுப்பினர்கள் சொன்ன கருத்தை தமிழக அரசு சற்றுக் கருணையோடு பரிசீலிக்க வேண்டும். Ocean discharge கடலிலே கலந்து விடுவது என்பது மரியாதைக்குரிய இந்திய





கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல இந்தியர்விலே பல மாநிலங்களிலே இருந்து வருகிற செய்தி. குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே ocean discharge முக்கியமான செய்தி. இன்றைக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற திருப்பூர் சாயத் தொழிலை விட்டுக் கொடுத்துவிடமுடியாது. அதே சமயத்திலே *(குறுக்கீடு)* பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களும் பாதிக்கப்படக்கூடாது. அதற்கு அரசு ஒரு பைப்லைன் ஸ்கீம் என்கிற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் -- மத்திய அரசினுடைய NEERI என்கின்ற அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற திட்டம். பைப்லைன் மூலமாக—கடல் பகுதிக்குச் கொண்டு சென்று அங்கு R.O. Unit போட்டு sea discharge செய்து கடலிலே கலக்கச் செய்யலாம். அப்படி ஒரு நல்ல திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து, இந்த நாட்டிலே விவசாயத்தையும் வாழ வைக்கவேண்டும், தொழிலையும் வாழ வைக்க வேண்டும். இதற்குத் தனியாக விவசாயிகள், தொழிலதிபர்கள் அடங்கிய கூட்டுக் கூட்டத்தைக் கூட்டி, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். இது நாட்டினுடைய முக்கியமான பிரச்சினை. இப்போது 6 தொகுதிகளைப் பாதிக்கிற பிரச்சினை. இதை இப்படியே விட்டுவிட்டால், தமிழகம் முழுவதும் பாதிக்கிற பிரச்சினையாக மாறிவிடும். எனவே, கருணைகூர்ந்து இதற்கு நிரந்தரத் திட்டம் தீட்டவேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களை விவசாயிகள் சார்பிலே, தொழிலதிபர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், பேசுங்கள். 27 நிமிடங்கள் ஆகிவிட்டன. வேகமாக முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் சீக்கிரம் முடித்து விடுகிறேன். நான் கொஞ்சம்தான் பேசுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இந்தப பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்ற காரணத்தினாலே பல உறுப்பினர்களும் கருத்துச் சொல்கிறார்கள். அதைவிட மிக முக்கியமானது, இந்தப் பிரச்சினைகளைப் பற்றி இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறபொழுது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இங்கே இருந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். எல்லோருக்கும் உள்ள எதிர்பார்ப்பு, ஆதங்கம், ஏதாவது ஒரு வரியிலே அவர்கள் வாயால் ஒரு பதிலைச் சொல்லமாட்டார்களா என்பதுதான். அதுதான் எங்களுடைய ஏக்கமும்,

எதிர்பார்ப்பும், விருப்பமுமாக இருக்கிறது. ஆகவே, இதன்மீது ஒரு நம்பிக்கையளிக்கக்கூடிய வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு கருத்தை ஒரு வரியில் சொல்ல வேண்டும் என்று நான் மிகப் பணிவோடு, மெத்தப் பணிவோடு உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.(குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு குரல் பேச இயலவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் அவர்கள் இதன்மீது ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் நான் கருதுகிறேன். அப்படி நினைத்துக்கொண்டால் இதன்மீது கண்டிப்பாக ஒரு தீர்வைக் காண்பார்கள் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இந்த விஷயம் கோர்ட்டில் pending--ல் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கோர்ட் விஷயத்தில் நமக்கு ஒன்றும் கருத்து இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கோர்ட்டில் pending–ல் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை நம்முடைய மாநில அரசு, கலைஞர் அவர்கள் எடுத்தாலொழிய இதற்குத் தீர்வுகாண முடியாது. அதைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இங்கே பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. இருந்தாலும், குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியிலே வேலை நியமனத் தடைச் சட்டம் என்று, அநேகமாக வரலாற்றிலே இல்லாத வகையிலே ஒரு சட்டத்தைப் போட்டார்கள். இன்றைக்கு அ.தி.மு.க. நண்பர்கள் சட்டசபை தொடங்கிய நாளிலிருந்து தினசரி அவர்கள் வெளிநடப்புச் செய்து வருகிறார்கள். வெளிநடப்பு என்பதெல்லாம் கேள்வி நேரம் முடிந்ததற்குப் பின்னாலேதான், வெளிநடப்பு என்பது ஒரு நடைமுறையிலே இருந்தது. ஆனால், கேள்வி நேரம் தொடங்குகிறபொழுதே வெளிநடப்பு என்று போவது என்பது ஒரு புதுமையான விஷயம். அதிலே ரொம்பப் புதுமையானது அ.தி.மு.க. வெளிநடப்பு என்றால், எப்படி குரங்கு மரத்திற்கு மரம் தாவும்போது குட்டியை அணைத்துக் கொண்டு செல்லுமோ அதேபோல அ.தி.மு.க. வெளிநடப்புச் செய்தால் அதன் பின்னாலே ஓட்டியே ம.தி.மு.க.



சென்றுகொண்டிருக்கிறது. இது ரொம்ப விநோதமாக இருக்கிறது. ஆனால், அவர்கள் ஏதோ பெரிய அரசியல் சாணக்கியத்தோடு செய்வதாக நினைத்துக்கொண்டு வெளிநடப்புச் செய்கிறார்கள். என்ன காரணம் என்று ஒன்றும் புரியவில்லை. ஒரு வரியிலே சொல்கிறார்கள், அந்த வரிக்கு என்ன காரணம்–விளக்கம் என்று சொல்லப்படுகிறது. மக்களுக்குரிய பிரச்சினைபற்றி இவர்கள் பேசுவதற்கு இல்லை என்று சொல்வது வேதனையளிக்கிறது.

இன்னொன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள் சட்டமன்றத்திற்கு வரவில்லையென்று தினசரி பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு நபர் சட்டமன்றத்திற்கு வராமல் இருந்தாலும், அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அனைவருமே மாண்புமிகு பேராசிரியர் உட்பட அனைவருமே இந்த அவைக்கு வந்திருந்து தினசரி பேசினார்கள். ஆனால், ஒருவர் வராததினாலேயே இந்த நாடு சீரழிந்துபோய் விட்டதைப் போன்று முன்னாள் முதலமைச்சர் இந்த அவையிலே குறிப்பிட்டு பலமுறை சொன்னார். ஆனால் ஒட்டுமொத்தமாக அடியோடு இவர்கள் எல்லோரும் சென்று கொண்டிருக்கிறார்களே இவர்கள் நாட்டின்மீது அக்கறை உள்ளவர்களா என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுக்குரிய பிரச்சினைகளைப் பற்றி இங்கே பேசவேண்டுமா, இல்லையா ? அவற்றின்மீது தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளைச் சொல்லவேண்டுமா இல்லையா ! ஆகவே, நாட்டின்மீது, மக்களின்மீது அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான் இந்த அவையின்மூலமாக எடுத்துக்கொள்ளக்கூடிய செய்தியாக நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இப்படி எதிர்க்கட்சி என்பது ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

அவர்கள் ஆட்சியிலேதான், வேலை நியமனத் தடைச் சட்டத்தையும் போட்டார்கள். ஆனால், அந்தத் தடைச் சட்டத்தை நீக்கி, இப்பொழுது பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலையை வழங்கி, வாழ்வளித்து இருக்கிறார் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். ஆனால், இதிலே இருக்கிற ஒரு சிறிய சிக்கல் என்னவென்று சொன்னால், இப்பொழுது தொழிற் கல்வி ஆசிரியர்கள் பணி நியமனம்; அதேபோல கல்லூரி விரிவுரையாளர்கள் பணி நியமனம்; பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமனம்; இவற்றையெல்லாம் செய்வதற்கு வயது வரம்பை 5 ஆண்டுகள் தளர்த்தி, அதற்குரிய வாய்பபை

வழங்கியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதிலேகூட பல பேர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமலேயே போய்விட்டது. காரணம் அவர்கள் பதிவு செய்து 20 ஆண்டு காலம், 22 ஆண்டு காலம், தளர்த்திய வயது வரம்பையும் அவர்கள் கடந்துவிட்டார்கள். இந்த 5 ஆண்டு கால தளர்வு என்றாலும், அந்த வாய்ப்பை இழந்துவிட்ட நிலையிலே பல பேர் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலே மேலும் வயது வரம்பைத் தளர்த்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-30*

பல நல வாரியங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சிறப்புக்குரிய வகையிலே மீனவர்களுக்கான நல வாரியம் அமைக்கப்படும் என்று சொல்வது மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இது அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் அடைவதற்கான ஒரு முயற்சி என்கின்ற அடிப்படையில், இதைப்பற்றி இதுவரையில் யாரும் சிந்திக்கவில்லை. ஆனால், நம்முடைய கலைஞர் அரசு மீனவர்களுக்கான நல வாரியத்தை அமைக்கச் சிந்தித்து, செயல்படுத்தியிருப்பது என்பது மிகச் சிறப்புக்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். இதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டு, அது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் ஏற்கெனவே வரவேற்றிருக்கிறோம்; இப்பொழுதும் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்; நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தின் மூலமாக 66 இலட்சம் குடும்பத் தலைவர்களுக்கு அடையாள அட்டை வழங்குகிற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை வைத்தேன். விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தின் மூலமாக குடும்பத் தலைவருக்கு மட்டும் வழங்கப்படுகின்ற அந்த அடையாள அட்டை என்கிற அந்த நடைமுறை என்பது சென்ற அ.தி.மு.க ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட நடைமுறை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விவசாயத் தொழிலாளர்களுக்கான





நல வாரியம் அமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பின்னாலே அது கலைக்கப்பட்டுவிட்டது. திரும்பவும் இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்திருக்கிறது. ஆட்சி வந்தவுடன் திரும்பவும் அந்த நல வாரியம் அமைக்கப்பட்டது மட்டுமல்ல, அது சட்டரீதியாகவே அங்கீகாரம் செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே என்ன நடைமுறை இருந்ததோ அதே நடைமுறையிலேயே, குடும்பத் தலைவருக்கான அடையாள அட்டை என்று வழங்கப்படுவது என்பது பொருத்தமாக இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். தனி நபர் ஒவ்வொருவரும்தான் நல வாரியத்திலே உறுப்பினர்களாகச் சேர்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, ஒவ்வொருவருக்கும் தனி அடையாள அட்டை வழங்கச் செய்வதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுகோளாகவும் வைக்க வேண்டும் இங்கே மாநில அரசும் கவனம் செலுத்த வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாயிகளுக்கான கடன் வழங்குவதிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, திருத்துறைப்பூண்டி தொகுதியிலே, நகரத்திலே இருக்கிற State Bank–ல் கிட்டத்தட்ட $3\frac{1}{2}$, 4 கோடி ரூபாய் விவசாயக் கடன் வழங்கப்பட்டதாக ஒரு செய்தி. ஆனால், இந்த வங்கிக் கடன்களை வழங்கியிருப்பது யாருக்கு என்றால், original–ஆக உள்ள விவசாயிகளுக்குக் கிடையாது. போலியாகத் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு உடந்தையாக அந்த வங்கி அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள்; இதற்கு உடந்தையாக நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள்; இதை வாங்கிக் கொடுப்பதற்கு agent–கள் நூற்றுக்கணக்கிலே இருக்கிறார்கள். இவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு, உண்மையான விவசாயிகளாக இல்லாதவர்களுக்கு State Bank–ன்மூலமாகக் கடனைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இது மத்திய அரசாங்கத்தின்கீழ் செயல்படுகிற செயல்பாடாக இருந்தால்கூட விவசாயிகளுக்குப் பலன் அளிக்கவில்லை.

நம்முடைய மத்திய நிதியமைச்சர் மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் மாதம் ஒருமுறை தமிழகத்திற்கு வருகிறபோது, ஓர் அறிவிப்பை வெளியிடுகிறார். மாணவர்களுக்கான கல்விக் கடன் என்பது, எந்தவிதமான கேள்வியும் இல்லாமல்,

எந்தவிதமான ஆதாரவும் இல்லாமல், ஆதாரமே தேவையில்லாமல், அப்பா கையெழுத்து போட்டால் போதும், பிள்ளை கையெழுத்து போட்டால் போதும், உடனே கல்விக் கடன் கிடைக்கும் என்று வந்து சொல்லிவிடுகிறார். இவர் சொல்லிவிட்டு டெல்லிக்குப் போய்விடுகிறார். ஆனால், மாணவர்கள் கடன் பெறுவதற்காக அந்த வங்கிகளுக்குச் சென்றால், அந்த மாணவர்களையோ, அந்தப் பெற்றோர்களையோ அந்தத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மதிப்பதே இல்லை. இதை நான் குறைபாட்டுக்காகச் சொல்லவில்லை. மத்திய நிதியமைச்சர் சொல்கிறார். மாநிலத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மாணவர்களுடைய கல்விக் கடனைப்பற்றி மதிப்பதே இல்லை; காது கொடுப்பதே இல்லை; அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள்; பல மாணவர்கள் இதனாலேயே படிப்பைப் பாதியிலேயே நிறுத்த வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற அந்தக் கொடுமையான செய்தியை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இதை மாற்றுவதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, மத்திய அரசு ஏழை மாணவர்களுக்கு வழங்கி வருகின்ற கல்விக் கடன் முறையாக வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். ஒருசில இடங்களிலே அதைப்போன்ற முறைகேடுகள் நடந்திருக்கலாம். ஆனால், ஒட்டுமொத்தமாக இதுதான் நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. இந்தியாவின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாமல், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுதான் தொழிற்கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு, மாணவியர்களுக்கு, எந்தவிதமான ஜாமீன் அல்லது mortgage, property mortgage போன்ற எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் கடன் வசதி செய்துகொடுக்கப்படும் என்கிற திட்டத்தை முதன்முறையாக அறிவித்தது. இன்று இந்தியாவிலேயே அதிகக் கடன் உதவியைப் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு முதலில் இருக்கிறது என்கிற தகவலை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் சொல்வதுபோல அப்படி யாராவது ஒரு மாணவருக்கு அந்த நிதி உதவி கிடைக்கவில்லையென்று சொன்னால் என்ன செய்வது என்று



நாங்களும் இதே கருத்தைக் கேட்டோம். இதற்காக மத்திய அரசு ரிசர்வ் வங்கியிலே ஒரு தனி அதிகாரியே நம்முடைய சென்னையிலே இருக்கிறார், செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். அவரது கவனத்திற்கு இந்தக் குறிப்பிட்ட மாணவனுக்கு, மாணவிக்கு எல்லாத் தகுதியும் இருந்தும் கடன் கிடைக்கவில்லையென்று அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுபோய்விட்டால், உடனே ரிசர்வ் வங்கியிலிருந்தே தனியாக அதிகாரிகளை அனுப்பி அந்த வங்கிக்கு, அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கச் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களுக்குச் சொல்கிறேன். இன்று பாராளுமன்றத்திலேகூட அவர்களது உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நிதியமைச்சருடைய கவனத்திற்கு அதைக் கொண்டுபோகலாம். அப்படி ஒருவேளை அவர்களுக்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னாலும்கூட, நாங்கள் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இங்கே இருக்கிறோம். எங்களுடைய நிதியமைச்சரை அடிக்கடி பார்க்கிறோம். நாங்கள் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுபோய் உடனடியாக அதைப் பெற்றுத் தருகிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12–35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ராஜ கண்ணப்பன். உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அண்ணன் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். நன்றி. (குறுக்கீடு) இவர் சொல்வதைப் பார்த்தால் மத்திய நிதியமைச்சருடைய... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. திரு. ராஜ கண்ணப்பன்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒருசில விளக்கத்தை இங்கே தந்தார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களுடைய நோக்கம் சரியாக இருக்கிறது. அவருடைய தொகுதியில்,

என்னுடைய தொகுதியும் அவருடைய பாராளுமன்றத் தொகுதியிலே இருக்கிற காரணத்தினாலே, நான் இந்தக் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் அங்கே நடந்த கூட்டங்களிலே பேசுகிறபோது, அவர் தெளிவாகச் சொல்கிறார். எந்த ஜாமீனும் தேவையில்லை, கல்வியிலே, மார்க் அடிப்படையிலே, தொழிற்கல்வியாக இருந்தாலும் அவர்களுக்கு உயர் கல்விக்கு கடன் தர வேண்டும் என்பதை அவர் பொதுக் கூட்டங்களிலேகூட, அரசு நிகழ்ச்சிகளிலேகூட தெளிவாகப் பேசுகிறார். ஆனால், அங்கே இருக்கிற அதிகாரிகள், Indian Overseas Bank அல்லது Indian Bank அல்லது மற்ற State Bank அங்கிருக்கிற Regional Manager–ஆக இருந்தாலும் சரி, Branch Manager–ஆக இருந்தாலும் சரி, ஒருவர்கூட சரியாக நடந்துகொள்வது கிடையாது. ஏனென்றால், பலருக்கு நாம் பரிந்துரை செய்தால்கூட, மார்க் வைத்திருப்பவர்கள்–அதிகமான எண்ணிக்கையில் மார்க்–மதிப்பெண் பெற்றவர்களுக்குக்கூட கிடைக்கவில்லை. ஆக, அவருடைய எண்ணம் சரியாக இருக்கிறது. ஒன்றிரண்டு பேர்களுக்குச் செய்கிறார்களே தவிர, பல நிபந்தனைகளைப் போட்டுவிடுகிறார்கள். ஆக, இதையெல்லாம் சரி செய்வதற்கு நிதியமைச்சர் அவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவரிடத்திலே பலமுறை நாங்கள் விவாதித்திருக்கிறோம். நீங்களும் அவரிடத்திலே அதை எடுத்துச் சொல்லவேண்டும். ஆகவே, இது ஒரு பொதுவான பிரச்சினை. தமிழ்நாட்டிலே இருக்கிற பொதுவான பிரச்சினை. மத்திய அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு அங்கு இருக்கிற அதிகாரிகள் சிலர் ஒத்துழைப்புத் தராத காரணத்தினாலே ஏற்படுகிற விளைவுகளைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்பதை அவர்களிடத்திலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதை நீங்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் முடித்துவிடுகிறேன். இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப time ஆகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராஜ கண்ணப்பன் அவர்கள் சொன்ன கருத்துதான்





உண்மையானது. ஆகவே, இதை வலியுறுத்தி அந்த வங்கிகள்மூலமாகக் கடன் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, வங்கிகளில் அந்தக் கடன் பெறுகிறபோது, அரசு ஊழியர்கள் சாட்சியாகக் கையெழுத்துப் போட வேண்டுமென்று ஒரு நிர்ப்பந்தம் இருக்கிறது. இப்படிப் பல்வேறு வகையிலே நிர்ப்பந்தப்படுத்துகிற அந்த முயற்சி எடுக்கப்படுகிறது. அண்ணன் அல்போன்ஸ் அவர்கள சொன்னதிலே ஒரு திருத்தம். ஒரு சில இடங்களிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம் என்று சொன்னார். ஒரு சில இடங்களைத் தவிர அனைத்து இடங்களிலும் அது இருக்கிறது என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இதைச் சரி செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற பத்து தினங்களுக்கு முன்பாக எங்கள் மாவட்டத்திற்குச் சென்று இரயிலைத் தொடக்கி வைத்திருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையிலே நமது தமிழகத்திற்கான இரயில் திட்டங்களைப்பற்றி, பயன்பாடுகளைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இந்தத் திட்டம் தொடங்கப் பட்டிருப்பதுபற்றி எங்களின் மாவட்ட மக்களின் சார்பாக மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு நன்றி செலுத்திக்கொள்கிறோம். திருவாரூரிலிருந்து சென்னை வருவதற்கு நேரடி இரயில் விடச் செய்வதற்கான முயற்சியை மத்திய அரசிடம் வலியுறுத்திப் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல, மயிலாடுதுறையிலிருந்து சென்னை செல்வதற்கு ஒரு தனி இரயில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கெனவே சென்ற இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு வரையிலும் ஐந்து இரயில்கள் அங்கேயிருந்து வந்தன. இப்பொழுது சென்னைக்கு வரும் ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரசில் ஐந்து பெட்டிகள்தான் இணைக்கப்படுகின்றன. ஐந்து இரயில் சேவை நடந்த இடத்திலே ஐந்து பெட்டிகள் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, அந்த இரயில் போக்குவரத்தை சென்னைக்கு நேரடியாகச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், சிவபுண்ணியம்.

[2007 ஜனவரி 25

பிற்பகல் 12–40

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். ஆட்டோக்கள்–5,000 ஆட்டோக்களுக்கான permit வழங்கப்படும் என்று அ.தி.மு.க. ஆட்சியில் சொல்லப்பட்டது. அதை முறைகேடாகச் செய்வதற்குரிய முயற்சிகள் நடைபெற்ற காரணத்தாலே, ஆட்டோ தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றார்கள். இப்பொழுது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 10,000 ஆட்டோக்களுக்கான permit வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஆய்வு செய்து, உடனடியாக வழங்கச் செய்வதற்குரிய முயற்சி எடுக்கவேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள்; பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சிறப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதார வாழ்த்துதலைச் சொல்லி, உங்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** 2007–2008 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின்மீது நடைபெற்று வருகின்ற விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது கட்சியினுடைய மாநிலத் தலைவர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அவையிலே பேசுகின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்த, சமூக நீதிக் காவலரும், தமிழினப் போராளியுமான, மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டில், மருத்துவத்திலே ஒரு மகத்தான சகாப்தத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற மத்திய சுகாதார அமைச்சர், இளைஞர்களுடைய எழுச்சி நாயகர், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, கடந்த ஐந்தாண்டு காலத்திலே நடைபெற்ற மக்களுக்கு எதிரான ஆட்சியின்மூலமாக, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய நாடி நரம்புகளையெல்லாம் தொட்டுப்பார்த்து, மக்களுடைய தேவைகளை அறிந்து, தேர்தல்



2007 ஜனவரி 25] [திரு. இல. வேலுசாமி]

அறிக்கையாகக் கொடுத்து, அதுவே நிதிநிலை அறிக்கையாகவும் அறிவிக்கப்பட்டு, ஆட்சிப் பொறுப்பேற்ற எட்டு மாத காலங்களிலே, மக்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு 2006 ஆம் ஆண்டு முடிந்து, 2007 ஆம் ஆண்டிலே நாம் கால் எடுத்து வைத்திருக்கின்றோம். ஆக, நம்மைவிட்டுப் பிரிந்த 2006 ஆம் ஆண்டு ஒரு பொன்னான ஆண்டாகும். இந்த ஆண்டிலேதான், மக்களுக்கு எதிராக நடைபெற்ற, மக்களுக்கு எதிரான ஓர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்களுக்காக, மக்களுக்குப் பயன்பெறக்கூடிய ஒரு சிறப்பான ஆட்சியைக் கொடுத்த ஒரு சிறப்புவாய்ந்த ஆண்டுதான் இந்த 2006 ஆம் ஆண்டு. ஆக, இந்த 2006 ஆம் ஆண்டின் இறுதியிலேதான், ஒட்டுமொத்த உலக மக்களையே அதிரவைத்த ஒரு சோகச் சம்பவம் நடந்தது. ஈராக்கினுடைய முன்னாள் அதிபர் சதாம் உசேன் அவர்களைத் தூக்கிலிட்ட அந்தச் சம்பவம், உலக மனித சமுதாயத்தையே அதிர வைத்தது. அப்படிப்பட்ட சம்பவம் இனி வருங்காலத்திலே நடைபெறக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2007 ஆம் ஆண்டிலே, நம்மை ஆட்சி புரிந்து வரக்கூடிய மத்திய, மாநில அரசாங்கத்தினுடைய ஒரு சிறப்பான ஆட்சி இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, 2007 ஆம் ஆண்டும் ஒரு சிறப்புவாய்ந்த ஆண்டாக இருக்கும். இந்தத் தமிழகத்தினுடைய வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என்பதிலே நமக்குச் சந்தேகம் கிடையாது. அதேநேரத்திலே, இந்த 2007 ஆம் ஆண்டிலே நாம் எதிர்கொள்ளவேண்டிய சவால்களும் இருக்கின்றன. இன்றைக்கு நம்மிடையே இருக்கின்ற சவால்கள், முல்லைப் பெரியாறு பிரச்சினை; காவிரி நதிநீர் பிரச்சினை; பாலாற்றுப் பிரச்சினை; சமூக நீதிப் பிரச்சினை. ஆகவே, இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நாம் இன்றைக்கு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே, இதையெல்லாம் நாம் எதிர்கொள்வோம் என்று சொல்லி, இப்பொழுது நமது தமிழக முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்டு வருகிற நடவடிக்கைகள் அனைத்தும், நாம் மகிழக்கூடிய அளவிலே இருக்கின்றன. சிறப்பான நடவடிக்கைகளை நமது தமிழக முதல்வர் அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

[திரு. இல. வேலுசாமி] [2007 ஜனவரி 25

பிற்பகல் 12–45

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் உருவாக்கிய ஜனநாயகம், தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கிய சமூக நீதி என்ற இந்த இரண்டு கூட்டாட்சித் தத்துவம் மூலமாக அமைக்கப்பட்ட கட்டமைப்பின் மீதுதான், தற்பொழுது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாம், வாழ்க்கை நிலையிலே உயர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை யாராலும் மறந்துவிட முடியாது. ஆனால், இப்பொழுது அந்தச் சமூக நீதியையே உடைத்தெறியக்கூடிய, சமூக நீதியினுடைய கட்டமைப்பையே உடைத்தெறியக்கூடிய அளவிற்கு நீதிமன்றங்களுடைய, நீதிபதிகளுடைய கருத்துகள் இருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம். ஆனால், இதையெல்லாம் நாம் சமாளிக்கமுடியும் என்கின்ற அளவிலே, இப்பொழுது சமூக நீதி காப்பாற்றப்படுவதற்காக, அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்கின்ற ஒரு நிலையை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதால், ஒட்டுமொத்த தமிழக மக்களும் இன்றைக்கு மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளையிலே, நமக்கு அருகிலே இருக்கின்ற இலங்கையிலே, சிங்களப் பேரினவாத அரசின் நடவடிக்கை காரணமாக, ஒட்டுமொத்த தமிழ் மக்கள் உடைமைகளை இழந்து, உயிர்களை இழந்து, செத்து மடிந்து கொண்டிருக்கின்ற நிலைமையை நாம் ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தமிழக முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளையும், மத்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளையும் மறுத்து, சிங்கள அரசானது தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருகிறது. இந்த நிலை மாறவேண்டும். அங்கேயிருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இந்த நிலைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இப்படி எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் அத்தனைக்கும், பாட்டாளி மக்கள் கட்சி, மருத்துவர் அய்யா அவர்களுடைய கொள்கையின் அடிப்படையிலே, 5 ஆண்டு காலமும் ஆட்சிக்குக் கை கொடுப்போம்; அனைத்து உரிமைகளுக்கும் குரல் கொடுப்போம் என்கின்ற இலட்சியத்தோடு, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர்களாகிய நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, இந்த ஆளுநர் உரையிலே புறம்போக்குப் பகுதிகளிலே, 10 ஆண்டு காலம் குடியிருக்கின்றவர்களுக்குப் பட்டா வழங்கப்படும்



2007 ஜனவரி 25] [திரு. இல. வேலுசாமி]

என்று சொல்லியிருப்பதை உண்மையிலேயே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றோம். அதேநேரத்திலே, 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஏரிப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்குப் பகுதிகளிலே வாழ்கின்றவர்களுக்கெல்லாம் தொடர்ந்து பட்டா கிடைக்காத அவல நிலை இருந்து வருகிறது. இதற்கு இங்கேயிருக்கின்ற சட்டம் குறுக்கீடாக இருக்கிறது என்று இங்கே சொல்கிறார்கள். மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்; எனது மாவட்டத்திலே, எம்.ஜி.ஆர். நகர், செங்கொடிபுரம் போன்ற பகுதிகளிலே, ஏறக்குறைய 20 ஆண்டு காலமாக வாழ்ந்து வரக்கூடிய மக்களுக்கு இன்றுவரை பட்டா கிடைக்காத அவல நிலை இருக்கிறது. ஆகவே, அதற்காக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, நீர்வடிப் பகுதி இல்லாத பகுதிகளிலே வாழக்கூடிய மக்களுக்கு, தமிழகமெங்கும் வாழக்கூடிய மக்களுக்குக் கட்டாயமாகப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த இனிய நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, கடந்த நிதிநிலை அறிக்கையிலே, கல்வித் துறையிலே புதிய மாற்றங்களையெல்லாம் கொண்டுவந்து, இன்றைக்குக் கல்வித் துறை, தமிழகத்திலே மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** 10 ஆம் வகுப்பில் புதிய அறிவியல் பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், அதற்குண்டான செய்முறைக் கூடங்கள் இல்லாத நிலை இருக்கிறது. வருங்காலத்திலே 10 ஆம் வகுப்புக்கும் செய்முறைக் கூடங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம் இருக்கிறது. ஆனால், அதற்கென்று தனி ஆசிரியர்களோ, தனிக் கட்டடமோ இல்லாத நிலையிருக்கிறது. இந்த நிலையை வருங்காலத்திலே போக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் இயல், இசை, நாடகத்திற்குத் தனி வகுப்புகள் தொடங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

எனது தருமபுரி மாவட்டத்திலே, கடந்த நிதிநிலை அறிக்கையிலே தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் நடவடிக்கையானது தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

[திரு. இல. வேலுசாமி] [2007 ஜனவரி 25

அதனுடைய தொடர் நடவடிக்கையாக, நேற்றைய முன்தினம், ஜப்பானிலிருந்து வங்கியினுடைய அதிகாரிகள் வந்து, ஒகேனக்கல் பகுதிக்குச் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்காக தருமபுரி மாவட்ட மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, வருகின்ற இந்த நிதியாண்டிலேயே இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, இந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, எங்கள் மாவட்டத்தினுடைய நீண்டநாள் கோரிக்கையான மாவட்டத்தினுடைய அமர்வு நீதிமன்றமானது இதுநாள்வரை துவங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, வருகின்ற இந்த நிதியாண்டிலே மாவட்டத்தினுடைய அமர்வு நீதிமன்றம் துவங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசினுடைய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்கின்ற அடிப்படையிலே, இந்த ஆண்டு தருமபுரிக்கு மருத்துவக் கல்லூரியை வழங்க வேண்டுமென்று முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கிய தருமபுரி மாவட்டமானது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை சேர்க்கப்படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *10* நிமிடங்கள் ஆகிவிட்டன. நிறையப்பேர் பேச வேண்டியுள்ளது. கட்சித் தலைவர்கள் நிறையப்பேர் பேச வேண்டியுள்ளது. உரையை முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** அதற்கு அதிகாரிகள் உரிய கணக்கீடுகளைக் கொடுக்காததே காரணம் என்று அங்கே தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, வருகின்ற இந்த ஆண்டிலே தருமபுரி மாவட்டத்தை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தருமபுரி மாவட்டத்தில் நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு, தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஏரிகளையும் தூர் வாரி புதிய ஏரிகளைக் கட்டுவதற்குண்டான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது மாவட்டத்தில், விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்தும், இன்னும் பல கூட்டுறவு வங்கிகளில் கடனில்லாச் சான்றிதழ்



2007 ஜனவரி 25] [திரு. இல. வேலுசாமி]

வழங்காமல் நிலுவையில் உள்ளது. ஆகவே, உரிய நடவடிக்கை எடுத்து அந்தக் கடன் தள்ளுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் சான்றிதழ் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி, பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** முடித்துவிடுகிறேன். எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலே கிராமப்புறச் சாலைகள் மண் சாலைகளாக உள்ளன. அந்தச் சாலைகள் அனைத்தையும் தார்ச்சாலைகளாக மாற்ற நெடுஞ்சாலைத் துறை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது மாவட்டத்திலே கடந்த ஆண்டு Bt., பருத்தி விதை பயிரிட்ட காரணத்தினாலே, ஆயிரக்கணக்கான விவசாயிகள் அங்கே பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, வரும் காலத்திலே அந்த Bt. பருத்தி விதையோ அல்லது நெல், கத்தரிக்காய் போன்ற எந்த விதையையும் இனிமேல் இங்கே பயிரிடுவதற்குண்டான அனுமதிகள் தரக்கூடாது. அதை முழுமையாகத் தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக அந்த நிவாரண நிதி வழங்கப்பட வேண்டும். அந்த நேரத்திலே அங்கே நடைபெற்று வந்த கருப்புக் கல் சுரங்கப்பாதைப் பணிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் அனைத்தும் உடனடியாகத் துவங்கப்பட வேண்டும். அப்படித் துவங்குகின்றபொழுது, தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், உரையை முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** எனது மாவட்டத்திலே ஆசிரியர் பயிற்சி நிறுவனம் இதுவரை இல்லை. அதேபோல, அரசு மகளிர் கலைக் கல்லூரியும் இல்லை. அதேபோல, மாவட்டத்தினுடைய நெடுஞ்சாலைத் துறை அலுவலகமும் இல்லை. இவை அனைத்தையும் இந்த நிதியாண்டிலே நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத்

தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

பிற்பகல் 12–55

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையைப் பொதுவாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கின்றோம். ஏற்கெனவே எங்கள் கட்சியின் சார்பில் இங்கே உரையாற்றிய உறுப்பினர்கள் அதனுடைய பல்வேறு நல்ல அம்சங்களை இங்கே சுட்டிக்காட்டி, வரவேற்று உரையாற்றியிருக்கிறார்கள். பொதுவாக, சட்டப்பேரவை தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், கொடுத்த வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதையும், அதன் விளைவாகத் தமிழக மக்கள் மத்தியிலே ஆதரவு தளம் விரிவடைந்து வருவதையும் உள்ளாட்சித் தேர்தலின்மூலம் பார்க்க முடிகிறது. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத அ.இ.அ.தி.மு.க., இந்த அரசைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சி வேண்டுமென்று கோருவது, ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்ற அ.தி.மு.க.வினுடைய இந்தக் கோரிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் தோல்வியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், பதவி இழந்ததைச் சகித்துக்கொள்ள முடியாமல் தொடர்ந்து அ.தி.மு.க. சட்டமன்றத்தில் இதுபோன்ற கலவரங்களைச் செய்வது, சட்டமன்றக் கூட்டத்திலே பங்கேற்காமல் தொடர்ந்து வெளிநடப்புச் செய்வது போன்ற காரியங்களைத் தொடர்ந்து அவர்கள் ஆற்றி வருவது, ஓர் அரசியல் கட்சி என்ற முறையில் தன்னுடைய ஜனநாயகக் கடமையைச் செய்ய விரும்பவில்லை என்பதைத்தான் அவர்களுடைய நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக, கடந்த வருடம் இதே ஆளுநர் அவர்கள் உரையாற்றத் தொடங்குகிறபோது, புதிதாக அமைந்த ஓர் அரசு, அதனுடைய துவக்கக் கூட்டத்திலே ஆளுநர் அவர்கள் உரையாற்ற வருகிறார். அந்த ஆளுநர் அறிக்கையிலே என்ன இருக்கிறது என்பதைக்கூடப் பார்க்காமல், அவர் உரையைப் படிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவே நீங்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை; மக்களை ஏமாற்றி வாக்குகளைப்





பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள் என்று கோஷங்களை எழுப்பி வெளிநடப்புச் செய்யத் தொடங்கியவர்கள் இன்றுவரையில் தொடர்ச்சியாக இதுபோன்ற காரியங்களில் விட்டுவிட்டு ஈடுபட்டு வருகிறார்கள். இந்தச் சபையிலே பங்கேற்று ஜனநாயகபூர்வமாக ஓர் அரசினுடைய நல்ல அம்சங்களை வரவேற்பதும், தவறான அம்சங்கள் இருக்குமானால், அவற்றைச் சுட்டிக்காட்டி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து திருத்த முயற்சிப்பதும ஓர் எதிர்க் கட்சியினுடைய கடமை. அந்தக் கடமையை ஆற்றுவதற்கு அவர்கள் விரும்பவில்லை. இதைத்தான் டெல்லியிலே பாரதிய ஜனதா கட்சி இன்றைக்கு ஆட்சி அதிகாரத்தை இழந்தபிறகு, டெல்லி நாடாளுமன்றத்தையே செயல்படவிடாமல் முடக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நெருங்கிய நண்பர்களான அ.தி.மு.க.—வும் தமிழ்நாட்டில் அதே பாணியைக் கடைப்பிடித்து வருவது உள்ளபடியே தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் நன்மை செய்யத் தயாராக இல்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, இந்தப் போக்கை அ.தி.மு.க. கைவிட்டு, சட்டமன்றக் கூட்ட நிகழ்ச்சிகளில் முறையாகப் பங்கேற்க வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் ஓர் அரசாங்கத்தைப்பற்றி நாங்கள் மதிப்பீடு செய்கிறபோது, அந்த அரசினுடைய செயல்பாடுகள் ஒரு தனி நபரை வைத்தோ அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சியாலோ மதிப்பிடுவதில்லை. அந்த அரசு எடுக்கிற நல்ல திட்டங்கள் அல்லது அது மக்களுக்காக ஆற்றிவருகிற செயல்பாடுகளில் மாநில மக்கள் இந்த அரசினுடைய செயல்பாட்டின்மூலம் அதிகபட்சம் பயனடைகிறார்களா, பாதிப்புக்கு ஆளாகிறார்களா என்பதை அளவுகோலாக வைத்துத்தான் ஓர் அரசாங்கத்தை மதிப்பீடு செய்கிறோம். அந்தவகையிலே, கடந்த எட்டு மாத காலங்களில், திராவிட முன்னேற்றக் கழக அரசு நம்முடைய பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு எடுத்துவருகிற நடவடிக்கைகள். மக்களுக்குச் சாதகமான செயல்பாடுகளே மேலோங்கி இருக்கின்றன என்ற நிலையில் இந்த நடவடிக்கைகள் மேலும் தொடர வேண்டும என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம. ஆகவே, இந்த நல்ல பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து இந்த அரசுக்குப் பக்கபலமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதைப்போல ஏதாவது தவறுகள் நிகழுமானால் அந்தத் தவறுகளை, பிரச்சினைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவோம். தேவை ஏற்படுமானால் மக்களைத் திரட்டி, இயக்கங்களையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயகபூர்வமாக நடத்தும். அப்படி நடத்துகிற இயக்கங்கள் இந்த் அரசுக்கு எதிரான செயலாகக் கருதாமல் ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியின் கடமை என்ற முறையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்துவார். ஒரு பொறுப்பான எதிர்க்கட்சி ஆளுகிற கட்சியினுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதற்கு உதவி செய்ய வேண்டுமென்கிற கருத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆகவே, அந்த வழியிலே ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற முறையிலும், அதோடு ஒரு பொறுப்பான தோழமைக் கட்சி என்ற முறையிலும், இந்த அரசில் ஏதாவது தவறுகள் ஏற்படுகிறபோது அவற்றைப் பொருத்தமான முறையிலே சுட்டிக்காட்டி, அவற்றைக் களைவதற்கும், அதோடு இந்த அரசிற்கு ஓர் அவப் பெயர் ஏற்பட்டுவிடக்கூடாது என்கிற நல்ல நோக்கத்திலும் இந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைச் சரி செய்வதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தன்னுடைய ஜனநாயகக் கடமைகளைத் தொடர்ந்து ஆற்றும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–00*

அடுத்ததாக, கடந்த இரண்டு நாட்களாக, செய்தித் தாள்களிலே பரபரப்பான பல செய்திகள் தொடர்ந்து வந்தவண்ணம் இருக்கின்றன. தனியார்கள் நடத்தக்கூடிய பொறியியல் கல்லூரிகளில், அவற்றின் உரிமையாளர்களுடைய வீடுகளில், வருமான வரித் துறையினர் இப்போது சோதனைகள் மேற்கொண்டு வருகிறார்கள் என்றும், அந்தச் சோதனைகள் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய், கறுப்புப் பணம் கைப்பற்றப்பட்டதாகவும், தங்க நகைகள் கைப்பற்றப்பட்டதாகவும், பல்வேறு சொத்துகளுக்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அதனாலே வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்றும், வங்கி லாக்கர்கள் சீல் வைக்கப்பட்டுள்ளன என்றும், பல்வேறு பரபரப்பான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தமிழகத்திலே தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், கட்டணம் என்கிற பெயரால், நன்கொடை என்கிற பெயரால், கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடிக்கக்கூடிய ஓர் அமைப்பாக இன்றைக்கு மாறி





வருகின்றன. ஆகவே, நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புவது, அப்படி வாங்குகிற நன்கொடைக்கு எந்த இரசீதும் கிடையாது, எந்தக் கணக்கும் கிடையாது. ஆகவே, இவையெல்லாம் கறுப்புப் பணமாகப் பயன்படுத்தக்கூடிய நிலைமை என்பது தற்போது நீடித்து வருகிறது. ஆகவே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஏழையெளிய நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்கள் கடுமையான பாதிப்பிற்கு ஆளாகின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்த, இந்தக் கல்லூரிகள் கட்டுப்பாடு இல்லாமல், நன்கொடைகளை வசூலித்துக் கொள்ளையடிப்பதைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே தமிழக அரசு ஒரு தனிச் சட்டம், இந்தக் கல்லூரிகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு தனிச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அழுத்தமாக நான் வலியுறுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சமீபத்திலே கேரளாவிலே அப்படியொரு சட்டம் கொண்டுவரப்பட்டு, தனியார் கல்லூரிகள், எல்லையில்லாமல் வசூலிக்கின்ற அந்த நன்கொடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதைப்போல, இங்கேயும் அதைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த வருமான வரிச் சோதனை நிகழ்ச்சிக்கு அரசியல் சாயம் பூசப்படுகிறது. மாநிலத்திலே பல இடங்களிலே மறியல். அதேபோல, இதிலே ஒரு சட்டமன்ற உறுப்பினரும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற செய்திகளெல்லாம் வருகிற காரணத்தினாலே, என்ன நடந்தது என்பதை அரசு இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, pension மத்திய அரசாங்கம், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் ஒன்றை உருவாக்குவதற்கு, மாநில முதலமைச்சர்களுடைய கூட்டத்தைச் சமீபத்திலே டெல்லியிலே நடத்தியது. அந்த ஓய்வூதிய நிதியை பங்குச் சந்தையிலே முதலீடு செய்வதற்கு, மாநில முதலமைச்சர்களுடைய அனுமதியைப் பெறுவதற்கு அந்த மாநாடு கூட்டப்பட்டது. அந்த மாநாட்டிலே இடதுசாரிக் கட்சிகளைச் சார்ந்த முதலமைச்சர்கள், அதேபோல வேறுசில மாநில அரசுகளின் சார்பிலே கலந்துகொண்டவர்கள், அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற செய்தி வெளிவந்திருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள் இந்தப் பங்குச் சந்தையிலே நுழைந்து, திடீரென அந்தப் பங்குச் சந்தையினுடைய நிலைமைகளை மாறறியும் விலைகளை ஏற்றியும், அதைச் சரிவடையச் செய்தும், பல்வேறு

[திரு. சி. கோவிந்தசாமி] [2007 ஜனவரி 25

மாயாஜால நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்ற இந்தச் சூழ்நிலையில், ஊழியர்களுடைய ஓய்வூதியப் பணத்தை அந்தப் பங்குச் சந்தையிலே முதலீடு செய்வது என்பது, ஊழியர்களுக்கு எந்த உத்தரவாதமும் இருக்காது என்கிற அச்சம் ஏற்பட்டு வருகிற காரணத்தினால், இப்பிரச்சினையிலே நம்முடைய தமிழக அரசினுடைய நிலை என்ன என்பதை நாளை மறுநாள் பதில் அளிக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவையில் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்பொழுது பத்திரிகைகளிலே பார்த்தால், விலைவாசி உயர்வு என்பது தொடர்ச்சியாக ஏறுமுகமாக இருக்கிறது என்கிற செய்தி தொடர்ந்து வந்தவண்ணம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, on line மூலமாக இப்பொழுது வணிக வர்த்தகம் நடைபெறுகிற காரணத்தினால், இந்தக் கடுமையான விலை உயர்வுக்கு அது ஒரு காரணமாக அமைகிறது என்று சொல்லப்படுகிறது. தேவைப்படுகிற மொத்த பருப்பினுடைய விலைக்கு அந்த on line-ல் பதிவு செய்தால், ஐந்து சதம் மட்டுமே, அதனுடைய மொத்தக் கட்டணத்தில் செலுத்தினால் போதும் என்கிற ஒரு நிலை அதிலே இருக்கிற காரணத்தினால், முன்பதிவு செய்து, பொருட்களுக்கு ஒரு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆகவே, அதனுடைய விளைவு, கடுமையான விலை உயர்வை செயற்கையாக உருவாக்குவதற்கான முயற்சிகள் நடைபெறுகிற காரணத்தினால், அதில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, மத்திய அரசோடு பேசி, விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் சிறு வியாபாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள்; பொது மக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல, இந்தக் கடுமையான விலையேற்றத்தால் நம்முடைய அரசு ரேஷன் கடைகளிலே இரண்டு ரூபாய்க்கு அரிசி வழங்குகிற அந்த நல்ல திட்டத்திலேகூட, நடைமுறையிலே அந்த 20 கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு வாங்கி, அதிலே 10 கிலோ அரிசியை ஐந்து ரூபாய் விலையிலே வெளியிலே விற்று, அந்தப் பணத்தை வைத்து மற்ற பொருட்கள் வாங்குகிற நிலைக்கு தற்பொழுது சாதாரண ஏழை எளிய மக்கள் தள்ளப்படுகிறார்கள். ஆகவே, ஏழை மக்கள்



2007 ஜனவரி 25] [திரு. சி. கோவிந்தசாமி]

பட்டினியிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு இந்த அரசாங்கம் இரண்டு ரூபாய்க்கு அரிசி வழங்குகிற அந்த நல்ல திட்டம்கூட நடைமுறையிலே இந்த விலையேற்றத்தின் காரணமாக இப்பொழுது அவர்கள் பழையபடி அரைப் பட்டினி என்கிற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆகவே, இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதிலே நமது அரசு கூடுதலான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Nursery and Primary Matriculation மேல்நிலைப் பள்ளிகள் தமிழ்நாட்டில் நிறைய செயல்படுகின்றன. அதில் குழந்தைகளை அழைத்து வருவதற்காகப் பயன்படுத்துகிற வாகனங்களுக்கு ஏற்கெனவே கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஒரு வாகனத்திற்கு ஆண்டொன்றுக்கு 2,000/- ரூபாய் என்று அதற்கான வரி, கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில், ஒரே சமயத்தில் 2,000/- ரூபாயாக இருந்த அந்தக் கட்டணம் 36,000/- ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஆகவே, அப்படி ஒரு கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலையில் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றார்கள். ஆக, இதுவரையில் அதைச் செலுத்தவில்லை. ஆகவே, இப்பொழுது அந்தத் தடை ஆணை காலாவதியாகிவிட்ட நிலையில், நம்முடைய அரசு அதன்மீது மேற்கொண்டு எந்த முடிவும் எடுக்காத நிலையில், கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் அந்த மூன்று வருடங்களுக்கான 36,000/- ரூபாயைக் கணக்கிட்டு மொத்தத் தொகையையும் செலுத்த வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். இல்லையென்றால் F.C. பண்ணமுடியாது என்று நிர்ப்பந்தப்படுத்துகிற ஒரு நிலையில், மாநில அரசு அதனைக் கருணையோடு மறுபரிசீலனை செய்ய வேண்டும். 2,000/- ரூபாயிலிருந்து 36,000/- ரூபாயாக உயர்த்துவது என்பது எந்தவிதத்திலும் நியாயமாக இருக்கமுடியாது. ஆகவே, அரசு அதைப் பரிசீலித்து, அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசுத் துறைகளிலே இருக்கக்கூடிய காலியிடங்கள் கடந்த ஐந்து ஆண்டுகாலமாக வேலை நியமனத் தடைச் சட்டத்தால் நிரப்பப்படாமல் இருந்தன. நம்முடைய அரசு, கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு இப்பொழுது அந்த வேலை நியமனத் தடைச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், அரசுத் துறைகளிலுள்ள காலியிடங்களெல்லாம் உடனடியாக நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், நடைமுறையிலே அதுபோன்ற பணிகள் இன்னும் முழுமையாக நடைபெறத் தொடங்காத நிலை இருக்கிறது.

[திரு. சி. கோவிந்தசாமி] [2007 ஜனவரி 25

அதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஏற்கெனவே திரு. சாமிநாதன் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்ட ஒரு குழு அரசாங்கத் துறைகளிலே 30 சதவீதம் இடங்களைக் குறைக்க வேண்டுமென்கிற ஒரு பரிந்துரை செய்திருக்கிற நிலையில், அதைப்பற்றி ஒரு முடிவெடுக்காமல் இந்தக் காலியிடங்கள் நிரப்பப்பட முடியாது என்கிற ஒரு நிலை இப்பொழுது பல துறைகளிலே நிலவுகிறது. ஆகவே, கருணை அடிப்படையில்கூட சிலருக்கு வேலை நியமனம் கிடைக்காத நிலை தொடருகிறது. ஆகவே, அதுபற்றி அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நெல்லை மாவட்டத்தில், Coca Cola நிறுவனம் அங்கே ஒரு கம்பெனி தொடங்குவதற்கும், தாமிரபரணியிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கும் கடந்த அ.தி.மு.க. அரசு அனுமதித்தது. அந்த ஆலை இப்பொழுது செயல்பட்டு வருகிறது. அந்த ஆலையிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரைப் பல கால்நடைகள் குடித்து இறந்துவிட்டதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, அரசு அதிலே உரிய முறையிலே தலையிட்டு அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அறிக்கையிலே ஆளுநருடைய உரையில் பல்வேறு வாரியங்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளிவந்திருக்கின்றன. உள்ளபடியே மிகவும் மகிழ்ச்சியானது. ஆகவே, இப்படி அறிவிக்கப்பட்டிருக்கிற அந்த வாரியங்கள் எல்லாம் முறையாகச் செயல்பட வேண்டுமானால், தொழிலாளர் நல வாரியம் என்கிற நிர்வாகம் இன்றுள்ள நிலையில், அதை முழுமையாக நிறைவேற்ற இயலாது. ஆகவே, அதற்கென்று ஒரு தனி நிர்வாக ஏற்பாட்டைச் செய்து, அந்த நல வாரியங்களுக்கு வருகிற மனுக்களுக்கு, உடனுக்குடன் அதிலே தலையிட்டுத் தீர்வு காண்பதற்கான ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னும்கூட நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆர்வமாக இருக்கிறார். ஆனால், தொழிலாளர் நலத் துறை இன்றைக்கு அது 'தொழிலாளர் நலத் துறையா அல்லது தொழிலாளர்களுக்கு பாதகமான துறையா' என்று பல்வேறு இடங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நேரம் இல்லை, ஆதாரத்தோடு பல செய்திகளை என்னாலே சொல்ல முடியும். ஆகவே, அந்தத் துறை உண்மையிலேயே அதன் பெயருக்கேற்ப தொழிலாளர் நலத் துறையாகச்



2007 ஜனவரி 25] [திரு. சி. கோவிந்தசாமி]

செயல்படவேண்டும்; கடந்த காலங்களில் சீர்கெட்டிருப்பதைச்சரி செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அரசையும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல டாஸ்மாக் ஊழியர்கள் பிரச்சினை. கடையை அரசாங்கமே நடத்துகிறது. ஆகவே, அந்தக் கடைகளிலே வேலைபார்க்கக்கூடிய ஊழியர்கள் இப்பொழுது நிரந்தரமற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணி நேரம் இல்லை; பணி நிரந்தரமும் இல்லை; சரியான ஊதியமும் இல்லை. அதுமட்டுமல்ல, காலை 8 மணிக்குத் தொடங்கி, இரவு 12 மணிவரை அந்த டாஸ்மாக் கடைகளை நடத்தலாம் என்கிற நிலையில் 16 மணி நேரம் அவர்கள் தினசரி பணியாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, மற்றவர்களுக்குப் பல சலுகைகளைச் செய்கிற இந்த அரசு அந்த டாஸ்மாக் ஊழியர்களையும் கருணையோடு பரிசீலித்து, அவர்களுக்கான பணி நிரந்தரம், பணி நேரம், ஊதிய உயர்வு போன்ற நடவடிக்கைகளை கருணையோடு கவனத்தில்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக, இதிலே ஏற்கெனவே திருப்பூரினுடைய சாயக் கழிவு நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக, கடந்த காலங்களில் நான் ஒருவனாக குரல் கொடுத்து வந்தேன். இன்றைக்கு எனக்குப் பெருமகிழ்ச்சி. பல்வேறு உறுப்பினர்கள் அதற்காகக் குரல் கொடுப்பது உண்மையிலேயே பெரும் ஆதரவாக இருக்கிறது. காரணம், நான் பலமுறை சொல்வேன்; திருப்பூரிலே இருக்கிற நிலைமை திருப்பூர் தொகுதிக்கானதல்ல, தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலேயிருந்து வந்து அங்கே வாழ்கிற மக்களுடைய பிரச்சினை. நான் பலமுறை, ஒவ்வொரு கோரிக்கைக்கும் குரல் கொடுக்கிறபோதெல்லாம் மற்ற சட்டமன்றத் தொகுதிகளோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது; திருப்பூருக்குச் செய்கிற எந்த உதவியாக இருந்தாலும், அது தமிழகத்திற்குச் செய்கிற உதவி. தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கின்ற நடவடிக்கை என்ற முறையில் வலியுறுத்தினேன். இன்றைக்குப் பல்வேறு உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கையை இங்கே வலியுறுத்தியது உண்மையிலேயே பெருமைக்குரியது. அந்தவகையிலே சாயக் கழிவுநீர்ப் பிரச்சினையினை, இரண்டு வகையாகப் பார்க்க வேண்டும். ஒன்று, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கம் அளித்ததைப்போல, நீதிமன்றத்தில் இப்போது இருக்கிற பிரச்சினை.

ஆகவே, அதை எப்படித் தீர்ப்பது? அது ஓர் இடைக்காலப் பிரச்சினை. ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு என்ன என்று இரண்டு முனைகளிலிருந்தும் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உலக ஜவுளி உற்பத்தியில் இந்தியாதான் முதல் இடத்தில் இருப்பதாக சில புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. முதல் இடத்தில் இருக்கிற இந்தியாவில், மாநிலங்களில் தமிழகம்தான் இன்றைக்கு ஜவுளி உற்பத்தியிலே முதல் இடத்திலே இருக்கிறது. அந்த ஜவுளித் தொழில் இப்பொழுது சாயக் கழிவுநீர்ப் பிரச்சினையின் காரணமாக, ஒரு கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கிறது. ஆகவே, அரசு இதில் தலையிட வேண்டும்.

உதாரணமாக, கடந்த மாதம் 22 ஆம் தேதி உயர் நீதிமன்றம் அளித்திருக்கக்கூடிய தீர்ப்பு, அந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு ஏழு மாதங்கள் அவகாசம் கொடுத்துவிட்டு, அதிலேயிருந்து வெளியேறுகிற சாயத் தண்ணீருக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு லிட்டருக்கு 6 பைசா; அடுத்த இரண்டு மாதங்களுக்கு 8 பைசா; அதற்கு அடுத்த மாதங்களுக்கு 10 பைசா என்று கட்டணங்களை இப்பொழுது அபராதமாக விதித்திருக்கிறார்கள். சற்றேறக்குறைய 10 கோடியிலிருந்து 12 கோடி லிட்டர் தண்ணீர் தினசரி வெளியேறுகிறது. ஆகவே, அதற்கு இந்த 7 மாத காலங்களில் சற்றேக்குறைய 130 கோடியிலிருந்து 150 கோடி ரூபாய் அபராதமாகச் செலுத்தவேண்டிய கட்டாய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நம்முடைய அருமை காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் அடிக்கடி விவசாயிகள், விவசாயிகளென்று சொல்வார். அந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காகவும், ஒரத்துபாளையம் அணையைச் சுத்தப்படுத்துவதற்காகவும், இந்த 6 மாத காலத்திலே 44 கோடி ரூபாய் கட்ட வேண்டுமென்றும் நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒரு பகுதி கட்டி இருக்கிறார்கள். மீதி 44 கோடி. ஆகவே, இந்த 7 மாதத்தில் சற்றேறக்குறைய 200 கோடி ரூபாயை அந்தச் சாய ஆலை உரிமையாளர்கள் செலுத்தவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவேதான், கடந்த ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து இவ்வளவு அபராதத் தொகைகளைக் கட்டி ஆலையை இயக்க முடியாது என்ற நிலையில் நிறுத்தினார்கள்.

நம்முடைய அரசாங்கத்தினுடைய தலையீட்டின்பேரில், முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில்,





தொழிற்சாலைகள் வேலையை நிறுத்தியதைக் கைவிட்டு வேலையைத் தொடங்குங்கள்; மறுபரிசீலனை மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுங்கள்; அதற்கு அரசு வழக்கறிஞர்மூலம் என்ன உதவியைச் செய்ய முடியுமோ அதைச் செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். நன்றி. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த இடைக்கால ஏற்பாடு என்ற முறையில், அபராதத் தொகையிலே, குறிப்பாக இந்த 44 கோடி, விவசாயிகளுக்கான நஷ்டஈடு, அந்த ஒரத்துபாளையம் அணை மற்றும் நொய்யலாற்றைச் சுத்தப்படுத்துவது; அந்தப் பளுவையாவது அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் இந்தத் தொழிலுக்கு ஓரளவுக்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே, அதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நீதிமன்றத்தில் மறுபரிசீலனை மனு தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஏதாவது சலுகை கிடைத்தால் இந்தத் தொழில் நிற்காமல் நடப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசு இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

இதற்கு நிரந்தரமான தீர்வு என்பது, ஏற்கெனவே நான் இங்கே விவாதித்ததைப்போல, அதாவது சாயத்தினுடைய கெமிக்கல்களையெல்லாம் சுத்தப்படுத்தி எடுத்துவிட்டு, அந்த உப்புத் தன்மை வாய்ந்த அந்தத் தண்ணீரை மட்டும் கடலுக்குக் கொண்டுசெல்ல வேண்டும். அதிலே சில நேரங்களில் தவறுகள் நிகழ்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான், நான் என்ன வலியுறுத்த விரும்புகிறேன் என்றால், அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால், தனியார்கள் இலாப நோக்கத்திலே தொழில் நடத்துகிறவர்கள். இன்னும் சொல்லப்போனால், நம் Pollution Control Board அதிகாரிகளே, எனக்குத் தெரியும், பெயர் உட்பட என்னாலே சொல்ல முடியும். ஆகவே, அங்கே சென்று நீங்கள் எதற்கு சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள், அப்படியே பிடுங்கி விடுங்கள். எனக்கு ஒரு 5,000 ரூபாய் கொடுங்கள் என்று சொல்லி பணத்தைப் பெற்றுக்கொண்டு, சுத்தப்படுத்துகிற, ஆலைகளிலே இருப்பவர்களைக்கூட இந்தத் தவறான சிந்தனைக்குத் தூண்டுகிறார்கள். சாராயம் காய்ச்சுபவன் நிறுத்திவிட்டால், போலீஸ்காரர் அவனிடம்போய் கள்ளச்சாராயம் காய்ச்சு என்று வலியுறுத்துகிற மாதிரி இன்றைக்கு அதிகாரிகள் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். நாளைக்கு கடலுக்குக்

கொண்டுபோய்விடுகிற நிலைமை வந்தாலும், இப்படிச் சுத்தப்படுத்தாமல் கடலில் விட்டால், ஒட்டுமொத்த இந்தத் திட்டமே இரத்து ஆகக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே, நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும். 25 இலட்சம் மக்கள் இதிலே நேரடியாகவும், மறைமுகமாகவும். சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் திருப்பூர், ஈரோடு, பெருந்துறை, கரூர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடியவர்கள். ஆகவே, இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும். வேலைவாய்ப்பைப் பாதுகாக்க வேண்டும். அதேநேரத்தில் நொய்யலையும், விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டும். ஆகவே, இதற்கெல்லாம் ஒரு தீர்வு என்ற வகையிலே மாநில அரசாங்கம் இதற்கான பொறுப்பெடுத்து, மத்திய அரசினுடைய நிதியுதவியோடு, தொழிற்சாலை உரிமையாளர்களின் பங்களிப்போடு, இந்த மூன்றுபேரும் சேர்ந்து நிதிப் பங்களிப்போடு ஒரு நிரந்தரமான தீர்வை அரசாங்கம் தன்னுடைய சொந்தப் பொறுப்பில், அந்தப் பணியைச் செய்தால்தான் தொழிலையும் காப்பாற்ற முடியும், விவசாயத்தையும் இந்தக் கழிவுநீர் பாதிக்காமல் முழுமையாகத் தடுக்க முடியும் என்பதை நான் அழுத்தமாக இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலமுறை இந்தத் தொழிலுக்கு நெருக்கடி வந்தபோது உதவி செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த முறையும் அந்த நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக இந்தத் தொழிலைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும்.

நான் இந்த அறிக்கையிலே, கவர்னருடைய உரையிலே பார்த்தேன். கிட்டத்தட்ட 2,700 கோடி ரூபாயில் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய புதிய தொழிற்சாலைகள் வந்திருப்பதைக் குறிப்பிட்டார்கள். மகிழ்ச்சி. ஆனால், ஒரு 700 கோடியோ, 800 கோடியோ செலவு செய்தால் கிட்டத்தட்ட 25 இலட்சம் மக்களினுடைய வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதிலே பொறுப்பேற்று திருப்பூர் ஓர் ஏற்றுமதி வளாகமாக இருக்கிற காரணத்தினால், மத்திய அரசாங்கத்திடத்திலே அதற்கான பாதி உதவியைப் பெற்று மாநில அரசும், உற்பத்தியாளர்களும் இணைந்து ஒரு சிறந்த திட்டம்—நான் கடலுக்கே விடவேண்டும் என்றுகூடச் சொல்லவில்லை—கடலுக்கு விடுவது சிறந்ததாக இருந்தால் அதைச் செய்யலாம்; அல்லது வேறுவிதமான தொழில்நுட்பம் இருந்தால் அதை அரசு ஆய்வு செய்து, ஓர் உயர் தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவை அமைத்து, எது சாத்தியம் என்பதை ஆய்வு செய்து, சாத்தியமான அந்தப் பணியை அரசே





மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஜவுளித் தொழில். சாதாரணமாக ஏழை எளிய, கிராமப்புறக் குடும்பங்களைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய தொழில் ஜவுளித் தொழில். ஏனென்றால், படித்த, பட்டம் படித்த, பட்டமேற்படிப்புப் படித்தவர்களுக்கு உயர்மட்டத்திலே சில வேலைகள் கிடைக்கலாம். படிப்பறிவே இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய தொழிலாக இந்த ஜவுளித் தொழில் இருக்கிறது. ஆகவே, இதற்கு கொஞ்சம் செலவு ஆனாலும், அரசு இதற்கு முன்னுரிமைக் கொடுத்து ஜவுளித் தொழிலைப் பாதுகாக்க வேண்டும். நான் இன்னொன்றையும் அரசுக்கு கவனப்படுத்த விரும்புகிறேன். இப்பொழுது பக்கத்திலே இருக்கிற ஆந்திரா போன்ற மாநிலங்கள், இந்த ஜவுளித் தொழில் அங்கே வந்தால், அவர்களுக்கு மின்சாரக் கட்டணம் குறைவாகக் கொடுத்து நாங்கள் தொழிலை வரவேற்கிறோம்; வேறு பல சலுகைகளை வழங்குகிறோம் என்று பல அண்டை மாநிலங்கள் நம்முடைய தமிழகத்திலே தொழில் நடத்துகின்றவர்களை அழைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டின் எல்லையிலேயே அதை உருவாக்க முயற்சிக்கிறார்கள். ஆகவே, ஜவுளித் தொழிலைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலே 18 கூட்டுறவு நூற்பாலைகள்; 13 பூட்டிக் கிடக்கின்றன. அதேமாதிரி, அரியூர். இந்த 13 நூற்பாலைகள் பூட்டி இருக்கிறபோது, வேலூர் மாவட்டத்திலே இருக்கிற அரியூர் அரசு கூட்டுறவு நூற்பாலை மட்டும் சமீபத்தில் ஏலம் விடப்பட்டது. மிகக் குறைந்த விலையிலே அந்த ஏலம் விடப்பட்டது. அதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் எல்லாம் இணைந்து குரல் கொடுத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்பேரில், இன்றைக்கு அது இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது, வரவேற்கிறோம். அதற்காக நன்றி தெரிவிக்கிறோம். இப்பொழுது பஞ்சாலைகள் இலாபகரமாக இயங்குகின்ற ஒரு நல்ல காலக்கட்டம். அந்த ஆலைகள், அரியூர் கூட்டுறவு நூற்பாலை உட்பட, தமிழகத்திலே பூட்டிக் கிடக்கிற கூட்டுறவு நூற்பாலைகளையெல்லாம் திறந்து, அவற்றை இயக்கி, அந்த ஆலைகளை நம்பியிருக்கிற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள், வேலையில்லாமல் இருக்கிற அவர்களுக்கு, வேலை கொடுப்பதற்கு, அந்தக் கிராமப்புற ஏழை மக்களுக்கு வாழ்வளிப்பதற்கு, அரசாங்கம்

அதற்கான நிதி உதவி அளித்து, அந்த ஆலைகளைத் திறந்து நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஏழைகளுக்கு பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிற இந்த அரசு, இந்த ஏழை உழைப்பாளி மக்களின் வாழ்வைப் பாதுகாக்க, இந்தக் கூட்டுறவு ஆலைகளைத் திறந்து, அவற்றை மீண்டும் நடத்தி, வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். ஒட்டுமொத்தமாக திருப்பூர், கரூர், ஈரோடு போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய சாயத் தொழிலையும், அதைச் சார்ந்திருக்கிற பின்னலாடை உள்ளிட்ட தொழில்களையும் பாதுகாத்து, பல இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வைப் பாதுகாக்க, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க, அரசு முன்னுரிமை கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கின்றேன்.

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கடைசியாக பேச வாய்ப்புத் தந்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்களின் பேருரை, சமூக நீதி மற்றும் மாநில உரிமைகளுக்கான ஒரு போர்க் குரலாக அமைந்திருக்கிறது. சமூக நீதியைப் பாதுகாப்பதிலும், மாநில உரிமைகளை மீட்டெடுப்பதிலும், ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களின் நலன்களை மேம்படுத்துவதிலும் மிகவும் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு, கூடுதல் அக்கறை கொண்டு இந்த உரையை ஏற்பாடு செய்திருக்கிறது. உழைக்கும் மக்களின் நலன்களை மேம்படுத்துவதிலும், ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறவும் நம்முடைய ஆளுநர் உரை சிறப்பாக அமைநதிருக்கிறது.

சமூக நீதி தொடர்பான விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதைத் தடுக்கும் வகையிலே, இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் புதியதாக எழுத வேண்டுமென்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 100 முறைக்கு மேல் அரசமைப்புச்





சட்டத்தைத் திருத்தம் செய்திருந்தாலும், பல நாடுகளில் அரசமைப்புச் சட்டங்களை மாற்றி எழுதியிருந்தாலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தை எழுதிய வல்லுநர் பெருமக்கள், மேதைகள், குறிப்பாக புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய இந்த அரசமைப்புச் சட்டத்தை மாற்றி எழுதுவது என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், இந்தச் சட்டத்தை எழுதியவர்கள் எல்லாம், சுதந்திரப் போராட்ட வீரர்கள், மாமேதைகள். இப்போதும் சட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட மாமேதைகள் இருக்கிறார்களா என்பதைக் காண்பது அரிது. இது ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலே ஒரு வருத்தத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. இந்த அரசமைப்புச் சட்டத்தை மாற்றி எழுதுவது என்பது ஒரு துணிச்சலான முடிவாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சியாளர் அம்பேத்கர் எழுதிய சட்டத்தை மாற்றி எழுதுகிறார்களே என்று, அவர்கள் எப்படிப் பார்ப்பார்கள் என்பதைக் கனிவுடன் நம்முடைய அரசு எண்ணிப்பார்க்க வேண்டும்.

பெண்கள் மற்றும் சிறுபான்மையினர்களுக்கான இட ஒதுக்கீட்டை வென்றெடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் நம்முடைய அரசு, சமூக நீதியின்மீது எப்படி அக்கறை கொண்டுள்ளது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு மேற்கோள் காட்டியிருப்பதை வரவேற்கிறோம். மனிதக் கழிவை மனிதன் சுமக்கும் ஒரு நிலை இவ்வளவு ஆண்டுகாலமாக தமிழகத்திலே இருந்து வந்தது; ஏன், இந்தியாவிலும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஓர் இழிவை அகற்றும் வகையிலே நம்முடைய முத்தமிழ் அறிஞர் தமிழக முதலமைச்சர் அவர்கள், மனிதக் கழிவை மனிதனே சுமக்கும் அவல நிலையைப் போக்க வேண்டுமென்பதற்காக, ஏறக்குறைய 59 கோடி ரூபாயை இந்த மக்களுக்காக ஒதுக்கியிருக்கிறார். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள்தான் இந்த வேலைகளிலே ஈடுபட்டு வருகிறார்கள். ஆக, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக, முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

அதேபோன்று, 6 மாதங்களில் அனைத்து மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா என்று ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத் தகுந்தது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பு வந்து இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நாங்களெல்லாம் பொதுக் கூட்டத்திலே பேசும்போது,

'நண்டுகளுக்கு வளை இருக்கிறது, குருவிகளுக்குக் கூடு இருக்கிறது; ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு காணி வீட்டுமனை இல்லையே' என்று வருத்தப்பட்டுப் பேசிய காலங்கள் உண்டு. ஆனால், இப்போது நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கும், கண்டிப்பாக வீட்டுமனை இருக்கிறது என்ற ஓர் அறிவிப்பு மக்களிடையே மிகப் பெரிய ஒரு வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

*பிற்பகல் 1–25*

அதுமட்டுமல்லாமல், வீட்டுப் பணியாளர்கள், ஊனமுற்றோர், மீனவர்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்களுக்காக தனி நல வாரியம் அமைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல வாரியங்கள், அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலே ஒரு மிகப் பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

ஈழத் தமிழர்களின் இன்னல் தீர, இந்திய அரசு தலையிட வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டியது மிகுந்த ஆறுதலாக இருக்கிறது.

விவசாயப் பெருங்குடி மக்களின் தகுதியை உயர்த்த பல்வேறு நலத் திட்டங்களை மேற்கொண்டு முனைப்பு காட்டியுள்ள நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சேவை வரியை வசூலிக்கும் உரிமை மாநில அரசுக்கு வேண்டுமென்று குரல் எழுப்பியிருப்பது போற்றுதலுக்குரியது.

இவை அனைத்தையும் வரவேற்றுப் பாராட்டும் அதேவேளையிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏற்கெனவே காலியான பணியிடங்களில் அவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை மீட்டுத் தரவேண்டும். ஏற்கெனவே backlog vacancies என்று சொல்கின்றார்களே, அவை நிரப்பப்படாமல் இருக்கின்றன. இப்பொழுது கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியப் பெருமக்களை ஆயிரக்கணக்கில் நம்முடைய அரசு எடுக்கப் போகிறது. அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன உரிமையோ, அவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் என்ன இயற்றியிருக்கிறார்களோ, அந்த உரிமைகளை நம்முடைய அரசு நிறைவேற்றித் தரவேண்டும்.

மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள் இந்த ஆளுநர் உரையை வரவேற்பார்கள். அரசியல் காழ்ப்புணர்வு கண்ணாடி





அணிந்திருப்பவர்கள் புழுதி வாரித் தூற்றுவார்கள். ஆனாலும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நம்முடைய அரசை மிக வேகமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு காலத்திலே அமைச்சர்களைப் பார்ப்பதற்கு மக்கள் வருவார்கள். ஆனால், நம்முடைய அரசிலே, மக்களைப் பார்ப்பதற்கு அமைச்சர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதி அவர்கள் எங்கள் கிராமப் பகுதிக்குச் சென்று, இரவிலே மக்களைச் சந்தித்து குறை கேட்ட காட்சிகளையெல்லாம் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். அனைத்து கிராமங்களுக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். ஒரு காலத்திலே கோட்டையிலே இருந்து பொத்தானை அழுத்தினால், கல்வெட்டுகள் திறக்கப்படும். ஆனால், நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் பட்டி தொட்டிக்கெல்லாம் சென்று, குறிப்பாக வேலூர் மாவட்டத்திலே அனைத்து கிராமங்களுக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்திருப்பது பாராட்டுக்குரியது.

சேது சமுத்திரத் திட்டம்; தமிழ் மொழியை செம்மொழியாக்குதல் போன்றவை மூலம் உலக அரங்கிலே நம்முடைய முதல்வரின் பெயர் ஓங்கி நின்றுகொண்டிருக்கிறது. கோவில் நிலங்களில் மக்கள் இருக்கும் இடங்களை, அங்கே வசிக்கும் மக்களுக்கே சொந்தமாக்க நாம் சட்டம் இயற்றவேண்டும். என்னுடைய தொகுதி, திட்டக்குடி மருத்துவமனையிலே ஆறு, ஏழு மாதங்களாக பணிபுரியும் பணியாளர்களுக்கு இதுவரை சம்பளம் கொடுக்கப்படவில்லை. சுகாதாரத் துறைக்கு ஒளியாக இருக்கும் அந்த ஏழை எளிய மக்களுக்கு, சம்பளம் இல்லாமல் வேலை செய்துகொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கு சம்பளத் தொகையை அளிக்கவேண்டும்.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம் உலக வரலாற்றிலே ஒரு கரும்புள்ளியாக இருந்த அந்தப் பகுதிகளில், இருதரப்பு மக்களையும் இணைத்து, அண்ணன் தம்பிகளாக இன்று பழக வைத்த பெருமை நம்முடைய முத்தமிழறிஞர் முதலமைச்சரையே சாரும். நாங்களெல்லாம் அந்தப் பகுதியிலே கடந்த 10, 12 வருடங்களாக விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் போராடி வந்தோம். அங்கே ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும்; சமூக நீதிக்காகப் போராடவேண்டுமென்று, தேர்தலிலே பங்கெடுக்கச் சென்ற

எங்களை, மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும் அழைத்துச் சென்றார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே இருந்த மக்களெல்லாம் செருப்பை வாரி வீசி அடித்து விரட்டியிருந்தார்கள். காவல் துறையினரிடம் சென்று முதல் தகவல் அறிக்கை கொடுக்கவேண்டுமென்று புகார் கொடுத்தோம். ஆனால், மேலிடத்து உத்தரவு, முதல் தகவல் அறிக்கையை நாங்கள் அளிக்க முடியாது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு கற்கால மக்கள்போல் வசித்த அந்தப் பகுதியிலே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், தமிழ் மக்களாக நீங்கள் வாழுங்கள், தலை நிமிர்ந்து நில்லுங்கள் என்று அங்கே சமூக நீதியை நிலைநாட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக, சிறையில் இருப்பவர்களையெல்லாம், 10 வருடங்களுக்கு மேல் உள்ள சிறைவாசிகளை விடுதலை செய்யவேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கோரிக்கை வைத்தது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும் உத்தரவிட்டார்கள். ஆனால், அங்கே என்ன சிக்கல் என்றால், விடுப்பில் சென்று சிறைக்குத் தாமதமாகச் சென்றவர்களை மன்னித்து விடுதலை செய்ய முடியாது என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு இதைக் கனிவுடன் கவனித்து அவர்களை விடுதலை செய்ய ஆணையிடவேண்டும்.

பல்கலைக்கழகங்களில் சிண்டிகேட் உறுப்பினர்களை செனட் உறுப்பினர்களை நம்முடைய அரசு நியமித்து வருகிறது. ஆனால், இதுவரை அங்கே ஒதுக்கீட்டின் அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் உரிய இடமளிக்கப்படவில்லை...

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கு. செல்வம்:** சிண்டிகேட், செனட் உறுப்பினர்களை நியமிக்கவில்லை என்று அறிந்து வேதனைப்படுகிறோம். உடனே பல்கலைக்கழகங்களில் உள்ள சிண்டிகேட், செனட், அந்த உறுப்பினர்களை நியமிக்கும்போது பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அவர்களுக்கு உரிய உரிமை அளித்து, அவர்களுக்கு உரிய இடமளிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே, பெண்ணாடம் பகுதியிலே ஒரு நெடுஞ்சாலை இருக்கிறது. அந்த நெடுஞ்சாலையிலே தொடர் வண்டித் துறையைச் சார்ந்த ஆள் இல்லாத ஒரு கேட் இருக்கிறது. 5, 6 வருடங்களுக்கு முன்பு மிகப்பெரிய விபத்து நடந்து 4 பேர்கள் உயிர் இழந்து இருக்கிறார்கள். நான் தொடர் வண்டித் துறை அமைச்சரைச் சந்தித்து பேசும்போது, நீங்கள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட விபத்துகள் இனி வருங்காலங்களில் நடக்காமல் இருக்க அங்கே மேம்பாலமோ, சுரங்கப் பாதையோ கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக அங்கே வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களும் அங்கே மீனவர்களாக அந்தத் தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக ஒரு சில பகுதிகளிலே, தாழ்த்தப்பட்ட மீனவர்களுக்கு கடந்த ஆட்சியிலே வீடு கொடுக்க முடியாது என்று அப்போது இருந்த அமைச்சர் கூறி இருக்கிறார். அந்த நிலை இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கிறது. நமது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக தாழ்த்தப்பட்ட மீனவர்களுக்கு, சுனாமி பகுதியிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பின்னடைவில் பூர்த்தி செய்ய இயலாத காலி இடங்கள் தமிழகத்திலே அனைத்துத் துறைகளிலும் இருக்கின்றன. ஏற்கெனவே நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அரசு இருக்கும்போது உயர் நீதிமன்றத்திலே ஒரு affidavit தாக்கல் செய்திருக்கிறார்கள். நாங்கள் இத்தனை வருடங்களுக்குள் நிரப்பப்படாத காலியிடங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய இடங்களை அனைத்துத் துறைகளிலும் உடனடியாக நிரப்புவோம் என்று. அதை வேகமாக, துரிதமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே சாதி மறுப்புத் திருமணத்தைச் செய்த ஓர் இளைஞன் படுகொலை செய்யப்பட்டான். அது நம்முடைய முதலமைச்சரை அணுகி சி.பி.சி.ஐ.டி.-க்கு மாற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தாய் தந்தை எல்லாம் என்ன ஆனது விசாரணை என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உடனே காவல் துறை அதில் அந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, வெலிங்டன் ஏரிக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்குவதாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய முன்தினம் அறிவிப்புச் செய்தார்கள். அந்த 15 கோடி ரூபாய் அறிவிப்பிற்கு என்னுடைய தொகுதி மக்கள் மனமார, நெஞ்சார வாழ்த்துத் தெரிவித்தார்கள், வரவேற்றார்கள். அதை மார்ச், ஏப்ரல் மாதத்திற்குள் கட்டி முடிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், அங்கே என்ன நிலை என்றால், அதிகாரிகள் எல்லாம் வருகின்ற நிதி ஆண்டிலே அது வராது, அடுத்த ஆண்டுக்கு, அடுத்த ஆண்டுதான் இதைச் செய்வோம் என்று கிராம மக்களிடையே, அந்தப் பகுதி மக்களிடையே ஒரு கருத்தை நேற்று தெரிவித்ததாக என்னுடைய செவிக்கு வந்திருக்கிறது. இதை உடனே, நான்கு ஐந்து மாதங்களுக்குள் செய்து முடிக்கவேண்டும். 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அந்த ஏரியை நம்பி இருக்கின்றன. அந்த மக்களுக்கு வாழ்வுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதோடு டெல்டா பகுதியிலே காவல் துறையினர், குறிப்பாக தஞ்சைப் பகுதியிலே சாதிய ரீதியாகப் பணியாற்றுகிறார்கள் என்ற ஒரு புகார் எழுந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களைப் பிடித்துக்கொண்டுபோய் இரவிலே விசாரிப்பது, அவர்களைத் துன்புறுத்துவது என்று. குறிப்பாக இப்படிப்பட்ட செயலில் யார் ஈடுபடுகிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினரை, எழுத்தாளர் தோழர் ரவிக்குமாரைத் தாக்கினார்கள். இந்த அரசிற்கு எந்தவித கெட்ட பெயரும் ஏற்படக்கூடாது என்று அங்கே நாங்கள் அடி வாங்கிக்கொண்டு அமைதியாக வந்தோம். நம்முடைய முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் அவர்கள், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே ஒரு விசாரணைக் குழு அமைத்தார். அவர்களுக்கு நான் மனமார நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஏற்கெனவே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. எழுத்துமூலமாக அமைச்சர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டு, என்னுடைய உரையை இதோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, time இல்லை.





பிற்பகல் 1–35

# 5. அரசினர் தீர்மானம்

## விதி 32—ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 27–1–2007 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 27–1–2007 சனிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

27–1–2007 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 27–1–2007 (சனிக்கிழமை) அன்று காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2007 ஜனவரி 25

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*8.* (i) *1-10-2006* ஆம் நாளன்று முதல் *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) (தமிழ்நாடு சட்டம் *27/2006*) செயலுக்கு வரும் என அறிவித்தும் (ii) துணை வணிக வரிகள் ஆணையாளரை பதவி பெயர் கொண்ட அதிகாரியாக நியமித்து, அவர் துணை வணிக வரிகள் ஆணையாளர் என்கிற வகையில் அதிகாரம் செலுத்தும் அதிகார வரம்புப் பகுதியில் அவருடைய அதிகாரத்தை செலுத்துவார் என அறிவித்தும் மற்றும் (iii) வணிக வரிகள் ஆணையாளரை அதிகாரம் பெற்ற அலுவலராக நியமித்தது குறித்தும், *27-9-2006* ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *115* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) (தமிழ்நாடு சட்டம் *27/2006*) *15 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*9.* *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) விதிகள் இயற்றியது குறித்து *27-9-2006* ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *116* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) (தமிழ்நாடு சட்டம் *27/2006*) *15 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*27. 2005-2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

*28.* பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(2006-2007)*

*29.* பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை. *(2006-2007)*

*30.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. *(2006-2007)*



2007 ஜனவரி 25]

*31.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. *(2006-2007)*

*32.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. *(2006-2007)*

*33.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. *(2006-2007)*

*34.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. *(2006-2007)*

*35.* மனுக்கள் குழுவின் ஒன்றாவது அறிக்கை. *(2006-2007)*

*36.* மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. *(2006-2007)*

*37.* மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. *(2006-2007)*

*38.* மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கை. *(2006-2007)*

*39.* மனுக்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. *(2006-2007)*

*40.* மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கை. *(2006-2007)*

227484

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.